

இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் மாத நாவல்
க்ரைம் நாவல்
ரூ.10 அக்டோபர்-2009 251
23-வது ஜன்னல்
ராஜேஷ்குமார்

# ஹைக்கூ போட்டி

க்ரைம் நாவல் - 250 ஆவது இதழில் அறிவிக்கப்பட்டிருந்த 'ஹைக் கூ' போட்டி 1-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவை.

## முதல் பரிசு

கத்தி எடுத்த சாதிச் சண்டையில்
குத்து பட்டவர்க்கும் மற்றவர்க்கும்
ரத்தம் மட்டும் சிவப்புதான்.

- மலை அரசன், அருகந்தம்பூண்டி.

## ஆறுதல் பரிசுகள்

1. கத்தி கத்தி பாடி
குத்து ஆட்டம் போட்டு
ரத்தம் சிந்தி நடித்தும் ஓடவில்லை படம்!

- முத்து ஆனந்த், வேலூர்.

2. கத்தி பாராமல்
குத்து வாங்காமல்
ரத்தம் சிந்துகிறது ஓசோன்!

- மா.புஷ்பராஜ், தருமபுரி.

# ஹைக்கூ போட்டி - 2

பெண் ..............................................

பொன் ..............................................

ஆசை ..............................................

விடுபட்ட இடங்களில் வார்த்தைகள் போட்டு ஹைக் கூ கவிதை ஆக்குங்கள். பரிசு உண்டு!

போட்டிக் கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**ஹைக்கூ போட்டி**

**க்ரைம் நாவல்,**

**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**

352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 5.

# கோயமுத்தூரிலிருநது செல்போன் சிணுங்குகிறது...

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!

வணக்கம்! தீபாவளி வந்து போய்விட்டது. இனி அடுத்ததாய் பக்ரீத், கார்த்திகை தீபம், கிறிஸ்துமஸ், பொங்கல் என்று பண்டிகைகள் க்யூவில் நின்றிருப்பது இப்போதே தெரிகிறது. மக்கள் தங்களுடைய பிரச்னைகளையும் துன்பங்களையும் அந்த ஒரு நாளாவது மறந்து போய் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே பண்டிகைகள் உருவாயின. பண்டிகை நாட்களில் காணாமல் போகும் மக்களின் துயரங்கள் பண்டிகை முடிந்த மறுநாளே எட்டிப் பார்த்து - கட்டிப் பிடித்துக் கொள்ளும் போது, வலியும் வேதனையும் தொடர்கிறது. இந்த வலியையும் வேதனையையும் நிரந்தரமாய் விரட்டி வருடத்தின் 365 நாட்களையும் நம்மால் பண்டிகை நாட்களாக மாற்ற முடியாதா? என்ற கேள்விக்கு யாராவது ஒருத்தர் ''முடியும்! அதற்கு ஒரு வழி இருக்கிறது'' என்று சொன்னால் நாம் சந்தோப்படுவோமா... மாட்டோமா?

கண்டிப்பாய் சந்தோஷப்படுவோம். யார் அந்த ஒருத்தர் என்று நீங்கள் என்னை ஆர்வமாய் கேட்பதும் புரிகிறது.

அவர் வேறு யாரும் அல்ல.

வேதாத்திரி மகரிஷி அவர்கள்தான்!

அவர் சொல்லும் வழிதான் என்ன...? கோபம் கொள்ளாமல் வாழ்க்கையை நடத்துவதுதான். 'ஒரு மனிதனுக்கு இருக்கக்கூடாத குணங்களில் கோபமும் ஒன்று. எந்த ஒரு மனிதன் சகிப்புத் தன்மையும், கோபம் இல்லாத தன்மையும் பெற்று இருக்கிறானோ அவனுடைய வாழ்க்கையில் வருஷம் முழுவதும் வசந்தம்தான். ஒரு மனிதனுக்கு இருக்கக்கூடாத ஆறு குணங்கள் எது எது என்று பட்டியல் போட்டால் அந்தப் பட்டியலின் வரிசை இப்படி இருக்கிறது 1. ஆசை, 2. கோபம், 3. களவு, 4. பொறாமை, 5. காமம், 6. பொய். இந்த ஆறுகுணங்களில் கோபம் இரண்டாவது இடத்தைப் பிடித்து வைத்துக்கொண்டு ஒரு மனிதனைப் பாடாய்ப்படுத்தி



வருகின்றது. மனிதனை சீரழிப்பதோடு குடும்பத்தின் இனிமையைக் கெடுப்பதும், சமுதாயத்தில் சண்டை சச்சரவுகளை வளர்ப்பதும் இந்த கோபம்தான். இது துன்பத்தை உண்டாக்குவதோடு தொடர்ந்து அதை நீடிக்கச் செய்யும் ஒரு பகை உணர்வு இது. மனிதனிடம் உள்ள தீய குணங்கள் அனைத்திலும் இதுதான் மிகக் கொடியது. கோபம் கொள்வதும் தற்கொலை செய்து கொள்வதும் ஏறக்குறைய ஒன்றுதான். நியாயமான காரணங்களுக்காகக் கோபப்படுவது தவறு இல்லை என்று சொல்வார்கள். "நாம் சோற்றுக்கு உப்பு போட்டுத்தானே சாப்பிடுகிறோம், இதற்குக்கூட கோபப்படாவிட்டால் எப்படி" என்று ஒரு நியாயத்தையும் கற்பிப்பார்கள். முதலில் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு கோபம் வந்தாலும் பிறகு பழக்கத்தின் காரணமாக சிறிது சிறிதாய் காரணம் இல்லாமலே கூட கோபம் வரும். கோபம் வந்தபின் அதன் விளைவுகளை எண்ணி வருந்தினாலும் அதனால் ஒரு பயனும் இல்லாமல் போகும்.

நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிறர் நம் மீது கோபம் கொள்ளும் போது நம் மனம் எவ்வாறு வருந்துகிறதோ அது போன்றுதான் பிறர் மேல் நாம் கொள்ளும் கோபம் அவர்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கும். நம் வாழ்வில் எப்போதுமே பிறரிடமிருந்து ஏதேனும் ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அத்தகைய எதிர்பார்ப்பில் 'நம் கணக்கு சரியா?' என்று பார்த்தால் பெரும்பாலும் அது தவறாகவே இருக்கும். அதைப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை இருந்தாலும் கோபப்பட்டால் காரியம் கெட்டுவிடும். கோபத்தினால் அதை நீங்கள் பெற முடியாது. ஆனால் அமைதியான முறையில், அன்பான முறையில் பேசிப் பார்த்தால் அதை உங்களால் பெற முடியும்.

இன்னும் ஒரு வகையில் கோபத்தைப் பற்றி சொல்லப்போனால் அது ஒரு சங்கிலி போன்றது.

இன்னும் ஒருபடி மேல் போய் அதை தொற்று நோய் என்றும் சொல்லலாம். ஒரு வீட்டில் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு கோபப்படாமல் வாழ்க்கை நடத்தினால் அந்த வீட்டில் இன்பம் பொங்கும். உடல் ஆரோக்கியமும் நல்ல முறையில் இருக்கும். ஒரு மனைவிதான் குடும்பத்துக்கு ஆணிவேர் போன்றவள். அவள் கோபப்பட்டால் அதனால் அவளுடைய கணவன், குழந்தைகளின் மனநிலை



பாதிக்கப்படும். கணவன் தான் பணிபுரியும் அலுவலகத்தில் திறமையாகப் பணிபுரியும் ஆற்றல் குறைந்து போகிறது. வீட்டில் நிம்மதி இல்லாததால் குடித்தால் நிம்மதி கிடைக்கும் என்ற தவறான எண்ணத்தில் குடிப்பழக்கத்திற்கு ஆளாகிறான். அந்த சமயத்தில் அலுவலகத்தில் பணிபுரியும் எந்தப் பெண்ணாவது அவனிடம் அன்பாய் பேசும்போது அவனால் ஈர்க்கப்பட்டு தப்பான தொடர்பில் போய் முடிகிறது.

இப்படி கோபமானது சங்கிலித் தொடர் போல சென்று வேண்டாத பின்விளைவுகளை உண்டாக்கும். அதுவரைக்கும் நல்லவன் என்று பெயர் எடுத்திருந்த ஒரு நபர் மற்றவர்களின் பார்வையில் கெட்டவனாய் மாறுகிறான். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் அடிக்கடி கோபப்படுவதின் மூலம் தன் ஆயுளில் மூன்றில் ஒரு பங்கு நாட்களை இழப்பதால் மரணத்தை சீக்கிரமே சந்திக்கிறான்."

"ஸார்...! நான் இனிமே கோபப்பட மாட்டேன்..."

"க்ராஸ்டாக்ல யாரு...?"

"கணேஷ்குமார் ஸார்..."

"ஓ... நாராயணா பாலிடெக்னிக்?"

"அதே கணேஷ் குமார்தான் ஸார்... கொஞ்ச நாளாவே எனக்கு காரணம் இல்லாமே கோபம் வந்துட்டு இருந்தது. நீங்க செல்போன்ல பேசினதைக் கேட்டதும் இனிமே எதுக்காகவும் கோபப்படறதில்லைன்னு முடிவு பண்ணிட்டேன்...!

"ஆஹா...! உங்களைப் போலவே எல்லாரும் கோபத்துக்கு 'குட் பை' சொல்லிட்டா வாழ்க்கை என்கிற வண்டி சுகமாய்ப் பறக்கும்..."

"ஸார்... நான் க்ரைம் நாவலைப் படிக்கப் போகணும். அடுத்த மாத க்ரைம் நாவல் தலைப்பைச் சொல்லிட்டா பரவாயில்லை."

"இதோ... இதோ...!"

"தலைப்பே இதுதானா ஸார்?"

"அட... நீங்க வேற... இனிமேல்தான் தலைப்பையே சொல்லப் போறேன். கேட்டுக்குங்க..."

"சொல்லுங்க ஸார்"

**'ஆப்பிள் பெண்ணே! நீ யாரோ...?'**

டொக்..!

மிக்க அன்புடன்

**ராஜேஷ்குமார்**

# ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

★ சித்தர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள். அப்படி இருக்கும் போது சிவவாக்கியர் என்னும் சித்தர் 'நட்ட கல்லும் பேசுமோ?' என்று தெய்வத்தை கேலி செய்து ஒரு பாடலைப் பாடியுள்ளார். ஏன் இந்த முரண்பாடு...? சிவவாக்கியர் என்னும் சித்தர் நாத்திகவாதியா?

(வி. பொன்னம்பலம். சிதம்பரம்.)

★ சிவவாக்கியர் என்னும் அந்த சித்தரின் பாடலைக் படித்தபோது எனக்கும் முதலில் அப்படித்தான் தோன்றியது. ஆனால் ஒரு ஆன்மீகப் பெரியவர் - திரு. பி.என். பரசுராமன் என்பவர் தற்சமயம் அந்தப் பாடலுக்கு புதிய விளக்கம் ஒன்றைத் தெளிவாக சொல்லியுள்ளார். இதோ அவர் சொல்லும் விளக்கம்.

சிவவாக்கியர் பாடிய பாடல் இது. மொதல்ல இந்த பாட்டை பார்ப்போம்.

நட்டகல்லை சுற்றி வந்து நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றிவந்து மொண மொணவென்று சொல்லும்
மந்திரம் ஏதடா!
நட்ட கல்லும் பேசுமோ...? நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

நட்டகல்லு பேசாது... என்டா கோயிலுக்கு போறீங்கன்னு சித்தரே சொல்லிட்டார்ன்னு பல நாத்திகவாதிகள் மேடைக்கு மேடை பேசறதை நாம எல்லோரும் கேட்டிருக்கோம். ஆனா சிவவாக்கியர் என்னும் சித்தர் நாத்திகர் அல்ல. இறைவனைச் சிறப்பித்து அவர் எத்தனையோ பாடல்களைப் பாடியிருக்கார். அப்படி பாடியவர் எதுக்காக 'நட்ட கல்லை'ங்கிற பாட்டை பாடினார். பாட்டுக்கு உண்மையான அர்த்தம் என்ன? வாங்க பார்க்கலாம். சித்தர் 'நட்ட கல்லை'ங்கறார். ஏன் வெறும் கல்லுன்னு சொல்லக்கூடாதா...? நட்டகல்லுன்னு சொல்றாரே அது



என்ன..? நட்ட கல்ங்கிறது பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்வாமி விக்கிரங்களைக் குறிக்கும். இந்தப் பாட்டிலேயே நாலு புஷ்பம்ன்னு சொல்றது நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, மலை பூன்னு நாலுவகையான பூக்களைக் குறிக்கும். தண்ணீரில் பூக்கும் பூ, நிலத்தில் பூக்கும் பூ, கொடியில் பூக்கும் பூ, மலையில் பூக்கும் பூ என்பதே அந்த நாலு புஷ்பம். இந்த நாலு வகையான பூக்களையும் சாத்தனும். அடுத்தது இந்தப்பாட்டில் வர்ற சுற்றி வந்து மொண மொண வென்று சொல்லும் மந்திரம் ஏதடா! இதுக்கு என்ன அர்த்தம்? கடவுள் சிலையைச் சுற்றிவரும்போது ஊர்வம்பு பேசிட்டோ, அல்லது எனக்குத்தான் பாடத் தெரியும்ன்னு சத்தம் போட்டு பாடிட்டோ வலம் வரக்கூடாது. நமக்குத் தெரிந்த மந்திரத்தை அடுத்தவங்க காதுல விழாதபடி உதடுகள் மட்டும் அசையும்படியாய் முணுமுணுத்துகிட்டே வலம் வரணும். ஏன்னா சாஸ்திரப்படி நமக்கு தெரிஞ்ச மந்திரம் மற்றவர்களுக்கு தெரியக்கூடாது. அதனால் சித்தர் 'மொண மொண' என்ற வார்த்தையைப் பாட்டில் பயன்படுத்தியிருக்கார். அடுத்தது 'நட்ட கல்லும் பேசுமோ?' என்பது. இதற்கு நட்டுவெச்ச கல்லான கடவுள் விக்கிரகம் பேசுமோ? அது பேசாது என்பதல்ல அர்த்தம். இதை முதலில் நட்ட கல் பேசுமோ, உம் என்று கொண்டு கூட்டு மொழியில் சொல்ல வேண்டும். அதாவது 'கல்லும்' என்கிற வார்த்தையில் உள்ள 'உம்'மை கடைசியில் போட்டுக் கொள்ள வேண்டும். இப்போது அந்த வரியைப் படிச்சுப் பார்த்தா 'நட்ட கல்லான விக்கிரகம் பேசுமா? உம் பேசும்!' என்கிற விளக்கம் நமக்கு கிடைக்கும். விக்கிரகம் பேசும்; ஆனால் எப்போது... தெய்வம் நம் உள்ளத்தில் இருக்கணும். அப்போதுதான் கோவிலில் உள்ள விக்கிரகம் பேசும். இல்லையென்றால் அது பேசாது. உதாரணம்: செல்போனில் 'சிம் கார்டு' இருந்தாத்தான் பேச முடியும்; அதுபோல் நம் உள்ளத்தில் கடவுளை உட்கார வைத்தால்தான் கோயிலில் நட்டு வைத்த சிலையும் பேசும். இதைத்தான், 'நாதன் உள்ளிருக்கையில்' எனக் குறிக்கிறது பாட்டு. மேலும் இன்ப துன்பங்களால் பக்குவப்பட்டு தெய்வநிலையை அடைந்த மனிதன்

மறுபடியும் பிறக்க மாட்டேன் என்பதை சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ என்கிறார் சித்தர்.

★ ஏமாற்றங்கள் இல்லாத வாழ்க்கையை அமைத்துக் கொள்வது எப்படி?

(இ. ரஹ்மானியா, பள்ளிப்பாளையம்.)

★ ஏமாற்றங்களை யாரும் எதிர்பார்ப்பது இல்லை. எதிர்பார்ப்புகள்தான் ஏமாற்றங்களாக மாறுகின்றன. எதையும் எதிர்பார்க்காமல் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். எதிர்பாராத நேரத்தில் எல்லாமே கிடைக்கும்.

★ ஒரு அழகான காதல் கவிதையை ஹைக்கூ பாணியில் சொல்லக்கூடாதா..?

(ஜி. பரமேஷ்வரன், தேனீ.)

★ இதோ ஒரு 'அழகான' கவிதை.

காதலியின் வீட்டுக்கு
முதல் முதலாக
சென்ற போது
தவறு
செய்துவிட்டோமோ
என்ற
எண்ணம்.
காரணம்?
அவளின் வீட்டில்
அழகான
தங்கை!

## பரிசுக்குரிய கேள்வி

★ விலைவாசி உயர்ந்து கொண்டே போனாலும் மக்கள் அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பது எப்படி..? முன்பெல்லாம் கொஞ்சம் விலைவாசி உயர்ந்தாலும் அரசியல்கட்சிகள் விலைவாசிப் போராட்டம் நடத்துவார்கள். இப்போதெல்லாம் போராட்டமும் இல்லை. இப்படியொரு நிலை உருவாக என்ன காரணம்...?

(எஸ். ரவிக்குமார், கோவை.)

★ தலைக்கு மேலே வெள்ளம் போனால் ஜான் என்ன முழம் என்ன என்று சொல்வார்கள். அந்த



நிலைமைதான் இப்போது. விலைவாசி உயரும்போது அதை சரிக்கட்டுவதற்காக தன்னுடைய வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்திக் கொள்கிறான். ஒரு தனி மனிதன். ஒரு பெயிண்டரின் தினக்கூலி 5 வருடங்களுக்கு முன்னால் 150 ரூபாய். இன்று 300 ரூபாய். இப்படி ஒவ்வொருவரும் தான் செய்து வரும் தொழிலின் வருமானத்தை உயர்த்திக் கொள்வதின் காரணமாக விலைவாசி உயர்வு அவர்களை பாதிப்பது இல்லை. தியேட்டரில் புதுப்படம் வந்தால் டிக்கெட்டின் விலை 100 ரூபாய். ப்ளாக்கில் 200 ரூபாய். ரஜினி படம் என்றால் 500 ரூபாய். மக்கள் கை கூசாமல், மனம் கூசாமல் டிக்கெட் வாங்கிக் கொண்டு போய் படம் பார்க்கிறார்கள். விலைவாசிப் போராட்டம் நடத்தினால் அது எடுபடாது என்று எதிர்க்கட்சிகளுக்கும் தெரியும். மக்கள் எல்லாவற்றுக்கும் பழகிக் கொண்டு விட்டார்கள். ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன அன்றைய தினம் சந்தோஷமாய் கழித்தால் போதும். அண்மையில் புனே நகரில் உள்ள இந்திய வெப்ப மண்டல வானிலை இலாகாவைச் சேர்ந்த விஞ்ஞானி எஸ்.எம். பலிஷ்கார் கூறியுள்ள ஒரு அதிர்ச்சியான செய்தியை இந்திய மக்களில் 90% பேர் கண்டு கொள்ளவேயில்லை. செய்தி தெரிந்த 10% பேர் மட்டும் பத்திரிகைகளிலும் டி.வி. சேனல்களிலும் புலம்பித் தீர்த்தார்கள் எஸ்.எம். பலிஷ்கார் தெரிவித்த அதிர்ச்சியான செய்தி இதுதான்.

"இந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை வழக்கம் போல் பெய்யவில்லை. 23 சதவீதம் குறைந்த அளவில் மழை பெய்ததாக பதிவாகி இருக்கிறது. இதற்குக் காரணம் பூமியின் வெப்பம் அதிகமாகி வருவதால் அரபிக்கடலின் வெப்பமும் மிக அதிகமாகி வருகிறது. கடல் மட்டத்தில் காணப்படும் வெப்பம் மற்றும் நிலப்பகுதியில் இருக்கும் வெப்பம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசம் தான் அரபிக்கடல் மட்டத்துக்கு மேலே இருக்கும் மழை மேகங்களை நிலப்பகுதிக்கு இழுத்து வந்து தென்மேற்கு பருவ மழையாக பெய்யச் செய்கிறது. கடந்த சில ஆண்டுகளாக கடல் மற்றும் நிலப்பகுதி ஆகியவற்றுக்கு இடையே உள்ள வெப்பத்தின்

வித்தியாச அளவு வேகமாக குறைந்து வருகிறது. இதன் காரணமாகத்தான் தென்மேற்கு பருவமழை முன்போல் அல்லாமல் மிகக் குறைந்த அளவே பெய்கிறது. இதே வேகத்தில் கடல் மற்றும் நிலப்பகுதியின் வெப்பவேறுபாடு குறைந்து கொண்டே போனால் இன்னும் 150 ஆண்டுகளில் கடல் மற்றும் தரைப்பகுதி வெப்பம் ஒரே அளவாக ஆகிவிடும். அப்போது கடல் மட்டத்தில் இருக்கும் மழை மேகங்கள் நிலப்பகுதிக்கு வர வாய்ப்பு இருக்காது. எனவே 150 ஆண்டுகளில் தென்மேற்கு பருவமழை என்பதே இல்லாமல் போய்விடும்.

இந்த அதிர்ச்சியான, கவலைக்குரிய செய்தி தமிழ்நாட்டில் எத்தனை பேர்க்குத் தெரியும் என்று கேளுங்கள். பத்தில் ஒருவர்க்கு கூட தெரிய வாய்ப்பில்லை. அவர்களுடைய கவலையெல்லாம் பிரபுதேவா நயன்தாரா காதல் எதில் போய் முடியும்..? கோலங்கள் சீரியல் என்னாகும்...? ரஜினியின் எந்திரன் எப்போது வரும்? இலவச டி.வி. நமக்கு இன்னும் கிடைக்கவில்லையே?

பருப்பு கிலோ 1000 ரூபாய்க்கு விற்றாலும் கூட நமக்கு இட்லி சாப்பிடும் போது சாம்பாரோடு வடையும் இருக்கவேண்டும். தென்மேற்கு பருவமழை பெய்தால் என்ன; பெய்யாமல் போனால்தான் என்ன?

இந்தப் பகுதிக்கு கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:-

**ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்**

க்ரைம் நாவல்,
ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 5.

# அர்த்தமுள்ள அரட்டை

விவேக்கும் விஷ்ணுவும் ஒரு கேஸ் விஷயமாய் அலைந்து விட்டு வீட்டுக்குள் நுழையும் போதே விஷ்ணு மோப்பம் பிடித்து விட்டுக் கேட்டான்.

''பாஸ்''

''என்னடா...?''

''இன்னிக்கு வீட்ல என்ன விசேஷம்..?''

''ஒரு விசேஷமும் இல்லையே...?''

''உங்க பர்த்டே மார்ச் மாசம். மேடத்தோட பர்த்டே செப்டம்பர் மாசம். இது அக்டோபர் மாசம். இந்த மாசத்துல வேற எந்த விசேஷமும் இருக்கிறமாதிரி தெரியலை. ஆனா ரூபலா மேடம் கிச்சன்ல ஏதோ

**- ராஜேஷ்குமார்**

ஸ்வீட் பண்ணிட்டு இருக்காங்க போலத் தெரியுது.''

''எனக்கு எந்த வாசனையும் வரலையே?''

''மூச்சை கொஞ்சம் பலமாய் இழுங்க பாஸ். ஏலக்காய் வாசனையோடு ரவா கேசரி மணக்கும்...''

விவேக் மூச்சை இழுத்து வாசனை பிடித்துக் கொண்டு இருக்கும்போதே ரூபலா சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''என்னங்க... டி.வி. நியூஸ் கேட்டீங்களா?''

''நாங்க இப்பத்தானே உள்ளே வர்றோம். நீ சொன்னாத்தான் நியூஸ் என்னான்னு தெரியும்.''

விவேக் சுழலும் மின்விசிறிக்குக் கீழே போய் உட்கார்ந்தான்.

''நம்ம தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ராமகிருஷ்ணனுக்கு நோபல் பரிசு கிடைச்சிருக்கு. ராமகிருஷ்ணன் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிறந்தவர். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படிச்சவர். இந்த நியூஸைக் கேட்டதிலிருந்து என்னால சந்தோஷத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியலை. அதான் ரவா கேசரி பண்ண ஆரம்பிச்சுட்டேன்.''

''விஞ்ஞானி ராமகிருஷ்ணன் வாழ்க...'' என்று கையை உயர்த்தி கோஷம் போட்ட விஷ்ணு - ரூபலா பக்கம் திரும்பினான்.

''மேடம்!''

''என்னடா...?''

''ரவா கேசரி மெத்மெத்ன்னு பதமாய் இருக்கணும்ன்னா நெய்யைக் காய்ச்சி வெச்சுகிட்டு கேசரியைக் கிளறும் போது சொட்டு சொட்டாய் விடணும்...''

''கேசரி எப்படியிருந்தா உனக்கு என்னடா...? நீ அதை சாப்பிடப் போறதில்லை. என்னா நான் உனக்கு கொடுக்கப் போறது இல்லை.''

''மேடம்...! என் கன்னத்துல அடிங்க... பொறுத்துக்கிறேன். ஆனா வயித்துல மட்டும் அடிக்காதீங்க... ஒரு தமிழன் நோபல் பரிசு வாங்கியிருக்கும்போது நான் கேசரி சாப்பிடலைன்னா தமிழன்னை குமுறி குமுறி அழுவா...''

''உனக்கு கேசரி வேணும்ன்னா நான் கேட்கிற கேள்விக்கு நீ சரியான பதிலைச் சொல்லணும்!''

''கேளுங்க மேடம்.''

''விஞ்ஞானி ராமகிருஷ்ணனுக்கு நோபல் பரிசு எந்தத் துறைக்காகக் கொடுக்கப்பட்டது...?''

''வேதியல் துறைக்கு...''

''அட... பரவாயில்லையே...! என்னங்க... விஷ்ணு சரியா சொல்லிட்டான்...?''

''என்ன ரூபி... இப்படி ஆச்சர்யப்படறே...? அவன் என்ன மூளையில்லாத மக்கு பிளாஸ்திரியா...? அவன் இப்ப பொது அறிவு விஷயங்களில் ரொம்பவும் தேறிட்டான். வேணும்ன்னா நோபல் பரிசு சம்பந்தமாய் இன்னும் ரெண்டு கேள்வி கேட்டுப்பாரு...!''

''பாஸ்...!''

''தைரியமாய் ஃபேஸ் பண்ணுடா..''

ரூபலா விஷ்ணுவிடம் திமிர்ந்தாள். ''சரி... இந்த கேள்விக்கு பதில் சொல்லு பார்க்கலாம். ராமகிருஷ்ணனோடு சேர்ந்து இன்னும் எத்தனை பேர் வேதியல் துறைக்காக நோபல் பரிசு பெற்றார்கள்...?''

''ரெண்டு பேர்...''

''அவங்க பேர் என்ன?''

''ஒருத்தர் பேர் தாமஸ் ஏ. ஸ்டெய்ட்ஸ். இன்னொருத்தர் பெண். பேரு அடா. இ. யோநாத். ரெண்டு பேருமே விஞ்ஞானிகள்.''

''டேய்... விஷ்ணு... எப்படிடா...?''

''கண்ணு வைக்காதீங்க மேடம்...''

''சரி... அவரோட கண்டுபிடிப்பு என்னான்னு தெரியுமா?''

''தெரியும் மேடம். ஒட்டு மொத்த மனித குலமே நன்றி பாராட்ட வேண்டிய மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்பு விஞ்ஞானி ராமகிருஷ்ணனால் நிகழ்த்தப்பட்டு இருக்கிறது. அந்த கண்டுபிடிப்பு மூலம் நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்துகளை எளிதில் தயாரிக்க முடியும். அதன் காரணமாக நோய் இல்லாமல் மனிதன் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ முடியும்.''

''என்னங்க! விஷ்ணு ரொம்பவும் தேறிட்டான்.''

''நான் தான் சொன்னேனே ரூபி...! இப்ப நான் ஒரு கேள்வி கேக்கப் போறேன் பார். அந்த கேள்விக்கும்



அவன் பதில் சொல்லுவான். விஷ்ணு...!''

''பாஸ்...''

''நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ராமகிருஷ்ணன் எது மாதிரியான ஆராய்ச்சி பண்ணினார்...? அவரோட ஆராய்ச்சி சொல்றது என்ன...?''

''பாஸ்! இந்த கேள்விக்கு கொஞ்சம் நீளமாய் பதில் சொல்ல வேண்டியிருக்கும். பரவாயில்லையா...?''

''எவ்வளவு கிலோமீட்டர் நீளமாய் இருந்தாலும் பரவாயில்லை... சொல்லுடா...!''

''நான் பேசி முடிக்கிற வரை நீங்க கொட்டாவி விடக்கூடாது. ஓ.கேவா...?''

''டபுள் ஓ.கே...!''

விவேக் தலையாட்ட விஷ்ணு தொண்டையைக் கனைத்துவிட்டுப் பேச ஆரம்பித்தான். ''பாஸ்! நமது உடலின் பாகங்கள் அனைத்தும் செயல்பட புரதச் சத்து தேவை. அந்த புரதச் சத்துதான் ஒவ்வொரு செல்களையும் இணைத்து உடலின் பல்வேறு பாகங்கள் உருவாகவும் அவை சீராக செயல்படவும் பயன்படுகின்றன. இவ்வாறு உடலுக்குத் தேவையான புரதச் சத்து எங்கு, எப்படி தயாராகிறது என்று ஆராய்ந்தபோதுதான் செல்களில் ரிபோசம் என்கின்ற அற்புதம் ஒன்று இருக்கிற விஷயம் தெரிந்தது. இதை முதன் முதலாய்க் கண்டு பிடித்தவர் ருமேனியா நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஜார்ஜ் பலேட் என்பவர். 1950ஆம் ஆண்டு அவர் இதைக் கண்டுபிடித்தார். இதற்காக அவர்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.''

''அது என்ன ரிபோசம்...?'' ரூப்லா குழப்ப முகத்தோடு கேட்க, விஷ்ணு விவேக்கைப் பார்த்தான்.

''பாஸ்... நீங்க காலை வரும்போது எனக்கு இவ்வளவுதான் சொல்லிக் கொடுத்தீங்க. இனி மேடம் கேட்கிற கேள்விக்கு எல்லாம் நீங்கதான் பதில் சொல்லணும். என்னால முடியாது...''

ரூபலா புன்னகைத்தாள்.

''அதுதானே பார்த்தேன்... விஷயதானம் உங்க பாஸ் கொடுத்ததுதான்னா...?''

''மேடம்..! இதுக்காக எனக்கு தண்டனை கொடுத்துடாதீங்க... கேசரி எனக்கு உண்டா இல்லையா...?''

''உண்டு... உண்டு...! ரிபோசம்ன்னா என்ன? உங்க பாஸ் சொல்லட்டும்.''

விவேக் ரூபலாவை ஏறிட்டான். ''ரூபி! ரிபோசம்ங்கறது நம்ம உடலுக்குத் தேவையான ஒன்று. அது இல்லேன்னா நம்ம உடலே இல்லை. நம்ம உடலுக்குத் தேவையான புரதச் சத்துக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையாய் ரிபோசம் செயல்படுது. ஹீமோகுளோபின், நோய் எதிர்ப்பு சக்தி, சர்க்கரையைக் கரைக்கும் இன்சுலின் போன்ற

ஆயிரக்கணக்கான வித்தியாசமான புரதச் சத்துக்களைத் தயாரிப்பதும் இந்த ரிபோசம்கள்தான். அந்த புரதச்சத்துக்களால்தான் நாம் உயிரோடு இருக்க முடியுது. மனித உடலில் மட்டும் இல்லை. விலங்குகள், தாவரங்கள் என்று உயிர் உள்ள அத்தனையிலும் ரிபோசம்கள் இருக்கு...''

''சரி! இதில் நோபல் பரிசு பெற்ற ராமகிருஷ்ணனின் பங்கு என்ன...?''

''இதோ விஷயத்துக்கு வந்துட்டேன். மனிதனுக்கு நோயை உண்டாக்கும் பாக்டீரியாக் கிருமிகளின் உடலிலும் ரிபோசம்கள் இருக்கிற காரணத்தினால்தான் அந்த பாக்டீரியாக் கிருமிகள் நம்மைத் தாக்கி நோய்களை உண்டாக்குகின்றன. அந்த கிருமிகளைக் கொல்ல அல்லது அழிக்க என்ன வழி...? நோபல் பரிசு பெற்ற ராமகிருஷ்ணன் தன்னுடைய ஆராய்ச்சிக்கு இந்தக் கேள்வியைத்தான் எடுத்துக்கிட்டார். நமது உடலில் உள்ள கிருமிகளின் ரிபோசம் செயல்பாட்டை முடக்க குறிப்பிட்ட ஒரு மருந்தை உட்கொண்டால் அது பாக்டீரியா கிருமிகளின் ரிபோசம்களை அழிப்பதோடு நமது உடலில் உள்ள ரிபோசம்களையும் அழித்து விடும் அபாயம் இருப்பதை ராமகிருஷ்ணன் கண்டுபிடித்தார். அதைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போதுதான் இன்னொரு உண்மையையும் கண்டுபிடித்தார். அதாவது மனித உடலின் ரிபோசம்களும் விலங்கினங்கள் மற்றும் பாக்டீரியா கிருமிகளின் ரிபோசம்களும் அமைப்பில் வேறுபட்டன. உதாரணமாக ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர்க்கு அந்தக் கிருமியின் செயல்பாட்டை நிறுத்தி வைக்கக்கூடிய மருந்தைக் கொடுத்தால் ஆஸ்துமா கிருமிகளை மட்டும் அந்த மருந்து கொல்லும். இதனால் அந்த மனிதனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறு ஒவ்வொரு கிருமிகளையும் நாம் அடையாளம் கண்டுகொண்டு அந்த கிருமிகளின் உடலில் உள்ள ரிபோசம் செயல்பாட்டை நிறுத்திவிடும். மருந்து என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் மனிதனுக்கு ஏற்படும் எந்த ஒரு நோயையும் உடனடியாக குணப்படுத்த முடியும். ரிபோசம்களின் ஒவ்வொரு அணுக்களும் எங்கே இருக்கின்றன, எந்த கோணத்தில் இருக்கின்றன என்ற பட்டியல் முழுவதையும் வெற்றிகரமாகக் கண்டு பிடித்துள்ளார் நம் விஞ்ஞானி ராமகிருஷ்ணன். இந்த அரிய பணிக்காகத்தான் அவர்க்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டுள்ளது. ரிபோசம்களின் வரைபட முழு பட்டியல் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால் பாக்டீரியா கிருமிகளின் உடலில் உள்ள ரிபோசம்களின் செயல்பாட்டைத் தடுத்து நிறுத்தக்கூடிய மருந்தை அதாவது மனிதனுக்குத் தேவையான நோய் எதிர்ப்பு சக்தி மருந்தை எளிதாகத் தயாரிக்க முடியும்.''

''அப்படீன்னா எதிர்காலத்தில் மனிதன் எந்த ஒரு



நோயையும் பார்த்துப் பயப்பட வேண்டியது இல்லைன்னு சொல்லுங்க.''

''கண்டிப்பா...''

''பாஸ்...! விஞ்ஞானி ராமகிருஷ்ணனுக்கு நோபல் பரிசுத் தொகையாய் எவ்வளவு பணம் கிடைக்கும்?''

''ரூபி..! நீ சொல்லு... எவ்வளவு' பணம் கிடைக்கும்?''

ரூபலா பதில் சொல்வதற்குள் -

**வாசகர்களே!**

உங்களுக்கு பதில் தெரிந்தால் ஒரு தபால் கார்டை எடுத்து பதில் எழுதி 20-11-2009 தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய 5 வாசகர்களுக்குப் புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி

**அர்த்தமுள்ள அரட்டை**
**க்ரைம் நாவல்**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005

**இனி சென்ற மாத அ. அரட்டையில் கேட்கப்பட்ட கேள்வியும் அதற்கான பதிலும்:**

கேள்வி: நோய்க்கிருமிகள் தாக்காமல் இருப்பதற்காக முகத்தில் அணியப்படும் பச்சை நிற கவசத்துக்கு என்ன பெயர்?


பதில்: **N - 95** என்பது கவசத்தின் பெயர்.

***

சரியான பதில் எழுதிய 5 பேர்:

1. த. பன்னீர் மரிய புஷ்பம் - தூத்துக்குடி.
2. எஸ். ஜெயவர்த்தனன் - பெங்களூர் - 57
3. பெ. மாணிக்கம் - சென்னை - 33
4. பி.எல். பரணிகுமார் - திசையன்விளை
5. ஜெ. ரவிபாண்டியன் - விருதுநகர்.

***




# 1

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

இந்தியாவில் பணம் போடும் வங்கி தவிர ரத்த வங்கி, தாய்ப்பால் வங்கி, உயிரணு வாங்கி, எலும்பு வங்கி, ஸ்டெம்செல் வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட வங்கிகளின் வரிசையில் இப்போது இணைந்து இருப்பது **லவ் பேங்க்** - காதல் வங்கி.

அதிகாலைச் சூரியன் கிழக்கில் ஒரு ஆரஞ்சுப் பழமாய் மாறியிருக்க, ஐஸ்வர்யபுரம் கிராமம், குழந்தையொன்று மெதுவாய் - ஜாக்கிரதையாய் நடப்பது போல் விடிந்து கொண்டிருந்தது.

நவநீத பட்டர், கிராமத்தின் மையத்தில் நேர்வகிடு எடுத்தாற்போல் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் குளித்து விட்டு நெற்றியில் திருமண்ணோடும், ஸ்ரீசூர்ணத்தோடும் ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

நவநீத பட்டர்க்கு ஐம்பது வயது இருக்கலாம். பனிரெண்ற சிவப்பு நிறம். மோவாயில் திட்டுத் திட்டாய் நரை ரோமம். காதுகளில் பவளக் கடுக்கன். பெண்களே பொறாமைப்படக் கூடிய அளவுக்கு அடர்த்தியான தலைமுடியை அலட்சியமாகக் கொண்டை போட்டிருந்தார். இடுப்பில் சுத்தமான வெள்ளை வேஷ்டி. தோளில் ஒரு சிவப்புத்துண்டு.

வழியில் பெண்கள் தண்ணீர் குடங்களோடு எதிர்ப்பட்டு பட்டரைப் பார்த்ததும் கன்னத்தில் போட்டுக் கொண்டு ஒதுங்கிப் போனார்கள். கிராமத்து டீக்கடைப் பெஞ்சில் உட்கார்ந்திருந்த ஒரு கும்பல் **இரண்டு ரூபாய் நாளிதழையும், ஐந்து ரூபாய் டீயையும்** கையில் வைத்துக் கொண்டு ஒரிஸ்ஸா அரசியலிலிருந்து ஒபாமா வரை

பேசிக்கொண்டிருந்தார்கள். டீக்கடையை ஒட்டியிருந்த சுவரில் ஒட்டியிருந்த சினிமா சுவரொட்டி டெண்ட் தியேட்டரில் படம் மாறியிருப்பதைத் தெரிவித்தது.

ஆறு மணிக்குள் கோயில் நடையைத் திறக்க வேண்டும் என்ற அவசரத்தில் நவநீத பட்டர் வேக வேகமாய் நடை போட்டுக் கொண்டிருந்தார். சமீபத்திய மழையின் காரணமாய் கிராமத்துக் கண்மாய் கடல் மாதிரி தெரிய, தொலைவில் ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலின் ராஜ கோபுரம் சூரியனின் கதிர்கள் பட்டு கலசங்களோடு ஒளிர்ந்தது.

பட்டர் கண்மாயை ஒட்டிய வளைவுப் பாதையில் திரும்பிய போது எதிரே கிராமத்து மணியம் பரசுராமன் வாயில் வேப்பங் குச்சியோடு எதிர்ப்பட்டார். வாயில் இருந்த கசப்பு எச்சிலைத் துப்பிவிட்டு ''நமஸ்காரம் பட்டரே!'' என்றார்.

''நமஸ்காரம்... நமஸ்காரம்'' கை குவித்து பவ்யமானார் பட்டர்.

''உங்களைப் பார்க்கத்தான் வந்துட்டிருக்கேன் பட்டரே!''

''என்னையா... எதுக்கு?''

''சீக்கிரமா கோயிலுக்குப் போங்க.... அங்கே உங்களுக்காக சென்னையிலிருந்து வந்து இருக்கிற டி.வி. காரங்க வெயிட் பண்ணிட்டு இருக்காங்க...!''

''டி.வி.யிலிருந்தா...?''

''ம்...''

''எதுக்கு...?''

''நம்ம கிராமத்துக் கோயிலை படம் எடுத்து அது பற்றிய விபரங்களை வர்ற வைகுண்ட ஏகாதசியன்னிக்கு டி.வி.யில் ஒளிபரப்பப் போறாங்களாம்.''

''எந்த டி.வி...?''

''மதியொளி டி.வி.யாம்... காலையிலிருந்து சாயந்தரம் வரைக்கும் சூட்டிங் நடக்குமாம். போய் ஒத்தாசை பண்ணுங்க. அவங்க உங்களைத்தான் பேட்டி எடுப்பாங்க. உங்களுக்குத்தான் கோயில்



வரலாறு அத்துபடியாச்சே... எல்லாத்தையும் சொல்லுங்க... நம்ம ஐஸ்வர்யப் பெருமான் கோவில் தமிழ்நாடு முழுக்க பிரபலமாகட்டும்...'' மணியம் சொல்ல; பட்டர் தயங்கினார்.

''கோயில் கர்ப்பக்கிருகத்தை படம் பிடிக்கக் கூடாதுங்கிறது ஐதீகம்...!''

''அதையும் அவங்ககிட்டே சொல்லிட்டேன். சரின்னு ஒத்துகிட்டாங்க... நீங்களும் அவங்ககிட்ட பேசும் போது நம்ம கோயிலோட நடைமுறைகளையும் விதி முறைகளையும் சொல்லிடுங்க. கோயில் வளாகத்துக்குள்ளே சிகரெட் பிடிக்கக் கூடாது, வெற்றிலை போடக்கூடாது, அசைவ உணவுகளைச் சாப்பிடக்கூடாதுன்னு கண்டிப்பா சொல்லிடுங்க.''

''சொல்லிடறேன்...''

''சீக்கிரமாய்ப் போங்க... அவங்க வெயிட் பண்ணிட்டு இருக்காங்க...''

''இதோ...!'' பட்டர் வேகமாய் நடந்தார். மனசுக்குள் சந்தோஷம் எட்டிப் பார்த்தது. டி.வி. சானல்களில் தமிழ் நாட்டில் இருக்கிற கோவில்களையெல்லாம் காட்டி அதன் அருமை பெருமைகளைப் பேசும் போது பட்டரின் மனசிலும் ஒரு ஏக்கம் பிறக்கும். 'இந்த ஐஸ்வர்ய பெருமாள் கோவிலை யாருமே கண்டு கொள்ள மாட்டேன் என்கிறார்களே...? இந்தக் கோயிலின் அருமை பெருமைகளையெல்லாம் சொல்லக் கூடிய வாய்ப்பு எனக்கு எப்போது கிடைக்கும்?' என்று மன உளைச்சல் பட்டு அநேக ராத்திரிகளில் பட்டர் தன் தூக்கத்தைத் தொலைத்து இருக்கிறார். இன்றைக்கு அந்த வாய்ப்பு வலிய வந்து இருக்கிறது! சந்தோஷத்தில் மனமும் உடம்பும் தத்தளித்தது.

கோயிலை நெருங்கினார்.

கோயில் வாசலிலேயே அந்த வேன் தெரிந்தது. வேனின் பக்கவாட்டு உடம்பில் 'மதியொளி தொலைக்காட்சி' என்ற வாசகம் தெரிந்தது. ஒரு இளம் பெண்ணும் நான்கைந்து இளைஞர்களும் வேனை விட்டு இறங்கி கோயில் கோபுரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நவநீத பட்டர் அவர்களை நெருங்கினார்.

''நமஸ்காரம்...''

அவர்கள் திரும்பிப் பார்த்து முகங்கள் மலர்ந்தார்கள். கைகளைக் குவித்தார்கள்.

''நீங்கதான் இந்தக் கோயிலுக்கு பட்டரா?''

''ஆமா...! ஊர் மணியம் இப்பத்தான் சொன்னார். இந்த கிராமத்து ஐஸ்வர்யப் பெருமாள் கோயில் ரொம்பவும் புராதனமானது. ரெண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாடி கட்டப்பட்டது. பெருமாள் ரொம்பவும் சக்தி வாய்ந்தவர். சொல்லுங்க... நான் என்ன பண்ணணும்..?''

ஒரு இளைஞன் முன்னால் வந்தான். ''நான்தான் இந்த யூனிட்டுக்கு டைரக்டர். என்னோட பேர் கீர்த்திவாசன். இவர் பாரதி கண்ணன், காமிராமேன். இவங்க மிஸ் ஒலியா. இந்தக் கோயிலோட சிறப்பைப்பற்றி சொல்லப் போகிற வர்ணனையாளர். அவங்க ரெண்டு பேரும் ப்ரொடக்ஷன் அஸிஸ்டெண்ட்ஸ். அவர் ரமேஷ்; இவர் கதிர்வேலன். உங்களுக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்துட்டு வந்து இருக்கணும். எங்களுக்கு இருக்கிற பிஸி ஷெட்யூலில் அது முடியலை. மன்னிக்கணும்.''

''பரவாயில்லை..! எது எது எந்தெந்த நேரத்துல நடக்கணுல்கறது நெருமாளோட கட்டளை. அதன்படிதான் நடந்திருக்கு. நடை திறக்கிறேன்... எல்லாரும் உள்ளே வாங்க... காலையில ஸ்நானம் பண்ணீங்களா?''

''ம்... பண்ணிட்டோம். விடியற்காலை நாலு மணிக்கே கும்பகோணம் வந்து ஹோட்டல்ல ரூம் எடுத்து குளிச்சிட்டு வந்துட்டோம். சாயந்தரம் ஆறுமணிக்குள்ளே சூட்டிங்கை முடிச்சுட்டு நாங்க கிளம்பணும்... இந்தக் கோயிலைப் பற்றின முழு வரலாறும் உங்களுக்குத்தான் தெரியும்ன்னு ஊர் மணியம் சொன்னார்.''

''அவர் சொன்னது வாஸ்தவமான வார்த்தைதான்.'' பட்டர் கோயில் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

பழங்காலப் பெரிய கோயில். பத்தடி உயரத்தில் மதில்சுவர்கள் எழும்பி ஏதோ ஒரு கோட்டைக்குள் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தின. பராமரிப்பு சரியாய் இல்லாத காரணத்தினால் சுவர்களில் வெடிப்பு விழுந்து, அந்த வெடிப்புகளில் செடிகள் முளைத்து சிதிலமாய் தெரிந்தது. கோயில் மண்டபத் தூண்களில் எண்ணெய்ப் பசையோடு அழுக்கு சேர்ந்து 'யாரும் தொட்டு விடாதீர்கள்' என்று சொன்னது. கோயில் பிரகாரம் முழுவதும் ஆட்டுப் புழுக்கைகளும், மாட்டுச் சாணமும், காய்ந்து போய் நாசிக்குப் பிடிக்காத நாற்றத்தைப் கிளப்பியது.

டி.வி. யூனிட்டின் டைரக்டர் கீர்த்திவாசன் தன் கையில் இருந்த கர்ச்சீப்பால் மூக்கை லேசாய் பொத்தியபடி கேட்டான்.

''என்ன பட்டரே! கோயில் இப்படியிருக்கு?''

பட்டர் சிரித்தார். ''பெருமாளுக்கு பேர்தான் ஐஸ்வர்யப் பெருமாள். இந்தக் கோவிலுக்கு எந்த ஒரு ஐஸ்வர்யமும் கிடையாது. ஏதோ ஊர் மணியத்தின் புண்ணியத்தால் கோயில்ல விளக்கு எரியுது. மூணு கால பூஜையும் நடக்குது. புரட்டாசியில் வர்ற சனிக்கிழமைகளில் மட்டும் கொஞ்சம் கூட்டம் வரும். அதிலும் உள்ளூர் ஜனங்க வரமாட்டாங்க. வெளியூர் ஜனம்தான்.''

''இந்து அறநிலையத் துறையோட கட்டுப் பாட்டில் இந்தக் கோயில் இல்லையா..?''

''இல்லை...''

''ஏன்..? இவ்வளவு பெரிய கோயிலை அரசாங்கம் எப்படி விட்டு வெச்சாங்க...?''

''இந்து அறநிலையத்துறை இந்தக் கோயிலை எடுத்துக்க முன்வந்தபோது இந்த ஊர் ஜனங்கள் மறியல் போராட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவிச்சாங்க. கோயிலை அரசாங்கம் எடுக்கக்கூடாதுனு ஊர் மணியம் கோர்ட்ல ஸ்டே ஆர்டர் வாங்கிட்டார். இந்தக் கோயிலுக்கு எந்த ஒரு வருமானமும் இல்லாததினால இந்து அறநிலையத் துறையும் அதுக்கப்புறம் கோயிலை எடுத்துக்க அக்கறை காட்டலை. ஊர் மணியம் மட்டும் இல்லைன்னா கோயிலை இழுத்துப் பூட்ட வேண்டியதுதான்...'' சொன்ன பட்டர், கீர்த்தி

வாசனை ஏறிட்டார்.

''எல்லாரும் கொஞ்ச நேரம் மண்டபத்தில உட்கார்ந்து ரெஸ்ட் எடுங்க... நான் கர்ப்பக்கிருக நடையைத் திறந்து பெருமாளுக்கு தீர்த்தாபிஷேகம் பண்ணி அலங்காரம் முடிச்சுட்டு கூப்பிடறேன்.''

''எவ்வளவு நேரமாகும்?''

''அரைமணி நேரமாயிடும். பெருமாளை சேவிச்சிட்டு அப்புறமாய் கோயிலைச் சுற்றிப் பாக்கலாம்.''

பட்டர் சொல்லிவிட்டு உள்ளே போய்விட, கீர்த்திவாசன் தனக்குப் பக்கத்தில் நின்ற ஓவியாவை ஒரு புன்னகையோடு பார்த்தான்.

''என்ன ஓவியா... கோயிலோட நிலைமையைப் பார்த்துட்டு ரொம்பவும் நொந்து போயிட்டே போலிருக்கு...!''

ஓவியா சிரித்தாள்...

''இல்ல கீர்த்தி...! இந்தக் கோயில் எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு. மார்பிளும், க்ரானைட் கற்களும் பதிச்ச ஆடம்பரமான கோயில்களைப் பார்த்துப் பார்த்துக் களைத்துப் போன கண்ணுக்கும் மனசுக்கும் இந்த கோயில் இதமாய் இருக்கு. கருங்கல்லில் கட்டப்பட்ட அந்தக்கால காம்பௌண்ட் மதிர் சுவர்கள் கொஞ்சம் சிதிலமடைஞ்சு இருந்தாலும் அதிலேயும் ஒரு அழகு இருக்கு. மாட்டுச் சாணமும் ஆட்டுப் புழுக்கைகளும் நிரம்பிய இந்த வெளிப் பிரகாரம் கொஞ்சம் அசூயையா இருந்தாலும் மனசுக்குள்ளே பெரிசா எந்த ஒரு அருவெறுப்பும் இல்லை...!''

''ஸோ... உனக்கு இந்தக் கோயில் பிடிச்சிருக்கு?''

''ரொம்ப... ரொம்ப...''

பக்கத்தில் இருந்த காமிராமேன் பாரதிகண்ணன் புன்னகைத்தான். ''ஓவியாவோட ரசனை எப்பவுமே கொஞ்சம் வித்தியாசமாய்த்தான் இருக்கும். எனக்கும் என்னமோ தெரியலை. இந்தக் கோயிலை பார்த்த மாத்திரத்தில் மனசுக்குள்ளேயும் உடம்புக்குள்ளேயும் சில்லுன்னு ஒரு வைப்ரேஷன்.''

''நீங்க ரெண்டு பேரும் கூட்டு சேர்ந்துட்டீங்



களா..? இனி இந்த எபிசோட்களை கட்டிடும்...''

புரொடக்ஷன் அஸிஸ்டெண்ட்கள் ரமேஷ், கதிர்வேலன் இரண்டு பேரும் மண்டபத்தின் உட்பகுதியில் இருந்து வெளிப்பட்டார்கள்.

''ஸார்...! உள்ளே இருக்கும் மண்டபச் சுவரில் வித்தியாசமாய் ஏதேதோ வாசகங்கள் தெரியுது. வந்து பாருங்க...''

மூன்று பேரும் ஆர்வம் தாங்காமல் அவர்களைப் பின்தொடர்ந்து மண்டபத்துக்குள் நுழைந்தார்கள்.

எந்தக் காலத்திலோ பெயிண்ட்டால் எழுதப் பட்ட வாசகங்கள் மங்கலான வெளிச்சத்தில் தெரிந்தன.

**இறைவனிடம்**
**நீ கேட்க விரும்பிய கேள்விகளும்**
**அவன் அதற்கு**
**சொல்ல விரும்பிய பதில்களும்.**

**கேள்வி:** இறைவா...! என்னால் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தத் துன்பங்களிலிருந்து எனக்கு விடுதலை கொடு.

**இறைவனின் பதில்:** என்னால் விடுதலை கொடுக்க முடியாது. நீயாகத்தான் அந்தத் துன்பங்களிலிருந்து உன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதற்கான தைரியத்தை மட்டும் நான் உனக்குத் தருவேன்.

**கேள்வி:** என்னை நீ எப்போதும் சந்தோஷமாக வைத்து இருக்க வேண்டும். அதற்கு என்ன வழி?

**பதில்:** நீ எப்போதும் சந்தோஷமாய் இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அதற்காக உன்னை ஆசிர்வதிக்கவும் செய்கிறேன். ஆனால் அந்த சந்தோஷத்தைப் பெறுவதும் பெறாததும் உன் கையில்தான் உள்ளது.

**கேள்வி:** நீ என் மீது கருணை

கொண்டவன் என்பது உண்மையானால் எனக்கு எதற்காக துன்பங்களைக் கொடுக்கிறாய்?

**பதில்:** நீ அனுபவிக்கும் துன்பங்கள்தான் உன்னை என் அருகில் கொண்டு வரும் வழி.

**கேள்வி:** நீ என் மீது அன்பு செலுத்துவது போலவே நான் எல்லோரிடத்திலும் அன்பு காட்டத் துணை புரிய வேண்டும்.

**பதில்:** அடேடே...! கடைசியில் உண்மையைக் கண்டுபிடித்து விட்டாயே! நீ வாழ்க்கையில் பெற வேண்டிய எல்லா சந்தோஷங்களுக்கும் .

அதுதான் வழி...!

அவர்கள் படித்துக் கொண்டிருக்கும்போதே ஒலியாவின் கைப்பையில் இடம் பிடித்து இருந்த செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்துவிட்டு மற்றவர்களைப் பார்த்தாள். அவர்கள் மண்டபச் சுவரில் எழுதப்பட்டு இருந்த வாசகங்களை சுவாரஸ்யமாய் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒலியா மண்டபத்தை விட்டு வெளியே வந்து ஓரமாய் ஒதுங்கி நின்று தாழ்ந்த குரலில் பேசினாள்.

"அப்பா...! நான் இப்போ ஐஸ்வர்யப் பெருமாள் கோயில்ல இருக்கேன்...!" ஒலியா சொல்ல மறுமனையில் அவளுடைய அப்பா சீதாபதி கேட்டார். "உனக்குப் பக்கத்துல யாரும் இல்லையே?"

"இல்லை..."

"பேசலாமா?"

"ம்..."

"கோயில் எப்படியிருக்கு?"

"அரதப்பழசு...! கண் கொண்டு பார்க்க முடியலை. இப்படி ஒரு மோசமான கோயிலை தமிழ் நாட்ல எங்கேயும் பார்க்க முடியாது...!"

"ஒலியா! நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி அந்தக் கோயில் இருக்கிற நிலைமையைப் பார்த்துட்டு அதை அண்டர் எஸ்டிமேட்



பண்ணிடாதே...! எந்த ஒரு கோயிலுக்கும் காரணம் இல்லாமே பெயர் வந்துடாது. திருவிடந்தையில் நித்ய கல்யாணப் பெருமாள் கோயில் இருக்கு. அங்கே தினசரி ஒரு கல்யாணமாவது நடக்கிறதாய் ஐதீகம். அதனால்தான் அந்தக் கோயிலுக்கு நித்யகல்யாணப் பெருமாள் கோயில்ன்னு பேர். அதேபோல் திருக்கருகாவூர் கோயிலில் உள்ள முல்லைவன நாதர் திரு உருவச் சிலையில் முல்லைக் கொடி பதிந்து உண்டான தடத்தின் காரணமாய் அந்த இறைவனுக்கு முல்லைவன நாதர்ன்னு பேர் வந்தது. அதே மாதிரிதான் **'ஐஸ்வர்யப் பெருமாள்'** ன்னு பேர் வர்றதுக்கும் அந்தக் கோயில்ல ஒரு காரணம் ஒளிஞ்சிருக்கு. அங்கே குடிகொண்டு இருக்கிற பெருமாள் சாதாரணமானவர் இல்லை. திருப்பதி பெருமாளைப்போல் பணம் படைச்சவர்... அந்தக் கோயில்ல நூறு கோடி பகம் பொன் காசுகளும், ஏதோ விலை மதிக்க முடியாத நவரத்னக் கற்களும், அந்த இடத்தில் புதைக்கப்பட்டு இருக்கு... அந்த மொத்த ஐஸ்வர்யமும் எங்கே, எந்த இடத்தில் புதைக்கப்பட்டு இருக்கு என்கிற விபரம் ஒரு சித்தர்க்கு மட்டும் தெரிந்த ரகசியம். அவரும் அந்த ரகசியத்தை ஒரு பாடலாய் எழுதிக் கோயிலோட கர்ப்பக்கிருகத்தில் பதிச்சு வெச்சுட்டதாய் ஒரு செய்தி. ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டில் டைரக்டராய் வேலை பார்த்து ரிடையராயிருக்கிற நான் அந்த செய்தியை நூறு சதவீதம் நம்பறேன். நீயும் நம்பணும்."

"அப்பா...! நீங்க இவ்வளவு தீர்க்கமாய் - உறுதியாய் சொல்றீங்க. ஆனா கோயிலைப் பார்த்தா அப்படித் தெரியலை. ஊர் மணியம் புண்ணியத்தாலதான் கோயில்ல மூணு கால பூஜை நடக்குதாம்."

"ஒலியா...! அது காலத்தின் கோலம். நான் சொல்றதை நம்பு... நான் சொன்னபடி நீ நடந்துகிட்டா அந்தக் கோயிலில் இருக்கிற ஐஸ்வர்யப் புதையலை நம் வீட்டுக்கு கொண்டு வந்துடலாம்."

ஒலியாவின் கண்களில் லேசாய் ஒரு சந்தோஷம்

எட்டிப் பார்த்தது.

''நான் இப்ப என்ன செய்யணும்னு சொல்லுங்கப்பா.''

''கவனமாய்க் கேள்! நான் உனக்குக் கொடுத்து இருக்கிற தீப்பெட்டி சைஸ் அளவே உள்ள இன்ஃப்ரா ரெட் காமிரா வெரி பவர்ஃபுல். எந்த ஒரு பொருளையும் ஊடுருவி படம் எடுக்கக்கூடியது. கர்ப்பக்கிருகத்துக்குள் நீ போனதும் கைகளைக் கும்பிடுவது போல் வைத்துக் கொண்டு போட்டோ எடுக்கணும். நீ போட்டோ எடுக்கிறது யார்க்கும் தெரியக்கூடாது. உன்னோட டி.வி. யூனிட்ல இருக்கிற யார்க்கும் எந்த சந்தேகமும் வராதபடி நடந்துக்க...!''

''அப்பா...!''

''என்ன...?''

''இது வீண்முயற்சின்னு என்னோட மனசுக்குப்படுது. நீங்க நினைக்கிற மாதிரி இந்த ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலுக்குள்ளே நூறு கோடி பசும் பொன் காசுகளும் நவரத்னங்களும் இருக்க வாய்ப்பே இல்லை.''

''ஓவியா..! நான் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல இருந்தவன். எது பொய் எது உண்மைன்னு எனக்கு நல்லாவே தெரியும். இதுக்கு முன்னாடி கும்பகோணத்துக்குப் பக்கத்தில் இருக்கிற **'மான் கரம்பை'** என்கிற ஊர்ல இருந்த **'ஸ்வர்ணபுரீஸ்வரர்'** கோயிலிலிருந்த ஒரு கல்வெட்டை படிச்சு அந்த கல்வெட்டு வாசகங்கள்படி கோயிலோட குபேர மூலையில் தோண்டிப் பார்த்த போது தங்கக் கட்டிகள் கிடைச்சது. அதைப்பத்தி உனக்கும் சொல்லியிருக்கேன்...''

ஓவியா மேற்கொண்டு பேசுமுன்பு மண்டபத்தில் இருந்து கீர்த்திவாசன், பாரதி கண்ணன் வெளிப்படவும் குரலைத் தாழ்த்தினாள்.

''அப்பா... அவங்க வெளியே வர்றாங்க. நான் ஃப்ரீயா இருக்கும் போது பேசறேன்!''

''சரி... நான் சொன்ன பேச்சுல நம்பிக்கை வை. இன்ஃப்ரா ரெட் காமிரா மூலமாய் கர்ப்பக்கிருகத்தை போட்டோ எடு.''



''ம்...ம்...!''

ஓவியா செல்போனை அணைத்து கைப்பைக்குள் போட்டுக் கொண்ட விநாடி கீர்த்திவாசனும் பாரதி கண்ணனும் அவளை நெருங்கினார்கள்.

''போன்ல யார்... அப்பாவா?''

''ம்... கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தாச்சான்னு கேட்டார்.''

''நாலு தடிப்பசங்களோடு நம்ம அழகான பொண்ணு போயிருக்காளேன்னு அவர்க்கு ஒரு பயம்.''

பாரதிகண்ணன் சிரித்து சொல்லிக் கொண்டு இருக்கும்போதே பட்டர் உள்ளிருந்து வந்தார்.

''வாங்கோ...! பெருமாளுக்கு தீர்த்தாபிஷேகம் பண்ணி வஸ்த்ரஅலங்காரம் பண்ணியாச்சு. மொதல்ல சேவியுங்க... அப்புறம் பேட்டி, ஷூட்டிங் வெச்சுக்கலாம்...''

பட்டரை எல்லோரும் பின் தொடர்ந்தார்கள்.

ஓவியா தன் கைப்பையின் இன்னொரு அறையில் மறைத்து வைத்து இருந்த தீப்பெட்டி சைஸ் அளவே இருந்த இன்ஃப்ரா ரெட் காமிராவை எடுத்து தன்னுடைய வலது கையின் உள்ளங்கையில் அடக்கிக் கொண்டு தொடர்ந்தாள்.

நெற்றி வியர்த்து.

இதயத்தின் துடிப்பு அதிகரித்தது.

## 2

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்

நமது உடலில் ஏற்படும் வலியை அளக்க உதவும் கருவியின் பெயர் டோல்ஸ். ஒரு மனிதன் தாங்கக் கூடிய உச்சக்கட்ட வலியின் அளவு 9.5 டோல்ஸ்.

பெண்ணின் பிரசவ வலியின் அளவு 9.5 டோல்ஸ்

சென்னை.

ஜி.ஹெச்.

வாசலில் ஜீப்பை நிறுத்திவிட்டு இன்ஸ்பெக்டர் சேது படிகள் ஏறியபோது சீஃப் டாக்டர் பஞ்சாபகேசன் எதிர்ப்பட்டார். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்ததால் ஹாஸ்பிட்டல் பாலைவனமாய் தெரிந்தது. மின்சாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ட்யூப்லைட்டுகள் ஆங்காங்கே வெளிச்சத்தைத் தூவியிருந்தன.

''வாங்க இன்ஸ்பெக்டர்'' டாக்டர் கையைப் பற்றிக் குலுக்க, சேது கேட்டார்.

''விஷயம் வெளியே யார்க்கும் தெரியாதே டாக்டர்?''

''தெரியாது. ட்யூட்டி டாக்டர்களுக்குக் கூட தெரியாது''.

''தட்ஸ்... குட்! வாங்க பார்க்கலாம்...''

வராந்தாவில் நடந்தார்கள். சேது கேட்டார்.

''மார்ச்சுவரியில் இன்னிக்கு ட்யூட்டி இன்சார்ஜ் யாரு?''

''அய்யாசாமின்னு ஒரு வாட்ச் அண்ட் வார்ட். கூடவே அந்த ஆளுக்கு அஸிஸ்டண்ட் ஒருத்தன். பேரு சூசை''

''ரெண்டு பேர்க்கும் எத்தனை வருஷ சர்வீஸ்?''

''கிட்டத்தட்ட இருபது வருஷம்''

''ரெண்டு பேர் மேலேயும் ஏதாவது ரிமார்க்ஸ்?''

''எதுவும் இல்லை... பட்... ரெண்டு பேர்க்குமே குடிப்பழக்கம் உண்டு. ட்யூட்டியில் இருக்கும் போது குடிக்க மாட்டாங்க.''

இருவரும் பேசிக்கொண்டே நடந்து வந்ததில் ஹாஸ்பிட்டலின் பின்பக்கம் இருந்த மார்ச்சுவரி வந்தது. புகைபடிந்த மாதிரியான ட்யூப்லைட் வெளிச்சம். காற்றில் பார்மலின் நெடி. சுற்றிலும் பரவியிருந்த இருட்டில் மரங்கள் காற்றுக்கு அசைந்தன. வராந்தா பெஞ்சில் போடப்பட்டு இருந்த படுக்கையின் மேல் தவிப்போடு உட்கார்ந்திருந்த அந்த இரண்டு பேரும் டாக்டரையும் இன்ஸ்பெக்டரையும் பார்த்ததும் மார்புக்கு



குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு எழுந்தார்கள்.

டாக்டர் பஞ்சாபகேசன் சொன்னார்.

''இன்ஸ்பெக்டர்! நான் சொன்ன அந்த அய்யாசாமியும் சூசையும் இவங்கதான்...!''

சேது அவர்களுக்கு முன்பாய் போய் நின்றார்.

''எத்தனை மணிக்கு ட்யூட்டிக்கு வந்தீங்க?''

''ராத்திரி எட்டு மணிக்கு... ஸார்''

''எட்டு மணி வரைக்கும் ட்யூட்டியில் இருந்தது யாரு?''

''துரையப்பனும் முனிராஜும்.''

''வழக்கம் போல ட்யூட்டிக்கு வந்ததும் செக் பண்ணித்தானே சார்ஜ் எடுத்துக்குவீங்க?''

''ஆமாங்க ஸார்... அப்படித்தான் எடுத்துகிட்டோம்''

''சார்ஜ் எடுக்கும் போது மார்ச்சுவரியில் எத்தனை பாடி இருந்தது...?''

''பதினேழு ஸார்''

''ஆண் எவ்வளவு... பெண் எவ்வளவு?''

ஆண் ஒன்பது; பெண் எட்டு ஸார்.''

''நல்லா எண்ணிப் பார்த்தீங்களா?''

''பார்த்தோம் ஸார்''

''நல்லா எண்ணிப் பார்த்ததாய் சொல்றீங்க... பின்னே எப்படி ஒரு பெண் டெட்பாடி அதிகமாய் இருக்கும்?''

''அதான் ஸார் புரியலை...''

''சரி... மார்ச்சுவரிக்குள்ளே அதிகமாய் ஒரு பெண்ணோட டெட்பாடி இருந்த விஷயம் எப்ப உங்க ரெண்டு பேர்க்கும் தெரிஞ்சது...?''

''மணி பனிரெண்டு இருக்கும் ஸார். ஹால்ல படுக்க வெச்சிருந்த டெட்பாடியை ஃப்ரீஸர்ல வெச்சுடலாம்னு நினைக்க நானும் சூசையும் மார்ச்சுவரிக்குள்ளே போனோம். அதுக்காகவே ஒரு ஃப்ரீஸரைக் காலியாய் வெச்சிருந்தோம். ஃப்ரீஸரைத் திறந்தோம். திறந்து பார்த்ததுமே ரெண்டு பேரும் அதிர்ந்து போயிட்டோம். ஃப்ரீஸர்க்குள்ளே ஒரு பெண்ணோட டெட்பாடி

இருந்தது. பாடிக்குத் தலை இல்லை. தலை இல்லாத அந்த பாடியைப் பார்த்ததும் ஏதோ விபரீதம் நடந்து இருக்குன்னு டாக்டர்க்கு தகவல் கொடுத்தோம்.''

டாக்டர் இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

''வாங்க... மொதல்ல பாடியைப் பார்த்துடலாம்.''

மார்ச்சுவரியின் அறைக் கதவை அய்யாசாமி திறந்து விட டாக்டர் பஞ்சாபகேசனும் இன்ஸ்பெக்டர் சேதுவும் உள்ளே போனார்கள். உள்ளே ஏ.ஸி.யின் பனிக்குளிர் உறைந்து போயிருந்தாலும் - அதையும் மீறிக் கொண்டு நாசிக்குப் பிடிக்காத ஒரு வாடை அடித்தது. அறையின் மூலையில் ஒரு பெரிய ஐஸ் பார் தெரிய, ஆண் உடல் ஒன்று அதன் மேல் மல்லாந்து தெரிந்தது.

''எந்த ஃப்ரீஸர்?''

சூசை வேகமாய் முன்னால் போய் சுவரில் பொருத்தப்பட்டு இருந்த ஃப்ரீஸரை இழுத்தான்.

உள்ளே-

பனிப்புகை பரவியிருக்க ஒரு பெண்ணின் தலை இல்லாத உடல் தெரிந்தது. அறுபட்ட கழுத்தில் ரத்தம் உறைந்து போயிருந்தது. தோள்பட்டை, மார்பு, இவைகளை வைத்துப் பார்க்கும் போது இளம் பெண் போல் தெரிந்தது.

''பாடியை வெளியே எடுத்துக் கிடத்து!''

சேது சொல்ல, அய்யாசாமியும் சூசையும் ஃப்ரீஸரில் இருந்த அந்தப் பெண்ணின் உடலை எடுத்துக் கீழே கிடத்தினார்கள். டாக்டர் குனிந்து பார்த்துவிட்டு சொன்னார்.

''ஏதோ ஒரு கூர்மையான ஆயுதத்தால் கழுத்தை பிசிறு இல்லாமல் வெட்டியிருக்காங்க... இன்ஸ்பெக்டர்! கொலையாளி இதுக்காக டாக்டர்கள் ஆபரேஷன் செய்ய உபயோகப்படுத்தற கத்தியைப் பயன்படுத்தியிருக்கணும். சாதாரண பழம் நறுக்கற கத்தியால் இப்படி துல்லியமாய் கழுத்தை வெட்ட முடியாது.''

சேதுவின் பார்வை இப்போது அய்யாசாமி,



சூசைமேல் திரும்ப - அவர்கள் இருவரும் கைக்கூப்பி கதறியபடி அவருடைய கால்களில் விழுந்தனர்.

''ஸார்...! எங்களுக்கும் இந்த சம்பவத்துக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. தயவு பண்ணி எங்க பேர்ல சந்தேகப்பட்டுடாதீங்க.''

''ட்யூட்டியில் நீங்க ரெண்டு பேர்தான் இருந்து இருக்கீங்க... உங்களை மீறி உள்ளே யார் வந்து இந்த பாடியை வெச்சுட்டுப் போயிருக்கணும்?''

''தெரியலை ஸார்...''

சேது டாக்டரை ஏறிட்டார்.

''டாக்டர்! இவங்க சொல்றது உண்மையா பொய்யா...? .இவங்களை எந்த அளவுக்கு நம்பலாம்...?''

''இன்ஸ்பெக்டர்! இவங்க ரெண்டு பேரும் தப்பு பண்ணியிருக்க வாய்ப்பு இல்லை. மொதல்ல தலையில்லாத இந்தப் பெண்ணோட பாடி யார்ன்னு தெரிஞ்சா பாடி இங்கே எப்படி வந்ததுன்னு கண்டு பிடிச்சுடலாம்...!''

''ஓ.கே... இப்ப இந்த நிமிஷம் ஹாஸ்பிட்டல்ல எவ்வளவு பெண் நோயாளிகள் இருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியுமா...?''

''நூற்றி எழுபத்தேழு பேர்.''

''அந்தப் பெண் நோயாளிகள் அத்தனை பேரும் இப்ப ஹாஸ்பிட்டலில் இருக்காங்களான்னு செக் பண்ணிப் பாருங்க... உண்மை தெரிஞ்சுடும்...''

''பார்த்துடலாம் வாங்க...'' டாக்டர் பஞ்சாபகேசன் தன்னுடைய அறையை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட, இன்ஸ்பெக்டர் சேது தன் தலையில் இருந்த தொப்பியை பொருத்திக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார்.

மனதுக்குள் சின்னதாய் ஒரு கேள்விக்குறி முளைத்து - அது பெரிய அளவில் விஸ்வரூபம் எடுத்தது.

'தலையில்லாத இந்தப் பெண் யார்?''

'இந்த உடலை இவ்வளவு பெரிய ஹாஸ்பிட்டலின் மார்ச்சுவரிக்குள் யார் கொண்டு வந்து, எப்படி வைத்துவிட்டுப் போனார்கள்?' சேது யோசித்துக் கொண்டே நடந்தார்.

# 3

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்

ஆண்களின் கண்களைக் காட்டிலும் பெண்களின் கண்கள் அழகாய் இருப்பதற்குக் காரணம் அவர்கள் அதிகமாகக் கண்சிமிட்டுவதுதான். ஆண்கள் ஒரு வருடத்திற்கு எண்பது லட்சம் முறை கண் சிமிட்டுகிறார்கள். பெண்கள் ஒரு கோடி முறை கண் சிமிட்டுகிறார்கள். 'கண்கள் அதிகமாக சிமிட்டப்படும்போது ரத்தம் அதிகமாகப் பாய்வதால் கண்கள் அழகாகின்றன' என்கின்றது உயிரியல் தத்துவம்.

ஐஸ்வர்யப் பெருமாள், கர்ப்பக்கிருகத்தில் ஐந்தரை அடி உயர விக்ரகத்தில் சங்கு - சக்கரத்தோடும் அபய ஹஸ்தத்தோடும் தீப ஒளியில் காட்சியளித்தார். இடையில் வெண்மை வஸ்திரம். கழுத்தில் துளசிமாலை. நெற்றியில் திருமண்ணோடு ஸ்ரீ சூர்ணம். அம்சமான அலங்கார கோலம்.

நலந்த பட்டர் கற்பூர ஆரத்தி காட்டிக் கொண்டே சொன்னார். ''மூலவரின் திருநாமம் ஸ்ரீ சௌம்ய நாராயண ஐஸ்வர்யப் பெருமாள். தாயாரின் பெயர் நீல பங்கஜாட்சி. உற்சவ மூர்த்தியின் பெயர் ஸ்ரீ ஹரிஹர நாராயணன். இந்தக் கோயிலின் ஆலய விமானத்தில் பெருமாள் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், சயன கோலத்திலும், நர்த்தன கோலத்திலும் காட்சியளிப்பது ஒரு அற்புதமான விஷயம். இது மாதிரியான ஒரு அமைப்பு எந்தக் கோயிலிலும் கிடையாது.''

பட்டர் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ஒவியா குறுக்கிட்டாள். ''பட்டரே...!''

''சொல்லுங்கோ..!''

''ஒரு அர்ச்சனை பண்ணணும்!''



''யார் பேர்க்கு?''

''என்னோட அப்பா பேர்க்கு!''

''மன்னிக்கணும்... உங்களுக்குப் பின்னாடி ஒரு அறிவிப்பு எழுதி வெச்சிருக்கோம். நீங்க பார்க்கலையா?''

''என்ன அறிவிப்பு?''

ஒவியா உட்பட எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். எந்தக் காலத்திலோ எழுதி வைக்கப்பட்ட அந்த அறிவிப்பு பெயிண்ட் உதிர்ந்து போன எழுத்துகளில் தெரிந்தது.

### பக்தர்களுக்கு ஓர் அறிவிப்பு!

**இந்த ஐஸ்வர்யப் பெருமாள் திருக்கோயிலில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்ய விரும்புபவர்கள் தங்கள் பெயரையோ மற்ற உறவுகளின் பெயரையோ சொல்லக் கூடாது. சுவாமி பெயர்க்கு மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும்.**

அந்த அறிவிப்பைப் படித்த ஒவியா பட்டரை ஒரு வியப்புப் பார்வை பார்த்தாள்.

''எதுக்காக இப்படி ஒரு அறிவிப்பு?''

''எந்த ஒரு பக்தரும் நன்னலத்தோடு இங்கே வந்து பெருமாளை சேவிக்கக்கூடாது. எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்கணும். சுவாமி பேர்ல ஒருத்தர் அர்ச்சனை பண்ணினார்ன்னு சொன்னா அந்த அர்ச்சனையில் எல்லா உயிர்களும் அடக்கம். புல் பூண்டு, மரம், செடி, கொடி முதல் எல்லா ஜீவராசிகளும் இறைவனுக்குள் அடங்கிவிடும். சுவாமி பேர்க்கு அர்ச்சனை பண்ணும்போது இந்த பூலோகத்தில் இருக்கிற எல்லா உயிரினங்களையும் நினைக்கிறதுக்கு சமம். அதில் நீங்களும் அடக்கம். உங்களோட எதிரிகள்கூட அந்தப் பட்டியலுக்குள் வந்துடுவாங்க. உங்களுக்கு இன்னமும் தெளிவாய் விளக்கமாய் புரியணும்ன்னா ஒரு உதாரணம் சொல்றேன். ட்யூப்லைட்டை உங்க வீட்டு ஹாலில் போட்டா, குடும்பத்தில் உள்ள நாலு பேர்க்கு

மட்டும்தான் வெளிச்சம் கிடைக்கும். அந்த ட்யூப்லைட்டை ஒரு மண்டபத்தில் போட்டா எத்தனையோ பேர்க்கு அந்த வெளிச்சம் கிடைக்கும். அது மாதிரி நம் பேரில் அர்ச்சனை செய்யறதைக் காட்டிலும் சுவாமி பேர்க்கு செஞ்சா நமக்குள்ளே அனைவரையும் நேசிக்கிற பக்குவம் வளரும்.''

பாரதி கண்ணன் புன்னகைத்தான்.

''பரவாயில்லையே! ஒரு அர்ச்சனைக்குப் பின்னாடி இவ்வளவு பெரிய பொது நலத் தத்துவம் ஒளிஞ்சிருக்கு...''

பட்டர் சிரித்தார்.

''இந்த 'அர்ச்சனை' மட்டுமல்ல; இறைவனோடு சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் அர்த்தம் பொதிந்தவைதான். கோயிலுக்கு வந்து மொட்டை போடுவது, காது குத்துவது, எல்லாமே நம்ம உடம்பின் ஆரோக்யத்தோடு சம்பந்தப்பட்ட விஷயங்கள்...''

''எப்படி?''

''மொட்டை போடும்போதும் சரி; காது குத்தும்போதும் சரி; அந்த இடத்தில் உள்ள நரம்புகள் தூண்டிவிடப்பட்டு நம்ம உடல் ஆரோக்கியமாயிருக்கும். பெண்கள் மூக்குக் குத்தி தங்கத்தாலான மூக்குத்தி போடறதிலேயும் ஒரு மருத்துவ குணம் இருக்கு. தங்கம் அக்னிக்கு சமமானது. மூக்கில் தங்க மூக்குத்தி அணியும் போது அது மூக்கில் சென்று வரும் மூச்சுக்காற்றை சுத்தப்படுத்தி இதயத்தை ஆரோக்கியமாய் வெச்சிருக்கும். இந்தக் காரணத்தால்தான் பெண்களுக்கு அவ்வளவு சுலபத்துல ஹார்ட் அட்டாக் வர்றது இல்லை...''

கீர்த்தி வாசன் சிரித்தான்.

''பரவாயில்லையே...! உங்ககிட்டே பேசிட்டிருந்தா நிறைய விஷயங்கள் கிடைக்கும் போலிருக்கே?''

''இது ஒண்ணும் நானாய் கண்டுபிடிச்சதில்லை. மகான்களும் சித்தர்களும் சொல்லிட்டுப் போனதைத்தான் நான் கிளிப்பிள்ளை மாதிரி



சொல்லிட்டிருக்கேன்.''

''நாங்க இந்தக் கோயிலை முதல் தடவையாய் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி பார்த்தபோது சிதிலமான இந்தக் கோயிலில் சுவாரஸ்யமான செய்திகள் எதுவும் இருக்காதுன்னு நினைச்சோம். இப்ப நீங்க பேசறதைப் பார்த்தா சுவையான விஷயங்கள் நிறைய இருக்கும் போலிருக்கே!''

பட்டர் பெருமையாய் தலையசைத்தார்.

''இந்த ஐஸ்வர்யப் பெருமாளோட கோயிலின் அருமை பெருமைகள் வெளியுலகத்துக்குத் தெரியாமல் போனதுக்குக் காரணம் இந்தக் கோயிலைப்பத்தி எடுத்துச் சொல்றதுக்கு சரியான நபர்களோ, மீடியாக்களோ இல்லாததுதான். இந்தக் கிராமத்து ஜனங்களையே எடுத்துக்கோங்க. யாரும் கோயிலுக்கு வரமாட்டாங்க. இங்கே வர்ற பக்தர்களை விரல் விட்டு எண்ணிடலாம். அவங்களும் பெருமாளை சேவிக்க வர்றது கிடையாது. வீட்ல இருக்கப் பிடிக்காமே வர்ற ரிடையர்டு பேர்வழிகள், கோயில் பிரகாரத் திண்ணையில் உட்கார்ந்து ஊர்வம்பு பேசிட்டு போயிடுவாங்க...! ஏதோ இன்னிக்கு தெய்வாதீனமாய் இந்தக் கோயிலைப்பற்றி எடுத்துச் சொல்றதுக்காக நீங்க எல்லாரும் வந்து இருக்கிங்க... எனக்குத் தெரிஞ்சதை சொல்றேன். நல்லவிதமா படம் எடுத்து டெலிகாஸ்ட் பண்ணுங்க...''

''மொதல்ல சுவாமி பேர்ல அர்ச்சனை செய்யுங்க. அப்புறமா ஒரு தடவை கோயிலைச் சுற்றிப் பார்த்துட்டு எதுக்கு முக்கியத்துவம் கொடுக்கணுமோ அதுக்குக் கொடுத்து படப்பிடிப்பை நடத்திக்கலாம்...!''

''இதோ...! அர்ச்சனை பண்ணிடலாம். இங்கே அர்ச்சனை எல்லாம் தமிழ்லதான்.'' சொன்னவர் கணீரென்ற குரலில் 'குலம் தரும், செல்வம் தந்திடும், அடியார் படுதுயராயின வெல்லாம் நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா எனும் நாமமே...!' என்ற ராமானுஜர் பாடலைப் பாடிக் கொண்டே கர்ப்பக்கிருகத்துக்குள் நுழைந்தார் பட்டர்.

ஓவியா தன் இரண்டு உள்ளங்கைகளுக்குள் ஒளித்து வைத்து இருந்த அந்தச் சிறிய தீப்பெட்டி அளவே உள்ள இன்ஃப்ரா ரெட் காமிராவை யார்க்கும் தெரியாமல் கர்பக்கிருக சுவர்களை நோக்கித் திருப்பினாள். யாரும் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு காமிராவை இயக்கினாள்.

காமிராவிலிருந்தும் வெளிப்பட்ட அந்த கண்ணுக்குத் தெரியாத இன்ஃப்ரா ரெட் கதிர்கள் கர்ப்பக்கிருகத்தில் இருந்த நான்கு பக்க சுவர்களையும் ஊடுருவி தேடியது. திருட்டுத்தனமாய் கதிர்களைப் பாய்ச்சியது.

## 4

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

பெண்கள் ஏன் வேதம் ஓதக்கூடாது? என்ற சர்ச்சையான கேள்விக்கு சிவாச்சாரியார் சொன்ன பதில்:

வேத மந்திரங்கள் ரிஷிகளாலும் முனிவர்களாலும் உருவாக்கப்பட்டு உச்சரிக்கப் பட்டவை. அந்த வேத மந்திரங்களை ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில்தான் சொல்ல வேண்டும். மாத்திரைகளில் எப்படி ஸ்ட்ராங், டபுள் ஸ்ட்ராங் என்று ஒவ்வொன்றுக்கும் தனியான ஒரு வீரியம் இருக்கிறதோ அதுபோல ஒவ்வொரு வேத மந்திரத்துக்கும் ஒரு தனி சக்தி உள்ளது. ஒரு வேத மந்திரம் முதன் முதலில் எந்த அலைவரிசையில் சொல்லப்பட்டதோ, மீண்டும் மீண்டும் அதே அலைவரிசையில் சொல்லப்பட வேண்டியது அவசியம். மாறுதலாக சொல்லும் போது நம் உடலிலும் அந்த மாறுதல்கள் எதிரொலிக்கும். உடல் என்று வரும் போது பெண்ணுக்கும் ஆணுக்கும் நிறைய மாறுதல்கள்! பெண்கள் வேதம் சொல்லும் பொழுது அதன் அதிர்வுகளால் கர்ப்பப் பையில் கூட மாறுதல்கள்



உண்டாகும் என்கிறது சாஸ்திரம். உடலில் மாறுதல் ஏற்படும் போது உள்ளத்திலும் மாறுபாடு தோன்றும். சிலருடைய சாந்தமான குணம் கூட மாறும். பெண் தன்மையிலிருந்துகூட மாறுதல் ஏற்படும். எப்படி ஒரு ட்ரான்சிஸ்டரில் அலைவரிசைக்கான முள் ஒரு புள்ளி நகர்ந்தாலும் ஸ்டேஷன் மாறிவிடுமோ...? அது போல்தான்!

ஜி. ஹெச்

டாக்டர் பஞ்சாபகேசன் அறை. இன்ஸ்பெக்டர் சேதுவும் டாக்டரும் அரைமணிநேரத்தை காத்திருப்பில் செலவழித்திருக்க, ஹாஸ்பிட்டலின் பி.ஆர்.ஓ. விக்டர் உள்ளே வந்தார். அந்த இரவு நேரத்திலும் முகம் வியர்த்துப் போய் களைத்திருந்தது.

டாக்டர் கேட்டார்.

''என்ன விக்டர்...? பெண் நோயாளிகளின் எண்ணிக்கையை சரி பார்த்தீங்களா?''

''பார்த்தேன் டாக்டர். மொத்தம் நூற்றி எழுபத்தேழு பேர். டிஸ்சார்ஜ் இன்னிக்கு யாருமில்லை.''

''தரோவா செக் பண்ணீங்களா?''

''பண்ணிட்டேன்... டாக்டர்!''

''சரி... நீங்க போங்க..!''

விக்டர் தயங்கியபடி நின்றார்.

''டாக்டர்...!''

''என்ன?''

''ஏதாவது பிரச்னையா?''

''பிரச்னைதான்...! இப்போதைக்கு எதுவும் வேண்டாம். நாளைக்கு சொல்றேன்... நீங்க போய் உங்க ட்யூட்டியைப் பாருங்க.''

விக்டர் தலையசைத்துவிட்டு அறையிலிருந்தும் வெளியேறிப் போக, இன்ஸ்பெக்டர் சில விநாடிகள் மௌனம் காத்துவிட்டு நிமிர்ந்தார்.

''டாக்டர்..! பெண் நோயாளிகள் யாரும் காணாமே போகலை. ஸோ... இறந்து போன

பெண், நோயாளிகளைப் பார்க்க வந்த பெண்ணாய் இருக்கலாமோ?''

''எனக்கும் அப்படி ஒரு சந்தேகம் இருக்கு...! விசிட்டர்ஸ் ஹவர்ஸ் நேரத்துல நூற்றுக்கணக்கான பேர் இந்த ஜி.ஹெச்சுக்குள்ளே வந்துட்டுப் போறாங்க. இதுல யாரைன்னு நாம் கண்டுபிடிக்க முடியும்...!''

''டாக்டர்! நான் உங்ககிட்டே ஒரு கேள்வி கேட்டா தப்பா எடுத்துக்கமாட்டீங்களே?''

''நோ... நோ... கேளுங்க...''

''மார்ச்சுவரியில் வேலை பார்க்கிற அய்யாசாமி, சூசை இந்த ரெண்டு பேர் மேலேயும் உங்களுக்கு ஏன் சந்தேகம் வரலை..?''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்! அவங்களை என்னால சந்தேகப்பட முடியலை. காரணம், தப்பு பண்ணினது அவங்களாய் இருக்கிற பட்சத்தில் மார்ச்சுவரியில் ஒரு பாடி அதிகமாய் இருக்கிற விஷயத்தை என்கிட்டே சொல்லாமே மறைச்சு இருக்கலாமே! பதறியடிச்சிட்டு வந்து ஏன் சொல்லணும்...?''

''அது ஏன் ஒரு நடிப்பாய் இருக்கக்கூடாது?''

''இன்ஸ்பெக்டர்! நீங்க அப்படி அந்த அய்யா சாமியையும் சூசையையும் சந்தேகப்படறதாய் இருந்தா அந்த ரெண்டு பேர்க்கும் முன்னாடி மார்ச்சுவரி ட்யூட்டியில் இருந்த துரையப்பனையும் முனிராஜையும் சேர்த்து சந்தேகப்படணும்.''

''ம்... யூ... ஆர் கரெக்ட் டாக்டர்...! அவங்க பேர்லேயும் எனக்கு சந்தேகம் இருக்கு... அந்த நாலு பேரையும் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் லாக்கப்புல வெச்சு ஒரு ரெண்டுமணி நேரம் விசாரிச்சா போதும். எல்லா உண்மைகளும் வெளியே வந்துடும்...!''

டாக்டர் தலையசைத்தார். ''ஓ.கே... இன்ஸ்பெக்டர்...! உங்களுக்கு அப்படி ஒரு எண்ணம் இருந்தா அந்த நடவடிக்கையை நீங்க தாராளமாய் எடுக்கலாம்.''

''தாங்க்யூ... டாக்டர்..! பட்... அந்த நடவடிக்கையை எடுக்கிறதுக்கு முந்தி எனக்கு அந்த தலையில்லாத பெண்ணின் போஸ்ட்



மார்ட்டம் ரிப்போர்ட் வேணும்...''

''ரிப்போர்ட் நாளைக்குக் காலையில் பதினோரு மணிக்குத்தான் கிடைக்கும்.

இன்ஸ்பெக்டர் சேது எழுந்து கொண்டார்.

''ஓ.கே... டாக்டர்... நாளைக்கு காலையில் பதினோரு மணிக்கு வர்றேன். பாடி போஸ்ட் மார்ட்டம் போகிற வரை ரெண்டு கான்ஸ்டபிள்கள் மார்ச்சுவரியில் காவலுக்கு இருப்பாங்க...''

டாக்டர் பஞ்சாபகேசனும் தலையாட்டியபடி ஒரு பெருமூச்சோடு எழுந்து கொண்டார். தளர்வான குரலோடு இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

''ஒரு சின்ன ரெக்வெஸ்ட்!''

''சொல்லுங்க டாக்டர்!''

''கொலையுண்ட அந்த தலையில்லாத பெண் யார்ன்னு தெரியறவரைக்கும் எந்த ஒரு மீடியா பீப்பிளுக்கும் தகவல் கொடுக்க வேண்டாம்.''

சேது புன்னகைத்தார்.

''இது எனக்குத் தெரியாதா...? மொதல்ல போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கைக்கு வரட்டும் டாக்டர்...! அதைப் பார்த்துட்டு அப்புறமாய் நடவடிக்கை எடுப்போம்...!''

சேது டாக்டரின் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு அறையினின்றும் வெளியேறினார்.

## 5

### விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

பெண்கள் எவ்வளவு அழகாக இருந்தாலும் சரி கோபம் வரும்போது அவர்கள் முகம் கோணலாகி - பார்க்க சகிக்க முடியாத அளவுக்கு மாறிவிடும். அப்போது முக அழகு கெடுவது மட்டுமல்ல; மனமும் பாதிக்கப்படுகிறது. கோபத்தால் ரத்த அழுத்தம் உயர்ந்து ரத்த வேகம் அதிகரிக்கிறது. நரம்புகள் விறைப்படைந்து பின் திடீரென்று தளர்ந்து போவதால் அவைகள்

பலவீனம் அடைகின்றன. நரம்புகள் பலவீனம் அடைவதால் உடம்பில் பலவித நோய்கள் உண்டாக வாய்ப்புகள் உருவாகின்றது. கோபநிலையில் மனம் இல்லாத போது அறிவின் இயக்க வேகம் விநாடிக்கு 14 சுற்றுக்கு மேல் செல்கிறது. அதுவே கோபத்தில் இருக்கும் போது 25 சுற்று 30 சுற்று என்று உயர்கின்றது. அதிகப்படியான கோபம் வரும்போது இன்னும் சுழற்சி வேகம் அதிகரித்து விநாடிக்கு 40 சுற்று என்ற அளவினை நெருங்கினால் உயிராற்றலின் வெளியேற்ற அளவையும் வெளியேற்ற வேகத்தையும் தாங்க முடியாமல் போகும். ஒரு ஆணைக் காட்டிலும் ஒரு பெண்ணுக்கு வரும் கோபம் அவளைப் பாதிக்க காரணம் அவளுடைய மென்மையான உடல் அமைப்பு. சில பெண்கள் முப்பது வயது முடிவதற்குள் கிழவி போல் தோற்றம் அளிப்பதற்குக் காரணம் அவர்கள் அடிக்கடி கோபப்படுவதுதான் என்று உடல் இயல். வல்லுநர்களும் மன இயல் வல்லுநர்களும் கற்பூரம் அடிக்காத குறையாக சத்தியம் செய்கிறார்கள்.

கிட்டத்தட்ட ஐந்து நிமிடம்.

கோயிலின் கர்ப்பக்கிருகத்திலிருந்து அர்ச்சனையை முடித்துக் கொண்டு வெளியே வந்த நவநீத பட்டர் எல்லோர்க்கும் தீபாராதனையைக் காண்பித்து துளசி தீர்த்தம் கொடுத்து - பின் சடாரியை தலைகளில் வைத்தார்.

கீர்த்திவாசன் நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் காணிக்கையாய் தட்டில் போட - பட்டர் அவனை ஏறிட்டார்.

''தப்பா நினைக்காதீங்கோ... இந்த ரூபாய் நோட்டை எடுத்து அந்த உண்டியல்ல போட்டுருங்க...''

''ஏன்...?''

''தட்டுக் காசு எடுத்து நான் ஜீவனம் பண்றதில்லை. எனக்கு ஊர் மணியம் நல்ல சம்பளம் தர்றார். நான் தங்கியிருக்கிற வீட்டுக்கு



வாடகை கிடையாது. மாசம் ஒரு அரிசி மூட்டையும் பருப்பும் ஊர் பண்ணை மானியமாக் கொடுத்துடறார். எனக்கு வேற ஒரு செலவும் இல்லை. தட்டுல விழற காசு எல்லாமே கோயிலுக்குத்தான்னு ஒரு சங்கல்பம் பண்ணி கிட்டு அப்படியே நடந்துட்டும் வர்றேன். இந்தக் கோயில் சிதிலமடைந்து போயிருந்தாலும் இங்கேயிருக்கிற ஐஸ்வர்யப் பெருமாள் என்னை நல்லாவே வெச்சிருக்கார்.''

பாரதி கண்ணன் சிரித்தான்.

''பொதுவா கோயில்ல இருக்கிற அர்ச்சகர்களும் பூசாரிகளும் தட்டுல விழற காசைத்தான் பெரிசா நம்பியிருப்பாங்க. அந்த விஷயத்திலும் நீங்க ரொம்பவே வித்தியாசமாய் இருக்கீங்க. நாங்க சென்னையிலிருந்து புறப்பட்டு வரும்போது இந்த ஐஸ்வர்யப் பெருமாள் கோயில் மேட்டர்தான் இன்ட்ரஸ்டிங்காய் இருக்கும்னு நினைச்சோம். பட் நீங்களே ஒரு இன்ட்ரஸ்டிங் பர்சனாய் இருக்கீங்க.''

பட்டர் புன்னகைத்தார்.

''ஏதோ என்னோட மனசுக்குப் பட்டதை - அது சரியா தப்பான்னு எனக்குத் தெரியாது... தீர்மானமாய் பல வருஷமாய் பண்ணிட்டு இருக்கேன்.''

ஒலியா கீர்த்திவாசனிடம் திரும்பினாள்.

''கீர்த்தி...! நாம வந்த வேலையை ஆரம்பிக்கலாம். இப்ப ஷூட்டிங்கை ஸ்டார்ட் பண்ணினால்தான் சாயந்தரத்துக்குள்ளே முடிச்சுகிட்டு கும்பகோணம் போய் ஹோட்டல்ல கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு சென்னைக்குக் கிளம்ப முடியும்.''

''இதோ! ஸ்டார்ட் பண்ணிடலாம்...! பாரதி! காமிராவை செட் பண்ணு.''

''பத்து நிமிஷம்...!'' பாரதி கண்ணன் சொல்லிவிட்டு தன் அஸிஸ்டெண்ட்டுகளோடு நடக்க, ஒலியா ''கீர்த்தி!'' என்றாள்.

''என்ன?''

''இந்தக் கோயிலைப்பற்றி ஒரு 'இன்ட்ரடக்ஷன்' ஒருதடவை ரிகர்சல் பார்த்துடலாமா?''

''ம்... பார்த்துடலாமே! ஏதாவது ப்ரிப்பேர் பண்ணி வெச்சிருக்கியா...?''

''ம்...''

''பேசு பார்க்கலாம்..!''

ஒலியா தன்னிடம் இருந்த மைக் பட்டனை எடுத்து இடது தோள்பட்டை ஜாக்கெட் விளிம்பில் பொருத்திக் கொண்டு மதில் சுவர்க்கு போய் நின்றாள். உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு புன்னகையோடு கணீரென்று பேச ஆரம்பித்தாள்.

நேயர்களுக்கு வணக்கம்.

தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள புராதனக் கோயில்களைத் தேடிப் பிடித்து, உங்கள் வரவேற்பறைக்குக் கொண்டு வரும் சீரிய பணியை மதியொளி டி.வி. செய்து கொண்டு இருப்பதைத் தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். கூட்டம் உள்ள கோயில்களைக் காட்டிலும் கூட்டம் இல்லாத கோயில்களில் இறை உணர்வும் கலையழகும் கொட்டிக் கிடப்பதை எங்கள் படக்குழுவினரால் பார்க்க முடிகிறது. அந்த வகையில் இன்றைக்கு நாம் பார்க்கப் போகிற கோவில்தான் ஐஸ்வர்யப் பெருமாள் கோயில். நான் இப்போது பேசிக்கொண்டு இருப்பதும் அந்தக் கோயிலின் உள்ளே இருக்கும் உட்பிரகாரத்தில் இருந்துதான். சரி...! இந்தக் கோயில் எங்கே, எந்த இடத்தில் அமைந்து இருக்கிறது என்று பார்க்கலாமா? இந்த திருக்கோவில் அமைந்துள்ள கிராமத்தின் பெயர் ஐஸ்வர்யபுரம். இந்த கிராமம் கும்பகோணத்திலிருந்து நேர் கிழக்கில் முப்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அழகிய கிராமம். நகரத்தின் நாகரீகங்கள் இன்னமும் இங்கே எட்டிப் பார்க்கவில்லை. அதனால்தானோ என்னவோ இங்கே மனிதாபிமானம் இன்னமும் உயிர்ப்போடு வாழ்ந்து கொண்டு இருக்கிறது.

அற்புதம் நிறைந்திருக்கும் இந்தக் கோயிலில் நவநீத பட்டர் என்பவர் கடந்த பல வருடங்களாக ஐஸ்வர்யப் பெருமாளுக்கு மூன்று கால பூஜைகளை செய்து வருகிறார். அவரிடம் இப்போது இந்தக் கோயிலைப் பற்றிக் கேட்போம்.''



ஒலியா பேசி முடிக்க கீர்த்தி வாசன் ''ஓ.கே... இப்படியே பேசிடு...! அதோ...! பாரதியும் காமிராவோடு வந்தாச்சு....''

ஒலியா சொன்னாள். ''மொதல்ல பட்டர்கிட்டே பேட்டி எடுத்துடுவோம்...!''

''அதுவும் சரிதான்...! நீ பேட்டி எடுத்து முடிக்கிறதுக்குள்ளே நான் கோயிலைச் சுற்றிப் பார்த்துட்டு வந்துடறேன்! அப்பத்தான் எந்தெந்த இடத்துல படப்பிடிப்பை வெச்சுக்கலாம் என்கிற ஒரு ஐடியா உருவாகும்... வேலையும் சீக்கிரமாய் முடியும்...''

''நீ போய் பார்த்துட்டு வா கீர்த்தி... இங்கே படப்பிடிப்பை சீக்கிரமாய் முடிச்சுட்டா திருப்பாம்புரம் கோயிலுக்குப் போய் பாதி சூட்டிங்கை ஷெட்யூல் பண்ணிடலாம்.

''மொதல்ல... இங்கே சூட்டிங்கை முடிப்போம். அப்புறம் திருப்பாம்புரம் போறதைப் பத்தி யோசிப்போம்.'' கீர்த்தி சொல்லிவிட்டு நகர, ஒலியா பட்டரிடம் திரும்பினாள்.

''திருப்பாம்புரம் கோயில் இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

கிலவிநாடிகள் பட்டர் யோசித்துவிட்டு சொன்னார்.

''அந்தக் கோயில் கும்பகோணம் - காரைக்கால் நெடுஞ்சாலையில், கும்பகோணத்திலிருந்து இருபது கிலோமீட்டர் தொலைவில் உள்ள கற்கத்தி கிராமத்திலிருந்து தெற்கே மூணு கிலோமீட்டர் போனால் வரும். ரொம்பவும் விசேஷமான கோயில். அந்த திருத்தலத்தில் ராகுவும் கேதுவும் பிற கோயில்களில் இருப்பதைப் போல் தனியே இல்லாமல் ஒரே சரீரமாகி கடவுளை நெஞ்சில் நிறுத்தி ஈசனின் அருளைப் பெற்றதாய் ஐதீகம். அங்கே இருக்கும் ராகு கேதுவுக்கு 'ஏக சரீர ராகு கேது' என்று பெயர்.''

ஒலியா வியப்பில் தன் புருவங்களை உயர்த்தினாள். ''பரவாயில்லை...! மற்றக் கோயில்களைப் பற்றியும் தெரிஞ்சு வெச்சிருக்கீங்க...''

பட்டர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு - பாரதி கண்ணன் காமிரா கோணத்தில் மும்முரமாய்

இருப்பதையும் பார்த்துவிட்டு - ஓவியாவிடம் குரலைத் தாழ்த்தினார்.

"உன்னோட பேர் ஓவியாதானே?"

"ஆமா...!"

"நான் ஒரு விஷயம் சொன்னா நீ ஆச்சர்யப் படமாட்டியே...?"

"சொல்லுங்க..."

"எனக்குக் கோயிலோட வரலாறுகளும் தெரியும்; மனித மனங்களில் ஓடிக்கிட்டு இருக்கிற எண்ணங்களும் தெரியும்."

"உண்மையாவா...?"

"ம்... இதுல பொய் சொல்ல என்ன இருக்கு?"

ஓவியா புன்னகைத்தாள். "சரி...! இப்ப என்னோட மனசுல எது மாதிரியான எண்ணங்கள் ஓடிக்கிட்டு இருக்குன்னு உங்களால சொல்ல முடியுமா?"

"முடியும்..."

"சொல்லுங்க... பார்க்கலாம்..."

**"அதி நவீன இன்ஃப்ரா ரெட் காமிராவால் கர்ப்பக்கிருகத்தில் இருந்த சுவர்களை போட்டோ எடுத்து இருக்கோமே! சுவர்க்குள் இருக்கிற அந்தக் கல்வெட்டு வாசகங்கள் காமிராவில் பதிவு ஆகி இருக்குமோ...** இருக்காதோ என்கிற எண்ணம்தான் உன்னோட மனசுக்குள்ளே இப்ப ஓடிட்டு இருக்கு...!"

ஓவியா திக்கென்று அதிர்ந்து போய் பட்டரையே பார்த்தாள்.

## 6

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

இந்தியாவின் தலை காஷ்மீர். காஷ்மீர்க்கு இரண்டு தலைநகரங்கள். ஒன்று: ஜம்மு. இரண்டாவது காஷ்மீர்.



காஷ்மீர் வாழ் மக்களுக்கு இரண்டு குடியுரிமைகள். வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் நிலம் வாங்க முடியாது.

காஷ்மீர்ப் பெண்கள் வெளி மாநிலத்தவரை மணந்தால் குடியுரிமை பறிபோகும். சொத்துவரி, நிலவரி, காஷ்மீர் மக்களுக்கு இல்லை. கடந்த 50 ஆண்டுகாலமாக காஷ்மீரில் மட்டும் அரிசி, எண்ணெய், கோதுமை, சர்க்கரை ஆகியவைகளின் விலை உயராமல் ஒரே நிலையில் உள்ளது.

இன்ஸ்பெக்டர் சேது தன்னுடைய பைக்கை ஜி. ஹெச்சின் டூ வீலர் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு கீழே இறங்கிய போது பகல் பதினோரு மணி. சென்னை வெய்யில் நடு மண்டையில் இறங்கி சூரென்றது. தலைக்கு தொப்பியைப் பொருத்திக் கொண்டு ஹாஸ்பிட்டலின் வராந்தாவில் வேகமாய் நடந்து டாக்டர் பஞ்சாபகேசனின் அறைக்குள் நுழைந்தார்.

"குட் மார்னிங் டாக்டர்!"

டாக்டர் ஒரு புன்னகையோடு நிமிர்ந்தார். "குட் மார்னிங் இன்ஸ்பெக்டர். இப்பத்தான் உங்களை நினைச்சேன்."

"எனிதிங்க... இம்பார்ட்டண்ட்?"

"இப்பத்தான் அந்தத் தலையில்லாத பெண்ணின் போஸ்ட் மார்ட்டம் கைக்கு வந்தது."

சேது டாக்டர்க்கு எதிரில் இருந்த நாற்காலிக்கு சாய்ந்து கொண்டே கேட்டார்.

"பி.எம். ரிப்போர்ட் என்ன சொல்லுது டாக்டர்?"

"அந்தப் பெண் கொலை செய்யப்பட்டு கிட்டத்தட்ட நாற்பது மணி நேரம் ஆகியிருக்கலாம். பெண்ணோட வயது இருபத்தஞ்சிலிருந்து முப்பது வயதுக்குள். கழுத்தை அறுப்பதற்கு முன்னாலேயே அந்தப் பெண்ணை ஏதோ ஒரு வகையில் சாகடித்துவிட்டு உடம்பில் ரத்தம் உறைந்து போன பிறகு கொலையாளி கழுத்தை அறுத்து இருக்கலாம். அதுக்குப் பிறகு அந்த உடல் கெட்டுப்

போகாமல் இருப்பதற்காக பார்மலினில் போட்டுப் பாதுகாத்துள்ளார்கள்...''

''கொலையாளியோட பர்ப்பஸ் என்ன...? எதுக்காக ஒரு பெண்ணைக் கொலை பண்ணி அவளோட தலையை வெட்டி பார்மலினில் போட்டுப் பாதுகாத்து இந்த மார்ச்சுவரியில் கொண்டு வந்து திருட்டுத்தனமாய் வைக்கணும்...?''

''அதைப்பத்தித்தான் நானும் யோசனை பண்ணிட்டிருக்கேன் இன்ஸ்பெக்டர். ஹாஸ்பிட்டலோட பேரைக் கெடுக்கணும்ன்னு யாரோ திட்டம் போட்டு இப்படியொரு பாதகத்தைப் பண்ணியிருக்காங்க.''

''டாக்டர்...! இனிமேலும் இந்த விஷயத்துல பொறுமை காக்க முடியாது. கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் யார்...? கொலையாளி யார்...? கொலைக்கான மோட்டீவ் என்ன...? இந்த மூணு முக்கியமான கேள்விகளுக்குரிய பதில்கள் வெளியே வரணும்ன்னா-நான் எடுக்கப் போகிற அதிரடி நடவடிக்கைகளுக்கு நீங்க ஆதரவு கொடுக்கணும்.''

''உங்களோட அதிரடி நடவடிக்கை என்ன...?''

''மார்ச்சுவரியில் வேலை பார்க்கிற ஊழியர்களான அய்யாசாமி, சூசை, துரையப்பன், முனிராஜ் - இந்த நாலு பேரையும் அரஸ்ட் பண்ணி லாக்கப்புக்குக் கொண்டு போய் விசாரிக்கிற விதத்துல விசாரிச்சா எல்லா உண்மைகளும் வெளியே வந்துடும்...''

டாக்டர் தோள்களைக் குலுக்கினார்.

''ஓ.கே...! அதுதான் உங்க விருப்பம்ன்னா தாராளமாய் அந்தக் கைது நடவடிக்கையை எடுங்க... பட் ஒரு சின்ன ரிக்வெஸ்ட்...''

''என்ன...?''

''கொலையாளி யார் என்கிற உண்மை தெரிகிற வரைக்கும் பேப்பர்க்கும், டி.வி.க்கும் இந்த நியூஸ் போகவேண்டாமே!''

''ஸாரி... டாக்டர்...! இனிமே எதையும் ஹைட் பண்ண முடியாது. பெண்ணோட உடம்பை



போஸ்ட்மார்ட்டம் பண்ணியாச்சு. ரிப்போர்ட்டும் கைக்கு வந்தாச்சு. லோ பி.டி.ஐ. பீப்பிளுக்கு நியூஸ் கொடுத்தாகணும்.'' சொன்ன இன்ஸ்பெக்டர் தன்னுடைய செல்போனை எடுத்து ஸ்டேஷனில் இருந்த சப் - இன்ஸ்பெக்டர் விஜயகுமாரைத் தொடர்பு கொண்டார்.

''விஜய்...! ரெண்டு கான்ஸ்டபிளைக் கூப்பிட்டுகிட்டு வேன்ல புறப்பட்டு வாங்க. நாலு பேரைக் கைது பண்ணி லாக்கப்புக்கு கொண்டு போகணும்... அப்படியே 'பிரஸ் பீப்பிள் மீட்'டுக்கும் அரேன்ஜ் பண்ணிடுங்க...''

## 7

### விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

எய்ட்ஸ் ஒரு உயிர்க்கொல்லி நோய். இந்த நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் இப்போது ஒரு புதிய மருந்து கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. இந்த மருந்தின் பெயர் 'வேக்ஸ் ஜென் இன்க'. இந்த மருந்தானது எய்ட்ஸைப் பரப்பும் எச்.ஐ.வி. வைரஸை எதிர்க்கும் தன்மை கொண்டது. எனவே இதைத் தடுப்பு மருந்து போல் உடலில் செலுத்திக் கொள்வதால் எச்.ஐ.வி. தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று சோதனையில் தெரியவந்துள்ளது. இப்படி ஒரு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் மும்பை, கல்கத்தா நகரங்களில் உள்ள ரெட்லைட் ஏரியாக்களில் உற்சாகம் கரை புரண்டு ஓடுகிறதாம்.

பட்டர் புன்னகைத்தார்.

''என்னம்மா... இப்படிப் பார்க்கிறே...? நீ யார்க்கும் தெரியாமே பண்ணின திருட்டுத்தனம் எனக்கு மட்டும் எப்படி தெரிஞ்சுதுன்னு பார்க்கறியா...?''

''நா...நா...நாம அப்புறம்... தனியா சந்திச்சு பேசலாமா...?''

ஒவியாவின் நெற்றி வியர்த்துப் போயிருந்தது.

''ம்... பேசலாம்... அதுக்கு முன்னாடி உன்கிட்டே இன்னொரு விஷயத்தையும் சொல்லிடறேன்.''

''எ...ன்...ன...?''

''கர்ப்பக்கிருகத்தோட சுவர்களுக்குள்ளே அந்த கல்வெட்டு வாசகங்கள் இருக்கலாம்ங்கிற நம்பிக்கையில் இன்ஃப்ரா ரெட் காமிராவில் நீ போட்டோ எடுத்தது ஒரு பைசாவுக்குக்கூட உபயோகப் படாது. ஏன்னா நீ தேடிட்டு வந்த கல்வெட்டு வாசகங்கள் அந்த கர்ப்பக் கிருகத்துக்குள் இல்லை...''

ஒவியா தன் பெரிய கரிய விழிகளை விரித்தாள்.

''பி...பி...பின்னே...?''

பட்டர் பதில் சொல்வதற்குள் காமிராமேன் பாரதி கண்ணன் குரல் கொடுத்தான்.

''ஒவியா..! காமிராவோட ஆங்கிள் 'செட்' பண்ணியாச்சு... நீ பேட்டியை ஆரம்பிக்கலாம்...''

''இ... இதோ..!''

''என்ன ஒவியா...! கொஞ்சம் நெர்வஸா தெரியறே...? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கூட ஃப்ரெஷ்ஷா இருந்தே?''

''ஒ...ஒ... ஒண்ணுமில்லை! லேசாய் பசி...!''

''இவ்வளவு காலையில பசியா...? ஃப்ளாஸ்க்ல காபி இருக்கு... சாப்ட்றியா...?''

''வேண்டாம் பாரதி...! பட்டர் கிட்டே பேட்டியை முடிச்சிட்டு ஊர்க்குள்ளே போய் ஏதாவது ஒரு ஹோட்டல்ல டிஃபன் சாப்பிடுவோம்... இப்ப நான் பேட்டியை ஸ்டார்ட் பண்றேன்.''

''ஒ.கே...!''

காமிரா சுழன்றது.

ஒவியா சிறிய உருண்டை மைக்கை கையில் பிடித்தபடி பேச ஆரம்பித்தாள். பட்டர் கொடுத்த அதிர்ச்சியில் ஒவியாவின் பாதி உற்சாகம் காணாமல் போயிற்று. செயற்கையான



உற்சாகத்தோடு பேச ஆரம்பித்தாள்.

''வணக்கம் நேயர்களே! இப்போது இந்த ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலின் பட்டர் உங்களுக்கு கோயிலைப் பற்றி சொல்லப் போகிறார். அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க நானும் ஆவலாக உள்ளேன். கேட்போமா?''

ஒவியா தன் கையில் இருந்த மைக்கை அவரிடம் கொடுத்தாள். பட்டர் வாங்கிப் பேசினார்.

''இந்த டி.வி. நிகழ்ச்சியைப் பார்த்துட்டிருக்கிற எல்லா அன்பர்களுக்கும் அடியேனின் நமஸ்காரம். இந்த ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலைப்பற்றி பேச ஆரம்பிச்சா... ஒரு நாள் போதாது. நிறைய சொல்லலாம். இது ரொம்பவும் புராதனமான கோயில். ஆழ்வார்களால் பாடப்பெற்ற வைணவத்தலம். திருப்பதி பெருமாளைக் காட்டிலும் இந்த ஐஸ்வர்யப் பெருமாள் சக்தி வாய்ந்தவர். சிரத்தை இல்லாமல் இந்த பெருமாளை சேவிச்சா பயன் ஏதும் இருக்காது. 'பெருமான் நம் கண் முன்னே உறைந்து இருக்கறார்.' என்ற எண்ணத்தோடு சேவிக்க வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் பிரார்த்தனை பலிக்கும்.''

''இந்தக் கோயிலோட அமைப்பு எப்படி?'' ஒவியா கேட்க அவர் தொடர்ந்தார்.

''இந்தக் கோயிலுக்கு ரெண்டு பிரகாரம். வெளிப்பிரகாரத்தில் மரங்களும், செடி கொடிகளுமாக பசுமை தழைக்க காட்சி அளிக்கிறது. நுழைவு வாயிலைக் கடந்து ஆலயத்திற்குள் செல்ல - மையப்பகுதியில் தும்பிக்கை ஆழ்வாரும், அவர்க்கு வலது புறம் ஆஞ்சநேயரும் உள்ளனர். கர்ப்பக்கிருகத்தை நோக்கியபடி கருடாழ்வார் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.'' பட்டர் பேசப் பேச ஒவியா இடைமறித்தாள்.

''இந்தக் கோயிலின் மகிமை என்ன?''

''நிறைய இருக்கு...''

''அப்படி மகிமை இருக்கிறதாய் இருந்தா கோயில்ல கூட்டம் இருக்கணுமே...?''

பட்டர் சிரித்தார். ''கூட்டம் இருந்தால் தான் அந்தக் கோயிலில் மகிமை இருக்குன்னு அர்த்தம் இல்லை. என்னைப் பொறுத்தவரை ஒரு கொடுப்பினை இருந்தாத்தான் அந்த நபர் இந்தக் கோயிலுக்குள்ளேயே வர முடியும். அந்த வகையில் பார்க்கப் போனா இன்னிக்கு இந்தக் கோயிலைப் படம் எடுக்க வந்து இருக்கிற நீங்க எல்லோருமே போன ஜென்மத்தில் ஏதோ ஒரு வகையில் புண்ணியம் பண்ணியிருக்கணும்.''

ஓவியா கேட்டாள்.

''இந்த ஐஸ்வர்யப் பெருமாளை இப்படித்தான் வழிபடணும்ன்னு ஏதாவது விதிமுறைகள் இருக்கா...?''

''அப்படியெல்லாம் விதிமுறைகள் எதும் இல்லை. ஆனா திருவோணம் நட்சத்திரம் வர்ற நாட்களில் அஷ்ட ஐஸ்வர்யங்களை வேண்டுவோர் இந்த தலத்தில் அர்த்த ஜாமத்தில் துளசி இலையால் அர்ச்சனை செய்து பசும்பால் நைவேத்தியம் செய்தால் எல்லா ஐஸ்வர்யங்களையும் பெறலாம்.''

''அப்படி செய்தவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்களா?''

''எத்தனையோ பேர்...!'' பட்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பாரதி கண்ணன் காமிராவை அணைத்தான்.

''இதே கோயில்ல வேற ஒரு இடத்துல பேட்டியைக் கண்ட்டினியூ பண்ணிக்கலாம்...'' பாரதி கண்ணனும், உதவியாளரும் காமிராவோடு வெளிப்பிரகாரத்தின் உட்பக்கமாய் நடக்க ஆரம்பித்துவிட - ஓவியா பட்டரையே பார்த்தபடி நின்றாள்.

பட்டர் மார்புக்குக் குறுக்காய் கைகளைக் கட்டிக் கொண்டார். ''என்னம்மா பார்க்கிறே?''

ஓவியா அக்கம் பக்கம் பார்த்துவிட்டு குரலைத் தாழ்த்தினாள். ''நான் தேடிட்டு வந்த கல்வெட்டு வாசகங்கள் அந்தக் கர்ப்பகிருகத்தில் இல்லைன்னு சொன்னீங்க?''

''ஆமா...!''

''அங்கே இல்லைன்னா வேற எங்கே இருக்கு?''



''அதைச் சொல்றதுக்கு முந்தி உன்னோட ஜாதகம் எனக்கு வேணும்...''

''ஜாதகமா...?''

''ம்... ஜாதகம்ன்னா நீ பொறந்த போது கணிச்ச ஜாதகம் கிடையாது.''

''பின்னே?''

''உண்மையிலேயே நீ யாரு...? இந்தக் கோயிலில் இப்படியொரு கல்வெட்டு இருக்குன்னு உனக்கு சொன்னது யாரு...? யாரோட உத்தரவின் பேரில் இன்ஃப்ரா ரெட் காமிராவால் கர்ப்பக்கிருகத்தைப் படம் எடுக்க வந்தே..? இப்ப கேட்ட மூணு கேள்விகளுக்கும் நீ உண்மையான பதில்களைச் சொன்னா அதுதான் நான் கேட்ட ஜாதகம்.''

ஓவியா மனசுக்குள் நகம் கடித்தபடி யோசித்தாள். 'அப்பாவைப் பற்றி இந்த பட்டரிடம் சொல்லலாமா... வேண்டாமா?'

பட்டர் சிரித்தார்.

''என்னம்மா யோசனை பண்றே...? ஏதாவது பொய் சொல்லி என்னை நம்ப வைக்கலாம்ன்னு பார்த்தா அது நடக்காது. முதல்ல பொய் சொல்லிட்டு அப்புறம் நீ உண்மையைச் சொன்னா லும் நான் உனக்கு உதவி பண்ணமாட்டேன்..!''

''இல்ல... நீங்க இவ்வளவு பட்டவர்த்தனமாய் பேசும் போது நான் எதையும் மறைக்க விரும்பலை. என்னோட உண்மையான பேர் ஓவியாதான். என்னோட அப்பா ரிதோபதி ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டில் டைரக்டராய் இருந்து ரிடையரானவர். அவர்க்கு தமிழ் நாட்டில் உள்ள எல்லா பழம் பெரும் கோயில்களையும் பற்றின வரலாறு நல்லா தெரியும். அந்த அடிப்படையில் இந்த ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலைப் பற்றியும் இந்தக் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டைப் பற்றியும் என் கிட்டே சொன்னார்.''

பட்டர் குறுக்கிட்டார்.

''புரியுது..! அந்த கல்வெட்டு கோயிலோட கர்ப்பக்கிருகப் பகுதியில்தான் இருக்கணும்னு நினைச்சு அவர் உன்னை இன்ஃப்ரா ரெட் காமிராவோடு அனுப்பி வைச்சுட்டார். அப்படித்தானே..?''

''ஆமா...''

''இந்த உண்மை உன்னோடு வந்து இருக்கிற டி.வி. ஆட்களுக்குத் தெரியாதே..?''

''தெரியாது. ஆனா அவர்களுக்கு லேசா ஒரு சந்தேகம் இருக்கு...''

''என்ன சந்தேகம்..?''

''இந்த டி.வி. டீமில் இருக்கிற டைரக்டர் ஈர்த்திவாசன், காமிராமேன் பாரதி கண்ணன் இந்த ரெண்டு பேர்கிட்டேயும் ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலைப் பத்திச் சொல்லி, அங்கே படப்பிடிப்பு நடத்தப் போலாம்ன்னு நான் சொன்னபோது அவங்க உடனே ஒத்துக்கலை. ஓரளவுக்காவது கோயில் பிரபலமாய் இருக்கணும்; அப்பத்தான் வ்யூவர்ஸ் பார்ப்பாங்கன்னு தட்டிக்கழிச்சுட்டாங்க. அதுக்கப்புறம் நான் மதியொளி டி.வி.யின் எம்.டி. கிட்டே பேசி இங்கே வர்றதுக்கான ஒப்புதலை வாங்கினேன். நான் அப்படி ஒப்புதலை வாங்கினதால ஈர்த்திவாசனுக்கும் பாரதி கண்ணனுக்கு என் மேல லேசாய் ஒரு சந்தேகம்.''

''இந்த கல்வெட்டு பற்றின உண்மை அவங்களுக்குத் தெரியாதே..?''

''நிச்சயமாய் தெரியாது..! இந்தக் கோயில் பேர்ல தனிப்பட்ட முறையில் அப்படி என்ன உனக்கு இண்ட்ரஸ்ட்ன்னு கேட்டாங்க. அதுக்கு நான் 'என்னமோ தெரியலை... இந்தக் கோயிலுக்கு நான் போன மாதிரி ரெண்டு தடவை கனவு கண்டுட்டேன். இந்தக் கோயிலைப் பற்றி வெளியே விசாரிச்சப்ப சக்தி வாய்ந்த கோயில்ன்னு சொன்னாங்க. அதை எம்.டி. கிட்டே சொன்னேன். அவரும் ஷூட்டிங் போக சொல்லிட்டார். மற்றபடி இந்தக் கோயில் பேர்ல எனக்கு எந்தவிதமான ஒரு இண்ட்ரஸ்ட்டும் இல்லை'ன்னு சொல்லிட்டேன்...''

''சரி... உன்னோட அப்பாவுக்கு இந்தக் கோயிலில் ஒரு கல்வெட்டு இருக்கிற விஷயம் எப்படி தெரியும்?''

''ஒரு பழங்கால ஓலைச்சுவடியில் ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலைப்பற்றியும், இந்தக் கோயிலில் வாழ்ந்த ஒரு சித்தரைப் பற்றியும் சொல்லப்பட்டு இருந்ததாம். இந்தக் கோயிலுக்கு



சொந்தமான 100 கோடி பசும்பொன் காசுகளும், விலை மதிக்க முடியாத நவரத்தினக் கற்களும் எந்த இடத்தில் புதைக்கப்பட்டு இருக்கு என்கிற விபரத்தை அந்த சித்தர் பாடலாய் எழுதி கோயிலின் ஏதோ ஒரு பக்கத்தில் பதித்து வைத்துவிட்டு போய்விட்டார்.... என்கிறது அந்த ஓலைச்சுவடி''

''அந்த ஓலைச்சுவடி இப்போது எங்கே?''

''என் அப்பாவிடம் இருக்கிறது''

பட்டர் ஒரு நமட்டுச் சிரிப்பு ஒன்றைச் சிந்திவிட்டு ஓவியாவை ஏறிட்டார்.

''நீயும் சரி; உன்னோட அப்பாவும் சரி; சரியான திசையில் தான் பயணம் பண்ணி வந்திருக்கீங்க... அப்பாவோட கணிப்பில் ஒரே ஒரு தவறு மட்டும் இருக்கு...''

''என்ன தவறு...?''

''100 கோடி பசும்பொன் காசுகளும், நவரத்ன கற்களும் புதைக்கப்பட்ட இடம் ஒரு கல்வெட்டுச் செய்தியில் இருக்கிறதாய் அவர் நினைச்சுட்டு இருக்கிறது தப்பு...''

''பின்னே..?''

''அந்த செய்தி ஒரு தாமிரப்பட்டயத்தில் இருக்கிறது.''

''தாமிரப்பட்டயமா...?''

''ம்... அந்த தாமிரப்பட்டயமும் இப்ப என் கிட்டத்தான் இருக்கு...''

''நா...நான்... அதைப் பார்க்கலாமா...?''

''அதுக்கு முன்னாடி... உன்னோட அப்பா கிட்டே நான் பிஸினஸ் பேசணுமே...?''

## 8

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

துப்பாக்கி முனையில் மனிதர்களைக் கடத்தி வைத்து பணம் பறிப்பது போல் இணையதளங்களைக் கடத்தும் செயல்களும் அதிகரித்து வருகிறது. கம்ப்யூட்டர் துறையில்

உள்ள கிரிமினல்களில் சிலர் இந்த இணையதள கடத்தல் வேலைகளில் ஈடுபடுகிறார்கள். ஆங்கிலத்தில் இதை ஹேக்கிங் (HAKING) என்று அழைக்கிறார்கள். புகழ் பெற்ற இணைய தளங்களை அவர்கள் தங்களது கடத்தல் சாஃப்ட்வேர் மூலம் முடக்கி வைத்து பின் சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி மிரட்டி பணத்தைக் கறக்கும் வேலையைச் செய்கிறார்கள். இந்த அநியாயத்தை தடுக்க கூகுள் நிறுவனம் ஒரு அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

**போ**லீஸ் லாக்கப்.

இன்ஸ்பெக்டர் சேதுவுக்கு முன்னால் மார்க்கவரி ஊழியர்கள் அய்யாசாமி, சூசை, துரையப்பன், முனிராஜ் நான்கு பேர் உடம்பில் துணியில்லாமல் இடுப்பில் ஜட்டி மட்டும் அணிந்து மண்டியிட்டு உட்கார்ந்து இருந்தார்கள். அவர்களுக்கு இரண்டுபக்கமும் சார்ஜண்ட்கள் லாட்டிகளோடு நிற்க சேது டெஸிபலைக் குறைத்து அடிக்குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

''உங்க நாலு பேர்ல யார் சொன்னாலும் சரி; எனக்கு உண்மை வேணும். ஏன்னா உங்க உதவி இல்லாமே மார்க்கவரிக்குள்ளே ஒரு பெண்ணோட டெட்பாடி - அதுவும் தலையில்லாத டெட்பாடி வர வாய்ப்பேயில்லை. உங்கள்ல யாரோ ஒருத்தர் பண்ணின தப்பு; தப்பு பண்ணாத மத்த மூணு பேரை பாதிக்குது. உண்மையைச் சொல்லிட்டா... இந்த இன்ஸ்பெக்டர் சேது ஒரு சாது... இல்லேன்னா... தீ....!''

பய முகங்களோடு மண்டியிட்டு உட்கார்ந்திருந்த நான்கு பேரும் ஒரு சேர தலைகளுக்கு மேல் கைகளை உயர்த்திக் கும்பிட்டார்கள். கோரஸாய் சொன்னார்கள்.

''அய்யா..! அந்த சாமி சத்தியமா எங்களுக்கு ஒண்ணும் தெரியாதய்யா...''

''இதையேதான் கடந்த ஒரு மணிநேரமாய் சொல்லிட்டு இருக்கீங்க..! கையில் லாட்டிகளோடு



உங்களுக்குப் பக்கத்துல நின்னுட்டு இருக்கிற சார்ஜன்ட்ஸ் ரெண்டு பேர்க்கும் நான் கண்ஜாடை காட்டினாப் போதும் - உங்க நாலு பேரோட உடம்பும் புண்ணாயிடும். ஒவ்வொரு எலும்பும் அட்டவணை போட்டுகிட்டு மாசக் கணக்கில் வலிக்கும். உன் காயங்கள் ஆறி ஒழுங்கா நடக்கிறதுக்கு ஒரு வருஷம் பிடிக்கும். பரவாயில்லையா?''

''அய்யா...! எங்க பொண்டாட்டி பிள்ளைகள் மேல் சத்தியம் பண்ணிச் சொல்றோம். எங்களுக்கும் நடந்த அந்த சம்பவத்துக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லீங்கய்யா...''

''இல்ல... உங்கள்ல ஒருத்தனுக்கும் அந்த சம்பவத்துக்கும் சம்பந்தம் இருக்கு. அந்த ஒருத்தன் யார்ன்னு கண்டுபிடிக்கிறதுக்காக மத்த மூணு பேரையும் அடிக்க வேண்டியிருக்கேன்னுதான் யோசனை பண்றேன்...'' சொன்னவர் நிமிர்ந்தார்.

''சரி..! உங்க நாலு பேர்க்கும் கடைசி சான்ஸ் தர்றேன். இந்த சான்ஸை பயன்படுத்திகிட்டு தப்பு பண்ணினவன் உண்மையை ஒத்துக்கணும்...! ரைட்டர்...!''

''ஸார்...'' ரைட்டர் பக்கத்து அறையிலிருந்து எட்டிப்பார்த்தார்.

''அதைக் கொண்டு வாய்யா...!''

ரைட்டர் வெளிப்பட்டார். அவருடைய கைகளில் நான்கு பேடுகள், பேப்பர், பேனாக்கள் தெரிந்தது.

''ம்... நாலு பேர்க்கும் குடய்யா.''

ரைட்டர் தன் கையில் இருந்த பேடு, பேப்பர், பேனாக்களை அந்த நான்கு பேர்க்கும் கொடுத்தார். அவர்கள் தயக்கத்தோடு வாங்கிக் கொள்ள, குரலை உயர்த்திக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''உங்க நாலு பேர்க்கும் எழுதப் படிக்கத் தெரியுமில்ல?''

''தெரியும்ங்கய்யா''

''உங்கள்ல யாரோ ஒருத்தர்தான் குற்றவாளி. அவன் யார்ன்னு எனக்குத் தெரிஞ்சா போதும். அந்த ஒருத்தனைத் தூண்டி விட்டது யாரு என்கிற உண்மையும் வெளியே வரணும். உங்க நாலு

பேர்க்கும் ஒரு மணி நேரம் அவகாசம் தர்றேன். அந்த ஒரு மணி நேரத்துக்குள்ளே தப்பு பண்ணினவன் இந்த பேப்பர்ல உண்மையை எழுதியாகணும். நான் அவனைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். கடைசி வரைக்கும் அது ரகசியமாவே இருக்கும். நாலு பேரும் தனித்தனியாய் உட்கார்ந்து எழுதி என்கிட்டே கொண்டு வந்து கொடுத்துடணும். இந்த வாய்ப்பை உபயோகப்படுத்திகிட்டா உங்களுக்கு நல்லது. இப்ப என்கிட்டே சொன்னதையே லெட்டர்ல எழுதிக் கொடுத்தா நான் ஒத்துக்க மாட்டேன்.'' சொன்ன சேது பக்கத்தில் இருந்த சார்ஜண்ட்டிடம் திரும்பினார்.

''இந்த நாலு பேரையும் தனித்தனியா உட்கார வையுங்க. ஒருத்தர்க்கு ஒருத்தர் பேசிக்கக் கூடாது. சரியா ஒரு மணி நேரம் கழிஞ்சதும் பேப்பரோடு ஒவ்வொருத்தனையும் என்னோட ரூமுக்கு அனுப்புங்க.''

''எஸ்...ஸார்...''

''இந்த வாய்ப்பையும் இவங்க உபயோகப் படுத்திக்கலைன்னா ரெட் செல்லுக்கு கொண்டு போய் பாதி உயிரை எடுத்துட வேண்டியதுதான்!''

## 9

### விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

பார்வைத் திறன் அற்றவர்களுக்காக செயற்கைக் கண்ணை அமெரிக்காவின் எம்.ஐ.டி. பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது. இந்த செயற்கைக் கண் இரண்டு கம்ப்யூட்டர் சிப்கள் கொண்டு உருவாக்கப்பட்டு உள்ளது. இவை ரெட்டினா செய்யும் வேலையைச் செய்யும். இதில் உள்ள ஒரு ஜோடி கண்ணாடிகள் சுற்றுப்புறத்தையும், ஒளியின் தன்மையையும் புகைப்படம் போல் பதிவு செய்து கொள்ளும். இந்தத் தகவல்கள் சிப்களின் உதவியோடு



எலக்ட்ரிக் நரம்புகள் மூலமாக மூளைக்குக் கடத்தப்படுகிறது. அதன் பிறகு மூளை தானாக அதைக் குறிப்பிட்ட பொருளாக ஏற்றுக் கொள்ளும். அதை ஒரு இடமாகவோ, குறியீடாக வோ அறிந்து கொள்ளும். இதனால் இந்த செயற்கைக் கண்ணை பொருத்தி இருப்பவர்கள் வழிகாட்டி இல்லாமலே தங்கள் இலக்கை நோக்கி ஆபத்தின்றி நடந்து செல்ல முடியும்.

சென்னை.

பெசண்ட் நகரின் கலாக்ஷேத்ரா காலனியில் ஐந்தாவது குறுக்குத் தெருவில் முதல் பங்களா.

பங்களாவின் பின்பக்க சிட் அவுட். சாயந்தர ஏழு மணி, மெல்லிதான கடல் காற்று.

சேதுபதி சிகரெட் பைப்பில் புகையிலைத்தூளை திணித்துக் கொண்டே தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த ஒலியாவிடம் பதட்டக் குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

''ஒலியூா! நீ சொல்றதை என்னால நம்ப முடியலையேம்மா!''

''அப்பா! நான் சொன்னதெல்லாம் முழுக்க முழுக்க உண்மை.''

''அந்த பட்டர் பேரென்ன?''

''நவநீத பட்டர்...''

''அந்த தாமிரப் பட்டயம் அவர்கிட்டேதான் இருக்கா?''

''ஆமா...''

''காட்டினாரா...?''

''இல்லை..! உங்ககிட்டே பிசினஸ் பேசின பின்னாடிதான் அந்தத் தாமிரப்பட்டயத்தைக் காட்டுவாராம்.''

''அவரை எப்படி நம்பறது...?''

''நம்பித்தான் ஆகணும்... வேறு வழியில்லை. நீங்க சரின்னு சொன்னா அவர் புறப்பட்டு வர்றாராம்.''

''அந்த பட்டரைப் பத்தி உன்னோட அபிப்பிராயம் என்னம்மா?''

''அப்பா...! ஆளைப்பார்த்தா அப்பாவி மாதிரி இருக்கார். பட் பேச்சைப் பார்த்தா எல்லாரையும் தூக்கி சாப்பிடறவர் மாதிரி இருக்கார். எல்லாக் கோயில்களைப் பற்றியும் சரித்திரச்சான்றுகளோடு பேசறார்.''

''அவரை நம்பலாம்ன்னு சொல்றியா?''

''தாராளமாய்...''

''அந்த பட்டர் என்னை என்னிக்கு பார்க்க வர்றதாய் சொன்னார்..?''

''நாம 'வரலாம்'ன்னு க்ரீன் சிக்னல் கொடுத்தாத்தான் புறப்பட்டு வருவார்.''

''க்ரீன் சிக்னல் குடுத்துடு... புறப்பட்டு வரட்டும்''

''நான் அவர்கிட்டே பேசறதைவிட நீங்களே பேசிட்டா அவர்க்கும் சந்தோஷமாய் இருக்கும்.''

''சரி! அவர்க்கு போன் போட்டு குடு...! நான் பேசிடறேன்..''

ஒவியா தன் செல்போனை எடுத்து பட்டரின் செல்போன் எண்களைத் தட்டிக் கொடுக்க சீதாபதி வாங்கி காதில் வைத்தார். ரிங்டோன் போய் பட்டரின் குரல் கேட்டது.

''நமஸ்காரம்..! பேசறது யாரு..? ஓவியாவா?''

''ஓவியாவோட அப்பா..!''

''டபுள் நமஸ்காரம்...! உங்க போனைத்தான் எதிர்பார்த்துட்டு இருக்கேன்..''

''என்னோட டாட்டர் ஓவியா எல்லாத்தையும் சொன்னா. நீங்க உடனே புறப்பட்டு சென்னை வந்துடுங்க. நாம மேற்கொண்டு என்ன பேசணுமோ அதைப் பேசிடலாம்...''

''எப்ப வந்து உங்களைப் பார்க்கலாம்?''

''உடனே கூட நீங்க புறப்பட்டு வரலாம்.''

''இப்ப மணி ஏழு. எட்டு மணிக்கு உங்களை வந்து மீட் பண்றேன்.''

''என்னது..! எட்டு மணிக்கு வர்றீங்களா..? நீங்க இருக்கிறது கும்பகோணத்துக்குப் பக்கத்தில் உள்ள



ஐஸ்வர்யப் பெருமாள் கோயில்ல. இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே சென்னைக்கு எப்படி வர முடியும்?''

பட்டர் சிரித்தார்.

''வர முடியும்...''

''எப்படி முடியும்..? கும்பகோணம் என்ன... சென்னையில் இருக்கிற மைலாப்பூரா... உடனே ஒரு ஆட்டோவோ ஒரு கால்டாக்ஸியோ பிடிச்சு வர்றதுக்கு...?''

பட்டர் இப்போது பலமாய் சிரித்தார். ''நான் இப்போ கும்பகோணத்தில் இருக்கிறதாய் உங்களுக்கு யார் சொன்னது?''

''பின்னே..?''

''நான் இப்போ சென்னையில் இருக்கிற ஆழ்வார்பேட்டையில் ஒரு சிநேகிதன் வீட்ல தங்கியிருக்கேன்.''

''நீங்க எப்போ சென்னைக்கு வந்தீங்க..?''

''நான் நேத்திக்கு நைட் பஸ்ல புறப்பட்டு காலங்கார்த்தால சென்னைக்கு வந்துட்டேன். உங்க கிட்டயிருந்து எப்படியும் க்ரீன் சிக்னல் வரும்னு எனக்குத் தெரியும். அதுதான் அட்வான்ஸா புறப்பட்டு வந்துட்டேன். அப்படி புறப்பட்டு வந்ததில் ஒண்ணும் தப்பில்லையே?''

சீதாபதி சிரித்தார். ''பட்டர் இவ்வளவு ஃபாஸ்ட்டாய் இருப்பார்ன்னு நான் நினைக்க கூட பார்க்கலை...''

''இன்னிக்கு வரட்டுமா... இல்லை... நாளைக்கு காலையில் வரட்டுமா..?''

''இன்னிக்கே வாங்க...! நானும் என்னோட டாட்டரும் ஃப்ரீயா இருக்கோம். பேச வேண்டியதைப் பேசி, செய்ய வேண்டியதைப் பத்தியும் பேசிடலாம்...''

''உங்க வீட்டு அட்ரஸைக் கொஞ்சம் தெளிவாய் சொல்லுங்க''

''நோட் பண்ணிக்குங்க...''

# 10

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

ஜப்பானிய மோட்டார் வாகனத் தயாரிப்பு நிறுவனமான ஹோண்டா, நாய் பயணம் செய்வதற்கு வசதியான கார் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த காரின் பெயர் 'வாவ்!' இந்தக் காரில் நாய்களுக்காக தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. காரின் பின் இருக்கையில் நாய்க்கென்றே மடித்து வைக்கக்கூடிய தடுப்பு அமைப்பு, சீட் பெல்ட், நழுவும் கதவு, டாய்லட் போய்விட்டால் எடுத்து கழுவக் கூடிய கார் தளம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

ஜி.ஹெச்.

டாக்டர் பஞ்சாபகேசன் தன் அறையில் உட்கார்ந்து ஒரு பேஷண்ட்டின் ஸ்கேன் ரிப்போர்ட்டை உன்னிப்பாய் படித்துப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது அறைக்கதவு மெலிதாய் தட்டப்படும் சத்தம் கேட்டது.

''ப்ளீஸ்... கெட் இன்...'' என்றார்.

இன்ஸ்பெக்டர் சேது உள்ளே நுழைந்தார்.

''குட் மார்னிங் டாக்டர்...''

''வெரி... குட்மார்னிங்...! ப்ளீஸ்... கம்'' டாக்டர் நிமிர்ந்தார்.

நாற்காலியைக் காட்டினார்.

சேது உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

''பிஸியாய் இருக்கீங்களா டாக்டர்?''

''நோ... நோ... ஒரு ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்து மெடிகல் ப்ரஸ்க்ரைப் பண்ணணும். அவ்வளவுதான்.''

''நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

''வை...ஆல்...மீன்ஸ்...? நானே உங்களுக்கு போன் பண்ணணும்னு நினைச்சுட்டிருந்தேன்...



மார்ச்சுவரி ஊழியர்கள் நாலு பேரை அரஸ்ட் பண்ணிக் கொண்டு போனீங்களே..! அவங்களை விசாரணை பண்ணினதில் உபயோகமான தகவல் ஏதாவது கிடைச்சுதா...?''

''அதைப்பத்தித்தான் இப்ப பேசப் போறேன் டாக்டர்.''

டாக்டர் ஸ்கேன் ரிப்போர்ட் இருந்த ஃபைலை மூடிவைத்தார்

''ம்... சொல்லுங்க..!''

''ஒரு பெண்ணின் தலையில்லாத உடம்பு மார்ச்சுவரிக்குள்ளே வந்ததுக்கு டாக்டர் ஒருத்தர்தான் காரணம்.''

''சுவிட்...?''

''எஸ்... அந்த நாலு பேரையும் லாக்கப்ல கொண்டு போய் விசாரிச்சபோது எவனுமே வாய் திறந்து உண்மையைச் சொல்லலை. அதுக்கப்புறம் நாலு பேரையும் கடுமையாய் மிரட்டி கையில பேப்பர் பேனா கொடுத்து - சொல்ல நினைச்சதை எழுதச் சொன்னேன். 'யாராவது ஒருத்தர் உண்மையை ஒத்துகிட்டாலும் அவங்க பேரை வெளியே சொல்லாமே ரகசியமா வெச்சிருந்து நடவடிக்கை எடுப்பேன்'னு சொன்னதால அந்த நாலு பேரும் என்னோட ஏற்பாட்டுக்கு ஒத்துக்கிட்டாங்க. அதுல ஒருத்தன் எழுதின லெட்டர்ல எல்லா உண்மையும் இருந்தது.''

''எ...எ... என்ன உண்மை...?''

''இதோ...! அந்த நாலு பேர்ல ஒருத்தன் எழுதின லெட்டர். நீங்களே படிங்க டாக்டர்.''

பஞ்சாபகேசன் வாங்கி அதில் பார்வையைப் போட்டார். பால்பாயிண்ட் பேனாவில் எழுதப்பட்ட கோணல் மாணலான எழுத்துக்கள் பார்வைக்குக் கிடைத்தது.

இன்ஸ்பெக்டர் அய்யா அவர்களுக்கு

குசை எழுதிக்கொண்டது. அய்யா... நான் இப்போ சொல்லப் போறது நூத்துக்கு நூறு உண்மை. ரெண்டு நாளைக்கு முன்னாடி ராத்திரி மணி பத்து இருக்கும். என்கூட ட்யூட்டியில் இருந்த அய்யாசாமி ஒரு அநாதை டெட்பாடியை

மயானத்துல அடக்கம் பண்றதுக்காக போலீஸ் கான்ஸ்டபிளோடு போயிருந்தான். மார்ச்சுவரி வாசல்ல நான் மட்டும் உட்கார்ந்து பீடி குடிச்சுட்டு இருந்தேன். அப்போ சீஃப் டாக்டர் பஞ்சாபகேசன் அந்தப் பக்கமாய் வந்தார். நான் பீடியை எறிஞ்சுட்டு பதட்டமாய் எழுந்து நின்னேன். டாக்டர் தெரிஞ்சார். என் பக்கத்துல வந்து நின்னவர் 'சூசை என் கூட கொஞ்சம் வா'ன்னு கூப்பிட்டார். நான் டாக்டர் தன்னோட ரூமுக்கு போனேன். கூட்டிட்டுப் போனார். ரூமுக்குள்ளே போனதும் கதவைச் சாத்தி தாழிட்டார். நான் இதெல்லாம் எதுக்குன்னு யோசனை பண்ணிட்டு இருக்கும்போதே டாக்டர் பேச ஆரம்பிச்சார். 'சூசை! நான் இப்ப ஒரு இக்கட்டுல மாட்டிகிட்டு என்ன பண்றதுன்னு தெரியாமே முழிச்சுட்டு இருக்கேன். நீதான் உதவி பண்ணனும்'ன்னு சொன்னார். நான் 'என்ன உதவி'ன்னு கேட்டேன். அவர் என்னை அந்த ரூமில் இருந்த குளியலறைக்குக் கூட்டிப் போய்க் காட்டினார். பார்த்ததும் நான் அதிர்ந்து போயிட்டேன். ஒரு பெண் அலங்கோலமான கோலத்தில் விழுந்து இறந்து போயிருந்தா.

டாக்டர் என் தோளைத் தொட்டார். 'சூசை! இந்தப் பெண் அவ்வளவு நல்லவள் இல்லை. நான் என்னிக்கோ பண்ணின ஒரு தப்பைக் காரணம் காட்டி என்னை ப்ளாக் மெயில் பண்ணி பணம் பறிச்சுகிட்டு இருந்தா. நானும் அந்தத் தப்பு வெளியே தெரிஞ்சிடக்கூடாதேன்னு நினைச்சு அவளுக்குப் பணத்தை வாரி வாரிக் கொடுத்து இருக்கேன். இன்னிக்கும் ஒரு பெரிய தொகை கேட்டு அவ இங்கே வந்தா. நான் பணம் தர முடியாதுன்னு சொன்னதும் கத்தியைக் காட்டி மிரட்டினா. எனக்கு வந்த ஆத்திரத்தில் பக்கத்தில் இருந்த கனமான ஸ்டூலை எடுத்து அவ தலையில் ஒரு போடு போட்டேன். அந்த விநாடியே சுருண்டு விழுந்து செத்துட்டா. ஒரு துளி ரத்தம் வெளியே வரலை... மூளையோட முகுளம் பகுதியில் பலமாய் அடிபட்டதால் இறந்து போயிருக்கலாம். இந்த உடம்பை யார்க்கும் தெரியாமே டிஸ்போஸ் பண்ணனும். அதுக்கு உன்னோட உதவி



வேணும்'னு சொன்னார். நான் மொதல்ல தயங்கினேன். அப்புறம் டாக்டர் நிறைய பணம் தர்றதாய் சொல்லவும் ஒத்துகிட்டேன். பாடியை உடனே வெளியே கொண்டு போக முடியாத நிலைமை இருந்ததால அந்தப் பொண்ணோட பாடியை பார்மலினில் நனைச்சு ஒரு பெரிய பாலிதீன் பைக்குள்ளே திணிச்சு ட்ராலியில் வெச்சு கோடவுனுக்கு கொண்டு போயிட்டேன். அதுக்கப்புறம் டாக்டர் ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேல் வந்தார். நாளைக்கு பாடியை டிஸ்போஸ் பண்ணும் போது எந்தப் பிரச்னையும் வரக்கூடாது. போலீஸ் கைக்கு பாடி கிடைச்சாலும் பொண்ணு யார்ன்னு தெரியக்கூடாதுன்னு சொல்லி கையில் வெச்சிருந்த ஆபரேஷன் பண்ற கூர்மையான கத்தியால பொண்ணோட தலையை வெட்டி தான் கையோடு கொண்டு வந்திருந்த சூட்கேஸில் போட்டுகிட்டார். 'இதை நான் எரிச்சு சாம்பலாக்கிடறேன். நீ இதை நாளைக்குள்ளே எப்படியாவது வெளியே கொண்டு போய் டிஸ்போஸ் பண்ணிடு'ன்னு சொன்னார். நானும் பணத்துக்கு ஆசைப்பட்டு தலையாட்டினேன். அதுக்கப்புறம் அந்த பாடியை மத்தவங்க கண்ணுல படாமே இருக்கிறதுக்காக ரெண்டு மூணு இடங்கள்ல மாத்தி மாத்தி வெச்சேன். எதுவும் சிப்பட்டு வராததால அய்யாசாமிக்குத் தெரியாமே பாடியை மார்ச்சுவரிக்கு கொண்டு வந்துட்டேன். ஆனா என்னோட கெட்ட நேரமோ டாக்டரோட கெட்ட நேரமோ தெரியலை. மார்ச்சுவரியில் நான் மறைச்சு வெச்சிருந்த பொண்ணோட பாடியை அய்யாசாமி பார்த்துட்டான். சத்தம் போட்டான். நானும் அவனோடு சேர்ந்து அதிர்ச்சியடைந்த மாதிரி நடிச்சேன். இந்த விஷயத்தை டாக்டர்கிட்டே சொல்லணும்ன்னு அவன் ஓடின போது என்னால தடுக்க முடியலை. அய்யாசாமி டாக்டர்கிட்டே விஷயத்தைச் சொன்ன போது அவர் என்னைப் பார்த்தார். அய்யாசாமியை இந்த விஷயத்துல சரிக்கட்ட முடியாதுன்னு அவர்க்குத் தெரியும். அதனால வேறு வழியில்லாமே போலீஸுக்கு தகவல் கொடுத்தார். இந்த விஷயத்தில் நான் குற்றவாளி கிடையாது. டாக்டர்

தன்னோட அதிகாரத்தையும், பணத்தையும் பயன்படுத்தி என்னையும் அவர் பண்ணின குற்றத்துக்கு உடந்தையாக்கிட்டார்.'

லெட்டர் முடிந்து போயிருக்க, அதைப் படித்த டாக்டரின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வை.

சேது கேட்டார்.

''ஆசை இந்த வாக்கு மூலத்தில் சொல்லியிருக்கிறது எல்லாம் உண்மையா டாக்டர்...?''

டாக்டர் பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டு சொன்னார்.

''பொய்.... அப்பட்டமான பொய்''

''ஆசை எதுக்குப் பொய் சொல்லணும்?''

''அதை அவன்கிட்டதான் கேட்கணும்.''

''எனக்கென்னவோ அவன் சொன்னதெல்லாம் நம்புறமாதிரித்தான் இருக்கு... ஒரு வெளியாள் இந்த வேலையை எல்லாம் பண்ணியிருக்க முடியாது. பண்ணவும் சாத்தியம் இல்லை.''

''இன்ஸ்பெக்டர்! என்னோட இருபது வருஷ டாக்டர் வாழ்க்கையில் ஒரு சின்ன களங்கம் கூட ஏற்பட்டது இல்லை. கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் யார்ன்னே எனக்குத் தெரியாது.''

''ஸாரி... டாக்டர்... நீங்க இந்த ரூம்ல இருக்கிறவரைக்கும் காந்தி, புத்தர் மாதிரிதான் பேசிட்டிருப்பீங்க. போனில் லாக்கப்புக்குள்ளே வந்து ஒரு மணி நேரம் குத்துக்காலிட்டு உட்கார்ந்தாத்தான் உண்மை பேசணும்ன்னு தோணும்...''

''இன்ஸ்பெக்டர்! இந்த பயமுறுத்தல் பேச்செல்லாம் என்கிட்டே வேண்டாம்.''

''சரி... பயமுறுத்தலை. கேஸ் ஸ்லாகே பேசுவோம். அந்தப் பொண்ணோட தலையை என்ன பண்ணீங்க? எங்கேயாவது கொண்டு போ பெட்ரோல் ஊத்தி எரிச்சுட்டீங்களா...? இல்லை புதைச்சுட்டீங்களா..?''

''இப்ப நீங்க கேட்ட இந்தக் கேள்வி உண்மையிலேயே யார் அதைப் பண்ணாங்களோ அவங்ககிட்டதான் கேட்கணும்.''

''ஸோ... அந்தப் பொண்ணையே உங்களுக்கு தெரியாது?''



''தெரியாது. தெரியாது. தெரியாது...''

''ஆசை சொல்றது பொய்?''

''பொய்யோ பொய்...''

''ஓ.கே... டாக்டர்... ஆசை சொன்னது உண்மையா பொய்யான்னு தீர்ப்பு சொல்ல வேண்டியது கோர்ட். அதுக்கு முன்னாடி போலீஸோட பார்மாலிடீஸ் நிறைய இருக்கு. ஒருத்தர் குற்றவாளியா இல்லையான்னு கோர்ட் தீர்மானிக்கிறதுக்கு முன்னாடி சம்பந்தப்பட்ட நபரை போலீஸ் கைது பண்ணணும். ரிமாண்ட்ல வைக்கணும். அப்புறம் கோர்ட்ல நிறுத்தணும். உங்களை முறைப்படி விசாரணை செய்ய கோர்ட்ல உத்தரவு வாங்கணும். பதினைந்து நாள் சிறையில் இருந்த பின்னாடி நீங்க ஜாமீன் கேட்டு கோர்ட்ல மனு தாக்கல் பண்ணணும். உங்களுக்கு ஜாமீனே கொடுக்கக்கூடாதுனு அரசுதரப்பு வக்கீல் கோர்ட்ல வாதாடுவார். இது பிக்பாக்கெட் கேஸ் இல்லை. ஒரு மர்டர் கேஸ். அதுவும் ஒரு பெண்ணை மர்டர் பண்ணி ஆபரேஷன் பண்ற கத்தியாலே... தலையை வெட்டி எடுத்து...''

''ஸ்டாப்... இட்...!'' டாக்டர் பஞ்சாபகேசன் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு கோபமாய் எழுந்தார்.

''இன்ஸ்பெக்டர்..! திஸ்... ஈஸ்... டூ மச்...''

சேது சிரித்தார்.

''நான் இன்னும் உங்களைக் கைது பண்ணவேயில்லை. அதுக்குள்ளே 'திஸ் ஈஸ்.... டூ மச்'ன்னு சொல்றீங்களே டாக்டர். கைது பண்ணி போலீஸ் ஜீப்ல ஏத்தும் போது உங்க நிலைமை எப்படியிருக்கும்ன்னு கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க.''

''இன்ஸ்பெக்டர்...! இது யாரோ பண்ணின சூழ்ச்சி. அந்த ஆசை பொய் சொல்றான்.''

''ஏன்... நீங்க சொல்றது பொய்யாய் இருக்கக் கூடாதா...?''

''நான் அந்த ராஸ்கல் ஆசையைப் பார்க்கணும். பேசணும்...''

''ம்... வாங்க... ஸ்டேஷன்ல இருக்கிற லாக்கப்புக்குப் போலாம். அங்க வெச்சு நீங்க சூசையைப் பாருங்க. பேசுங்க. எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் கிடையாது. பட் சூசை கொடுத்த வாக்கு மூலத்தை வெச்சு அந்த அடிப்படையில் நான் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம்... ஸ்டேஷனுக்கு வந்து சூசையைப் பார்க்கறீங்களா?''

''வர்றேன்..!''

டாக்டர் பஞ்சாபகேசன் கிளம்பினார்.

## 11

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

1. உலக மக்களில் 10 சதவீதம் பேர் இடது கை பழக்கம் உள்ளவர்கள்.

2. ஒரு மனிதன் ஒரு வருடத்திற்கு ஒரு கோடி முறை கண் சிமிட்டுகிறான்.

3. நாம் படுத்து தூங்கும் படுக்கையில் நம்மோடு சேர்ந்து 600 கோடி நுண்ணுயிர்கள் தூங்குகின்றன.

4. ஒரு 'பாண்டா' கரடி பிறக்கும்போது ஒரு எலியை விட சின்னதாக இருக்கும்.

நவநீத பட்டர் ஒரு கால்டாக்ஸி பிடித்து பெசன்ட் நகர் போய்ச் சேர்ந்து கலாக்ஷேத்ரா காலனியில் இருந்த சீதாபதியின் வீட்டு வாசலில் இறங்கிய பொழுது இரவு எட்டரை மணி.

ஓவியாவும், சீதாபதியும் போர்டிகோவிலேயே நின்று பட்டரை எதிர்கொண்டார்கள்.

ஓவியா கேட்டாள்.

''வாங்க பட்டரே...! அட்ரஸ் கண்டுபிடிக்க கஷ்டமாய் இருந்ததா..?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்கதா



அட்ரஸை ஸ்படிகம் மாதிரி கரெக்டாய் சொல்லிட்டீங்களே? எந்த குழப்பமும் இல்லாமே வந்து சேர்ந்துட்டேன். ஆழ்வார்பேட்டையிலிருந்து பெசன்ட் நகர் வரைக்கும் 'பொசுக் பொசுக்'ன்னு ஏகப்பட்ட சிக்னல். நின்னு நின்னு வர்றதுக்குள்ள பாதிப் பிராணன் போயிடுத்து.''

''உள்ளே வாங்க...''

பட்டரைக் கூட்டிக் கொண்டு உள்ளே போனார்கள். ஹாலில் இருந்த சோபாவைக் காட்டி உட்கார்ந்தார்கள்.

ஓவியா சொன்னாள். ''நீங்க அதுக்குள்ளே சென்னைக்கு வந்துடுவீங்கன்னு நாங்க எதிர்பார்க்கலை.''

''நீங்க எப்படியும் கூப்பிடத்தான் போறேள்... அதான் ரெண்டு மூணு நாள் லீவு போட்டுண்டு வந்துட்டேன்.''

''நீங்க இல்லாத போது கோயில்ல பூஜை பண்றதெல்லாம் யாரு..?''

''உள்ளூர்ல பால முரளின்னு ஒரு அர்ச்சகர் இருக்கார். அவர் பார்த்துக்குவார். சரி... வந்த விஷயத்தைப் பேசுவோமா?''

''பேசுவோம்... அதுக்கு முன்னாடி ஏதாவது சாப்பிடறீங்களா...?''

''வேண்டாம்... வர்ற போதே ராத்திரி சாப்பாட்டை முடிச்சுட்டு வந்துட்டேன்... இனி உங்களோடு பிசினஸ் பேசிட்டு கிளம்ப வேண்டியதுதான்...!''

''ரொம்பவும் அவசரப்படறீங்க பட்டரே?''

''எது எதுக்கு அவசரப்படணும்... எதை எதை ஆறப்போடணும்ன்னு எனக்கு நல்லாவே தெரியும். அதிர்ஷ்டம் வந்து கதவைத் தட்டும் போது உட் பக்கமாய் தாழ் போட்டுகிட்டு படுத்துக் கிடக்கலாமோ?''

ஓவியா சீதாபதியைப் பார்த்தாள்.

''அப்பா... பேசிடுங்கோ... இனியும் லேட் பண்ண வேண்டாம்.''

சீதாபதி சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு மெல்ல பேச்சை ஆரம்பித்தார்.

"என்னோட பொண்ணு ஓவியா எல்லாத்தையும் சொன்னா. ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலில் ஐஸ்வர்யப் புதையல் இருக்கிற செய்தி ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டில் இருக்கிற எனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். என்னோடு ஒர்க் பண்ணின ஜாய்ண்ட் டைரக்டர் ராமநாதன் என்கிற ஒருத்தர்க்கும் தெரியும். ஆனா அவர் இப்போ உயிரோடு இல்லை. ஐஸ்வர்யப் புதையல் பற்றிய கல்வெட்டு செய்தி அந்தக் கோயிலின் கர்ப்பக்கிருகத்துக்குள்தான் இருக்கணும்ன்னு என்னோட மனசுக்குப்பட்டது. அதுதான் என்னோட இன்ஃப்ரா ரெட் காமிராவோடு என்னோட பொண்ணை அனுப்பி வெச்சேன். அதை நீங்க கண்டு பிடிச்சிட்டீங்க. அது எப்படி உங்களால முடிஞ்சது..?"

"ரொம்ப சுலபம்..."

"எப்படி...?"

"கர்ப்பக்கிருகத்துக்குப் பின்னாடி பெருமாளுக்கு உடுத்த வஸ்திரங்களை துவைச்சு காயப் போட்டிருந்தேன். அதை எடுக்கிறதுக்காக பின்பக்கம் போன போது உங்க பொண்ணு ஓவியா ஒரு ஓரமாய் நின்னு செல்போன்ல பேசிட்டிருந்தது. அந்தப் பேச்சுல ஒரு திருட்டுத்தனம் தெரிஞ்சதாலே தப்பு இல்லேன்னு நினைச்சு ஒட்டுக் கேட்டேன். அப்படி ஒட்டுக் கேட்ட போது தான் ஓவியா பேசினது எல்லாமே என்னோட காதுல விழுந்தது. அந்தப் பேச்சை வெச்சு இதுதான் விஷயம்ன்னு யூகம் பண்ணிட்டேன். நான் அப்படி ஒட்டுக் கேட்டது தப்பாய் இருந்தா என்னை மன்னிச்சுடுங்க..."

ஓவியா குறுக்கிட்டாள்.

"பட்டரே...! நடந்துபோன விஷயங்களைப் பத்தி பேசிட்டு இருக்காமே இனிமே நடக்கப்போறதைப் பத்தி பேசலாமே...! அந்த தாமிரப் பட்டயத்தைக் கொண்டு வந்து இருக்கீங்களா...?"

"கொண்டு வராமே இருப்பேனா...? கொண்டு வந்து இருக்கேன்."

"பார்க்கலாமா?"



"மொதல்ல பிசினஸ் பேசிக்கலாமே?"

"ம்... பேசுங்க... உங்களுக்கு என்ன வேணும்?"

"உரிய பங்கு வேணும்... நூறு கோடி பசும்பொன் காசுகள், விலை மதிக்க முடியாத நவரத்தின கற்கள் கோயிலின் எந்தப் பகுதியில் புதைக்கப்பட்டு இருக்கு என்கிற விபரம் அந்தத் தாமிரப்பட்டயத்தில் ஒரு புதிர் மாதிரி பாடல் வடிவில் சொல்லப்பட்டு இருக்கு. அந்தப் பாடலில் உள்ள சில வார்த்தைகள் எனக்குப் புரியாத காரணத்தால் அந்த தாமிரப்பட்டயத்தை அப்படியே வெச்சிருக்கேன். அப்படியே அந்த வார்த்தைகளோட அர்த்தம் எனக்கு தெரிஞ்சாலும் கூட ஒரு தனி மனிதனாய் இருக்கிற என்னால எதுவும் பண்ண முடியாது. இப்போ நீங்களும் இதில் இணைந்து செயல்படறதால கோயிலில் புதையுண்டு கிடக்கிற அந்த ஐஸ்வர்யப் புதையலை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு இருக்கு. அந்த நம்பிக்கை ஒருவேளை வெற்றியில் போய் முடிஞ்சா எனக்கு உண்டான பங்கை நீங்க தரணும். அந்த உத்தரவாதத்தை உங்களால குடுக்க முடியுமா...?"

சிதாபதி ஒரு புன்முறுவலோடு பட்டரைப் பார்த்தார். "நம்ம ரெண்டு பேர்க்கும் நடுவில் எந்த விதமான ஒளிவு மறைவும் கிடையாது. உங்ககிட்டே புதையலைப் பத்தின செய்தி அடங்கிய தாமிரப்பட்டயம் இருக்கு. என்கிட்டே ஆர்க்கியாலஜி சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் இருக்கு. இப்போ ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டில் டைரக்டராய் இருக்கிற திருஞானம் என்னுடைய நண்பர். அவர் உதவியோடு கோயிலை ஆராய்ச்சி பண்ற போர்வையில் ரெண்டு வாரம் கோயில்ல முகாம் போட்டு புதையல் இருக்கிற இடத்தை லொகேட் பண்ணிடலாம். புதையல் கிடைச்சா அதை மூணு பங்காய் போட வேண்டியிருக்கும்."

"மூணு பங்கா..?"

"ஆமா...! உங்களுக்கு ஒரு பங்கு. எனக்கு ஒரு பங்கு. டைரக்டர் திருஞானத்துக்கு ஒரு பங்கு."

பட்டர் மௌனமாய் இருந்தார். சிதாபதி அதை கவனித்துவிட்டுக் கேட்டார்.

"என்ன பட்டரே... பேச்சையே காணோம்?"

''அது... வந்து...''
''என்ன தயக்கம்...! எதுவாய் இருந்தாலும்
பரவாயில்லை சொல்லுங்க...!''
''நான் சொன்னா நீங்க தப்பா நினைக்கக்கூடாது!''
''மனசுக்குள்ளே எதையும் வெச்சுக்காமே
தைரியமா பேசுங்க...''
பட்டர் தயங்கிவிட்டு சொன்னார்.
''இந்த பங்கு போடற விஷயத்தில் உங்களை
எந்த அளவுக்கு நம்பறதுன்னு தெரியலை!''
''ஓ...! உங்களை நாங்க ஏமாத்திடுவோம்ன்னு
நினைக்கறீங்களா?''
''லேசாய் ஒரு சந்தேகம்.''
''உங்களுக்கு அந்த சந்தேகமே வேண்டாம். நான்
ஒரு பெரிய பதவியில் இருந்துட்டு
ரிடையரானவன். கடவுள் பக்தி நிறையவே உண்டு.
யாரையும் ஏமாத்தணும் என்ற எண்ணம் எனக்கு
கிடையாது. பூமிக்கு கீழே கிடைக்கிற எந்த ஒரு
புதையலும் அரசாங்கத்துக்கு சொந்தமானது
என்கிற சட்ட விதி எனக்கும் தெரியும். ஆனால்
அந்த சட்ட விதிப்படி புதையலை அரசாங்கத்துக்கு
ஒப்படைக்கும் போது பல அரசியல் முதலைகள்
அதை கபளீகரம் பண்ணிட்டு அதை செப்புக்காக
புதையலா மாத்தி அரசாங்கத்தை ஏமாத்திடறாங்க.
இது ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டில் இருக்கிற
எல்லார்க்கும் தெரியும். நியாயமான முறையில்
அரசாங்கத்துக்குப் போய்ச் சேராத அந்த ஐஸ்வர்யப்
புதையலை நாமே எடுத்துக்கிட்டா என்னான்னு
என்னோட மனசுக்குப்பட்டது. இப்போ இந்த
முயற்சியில் நீங்களும் கூட்டு சேர்ந்து இருக்கீங்க.
டைரக்டர் திருஞானமும் நமக்கு உதவப் போறார்.
நம்ம மூணு பேர்ல யாரும் யாரையும் ஏமாத்தப்
போறது இல்லை. புதையல் கிடைச்சதும்
நியாயமான முறையில் பங்கு போட்டுக்குவோம்.
இந்த விஷயத்தில் உங்களுக்கு எந்தவிதமான
அவநம்பிக்கையும் வேண்டாம்.''
பட்டர் புன்முறுவலோடு தலையை ஆட்டினார்.
''நீங்க இவ்வளவு தூரம் சொல்லும் போது நானும்
நம்பிக்கை இல்லாமே பேசக் கூடாது. அந்த தாமிரப்
பட்டயத்தை எடுத்து இப்ப உங்களுக்கு காட்றேன்.



அதில் எழுதியிருக்கிற சித்தர் பாடல் எனக்குப புரியலை. சில வார்த்தைகள் புரியுது. சில வார்த்தைகள் புரியலை. அதனால பாடலோட முழு அர்த்தத்தை என்னால புரிஞ்சுக்க முடியலை.''

ஒவியா குறுக்கிட்டாள்.

''பட்டரே! உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். அப்பாவுக்கு பதினெட்டு சித்தர் பாடல்களும் தலைகீழ் மனப்பாடம். சிக்கலான எந்த சித்தர் பாடலாய் இருந்தாலும் அதுல என்ன சொல்லப்பட்டிருக்குன்னு தெளிவா சொல்லிடுவார். அந்த தாமிரப் பட்டயத்தை எடுத்து அப்பா கையில் குடுங்க.''

''இதோ...!'' பட்டர் தான் கொண்டு வந்து இருந்த சூட்கேஸைத் திறந்து உள்ளே பத்திரப்படுத்தி வைத்து இருந்த மஞ்சள் துணி மூட்டை ஒன்றை எடுத்தார். மெல்லப் பிரித்தார்.

உள்ளே -

அந்த தாமிரத்தகடு பச்சை நிற களிம்பு ஏறி இரண்டு அங்குல அகலத்திலும் அரையடி நீளத்திலும் பார்வைக்குக் கிடைத்தது.

சீதாபதி அதை ஆர்வத்தோடு கையில் எடுத்தார்.

## 12

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போவதற்குக் காரணம் உலகம் முழுவதும் 15 தங்கச் சுரங்கங்கள் மட்டுமே இருப்பதுதான். இந்த 15 சுரங்கங்களிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 2500 டன் தங்கம் வெட்டி எடுக்கப்படுகிறது. இப்போது உலகில் மொத்தம் 1.75 லட்சம் டன் தங்கம் இருக்கிறது. இந்தியாவில் மட்டும் 13 ஆயிரம் டன் தங்கம் இருக்கிறது. தங்கத்தை பயன்படுத்துவதில் முதல் நாடாக இருப்பது இந்தியாதான்.

**போ**லீஸ் ஸ்டேஷன்.

தனி லாக்கப்பில் அடைக்கப்பட்டு இருந்த சூசையை டாக்டர் பஞ்சாபகேசனும் இன்ஸ்பெக்டர் சேதுவும் போய்ப் பார்த்த போது அவன் சிமெண்ட் திட்டில் ஒருக்களித்து படுத்து தூங்கிக் கொண்டிருந்தான்.

சேது குரல் கொடுத்தார்.

''சூசை...''

தூக்கம் கலைந்து திரும்பிப் பார்த்தவன் டாக்டரை பார்வையில் வாங்கியதும் பதட்டமாய் எழுந்து பவ்யமாய் மார்புக்கு குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டான். கண்களில் நீர் திரண்டது. டாக்டரை நோக்கி மெல்ல அடியெடுத்து வைத்து நடந்து வந்தவன், அவரை நெருங்கியதும் கால்களில் ''அய்யா'' என்று கதறியபடி விழுந்தான்.

''போலீஸ்ல எல்லாத்தையும் சொல்லிட்டேன்ய்யா...! நான் உண்மையைச் சொல்லாமே இருந்தாமத்த மூணு பேர்க்கும் அடி உதை விழும். தப்பு பண்ணாத அவங்க அடி உதை படறதை என்னால பார்த்துக்கிட்டு இருக்க முடியாதய்யா...! அதான் இன்ஸ்பெக்டர் குடுத்த பேப்பர்ல எல்லா உண்மையையும் கொட்டி எழுதிட்டேன். உங்களைக் காட்டிக் கொடுக்காமே இருக்க எவ்வளவோ முயற்சி பண்ணினேன். என்னால மன்னிச்சுக்குங்கய்யா...'' முடியலை.

டாக்டர் பஞ்சாபகேசன் கம்பிகளின் வழியாக சூசையையே கண்கள் இமைக்காமல் பார்த்துவிட்டுக் கேட்டார்.

''நான் உனக்கு என்ன துரோகம் பண்ணினேன்? எதுக்காக இவ்வளவு பெரிய பொய்...?''

சூசை தன் விழிகளை விரித்தான்.

''பொய்யா...? நீங்க என்னய்யா சொல்றீங்க! நடந்த உண்மைகளைக் கூட்டி குறைக்காம அப்படியே சொல்லியிருக்கேன். நீங்களும் குற்றத்தை ஏத்துக்கிட்டா - யார்க்கும் எந்தப் பிரச்னையும் இருக்காதுய்யா.''

''டேய்ய்...!'' என்று ஆவேசமாய் கத்திய



டாக்டர் பஞ்சாபகேசன் சூசை எதிர்பார்க்காத விநாடியில் கம்பிகளின் வழியே கைகளை நுழைத்து அவனுடைய கழுத்தைப் பற்றினார். கோபத்தோடு நெரிக்க ஆரம்பித்தார்.

இன்ஸ்பெக்டர் சேது டாக்டரைப் பிடித்து ஒரு பக்கமாய் இழுத்து தள்ளி விட்டார். கத்தினார்.

''டாக்டர்...! லிஸ் சஸ் டு மச். ஏன் இப்படி கொலை வெறியோடு நடந்துக்கறீங்க...?''

''இன்ஸ்பெக்டர்! அவன் சொல்றது பொய்...! என்னை இந்த கேஸ்ல மாட்டிவிடறதுக்காக யார்கிட்டேயோ பணம் வாங்கிட்டு அபாண்டமா என் மேல பழி சுமத்தறான்.''

''அவன் எதுக்காக உங்களை மாட்டி விடணும்? அவனுக்கும் உங்களுக்கும் என்ன பகை?''

''ஒரு பகையும் கிடையாது...''

''பின்னே எதுக்காக பொய் சொல்லணும்? சரி அப்படியே அவன் சொன்னது பொய்யாய் இருந்தாலும் அது 'பொய்'ன்னு ஒரு வக்கிலை வெச்சு கோர்ட்லதான் நிரூபிக்கணுமே தவிர இப்படி அவனோட கழுத்தை நெரிச்சு அல்ல...! நீங்க இப்படி நடந்துகிட்ட முறைக்காகவே உங்களை நான் அரஸ்ட் பண்ணலாம்.''

டாக்டர் பதட்டப்பட்டார். ''இன்ஸ்பெக்டர்! எனக்குப் பின்னாடி ஏதோ ஒரு சதி நடக்குது. அதுக்குப் பகடைக் காயாய் இந்த சூசை உபயோகப்படுத்தப்பட்டிருக்கான்.''

''சரி... உங்களுக்கு விரோதிகள் யாராவது உண்டா?''

''எனக்குத் தெரிஞ்சு இல்லை...''

''ஓ.கே... டாக்டர்...! நீங்க சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிட்டீங்க. இனிமே நான் சட்டபூர்வமாய் என்ன நடவடிக்கை எடுக்கணுமோ அதை எடுத்தாகணும். சூசை கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் உங்களைக் கைது பண்ணி எஃப் ஐ ஆர் போடணும்.''

''இன்ஸ்பெக்டர்...! எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்க.''

''எதுக்கு அவகாசம்...?''

''நான் என்னோட ப்ரதர்கிட்டே பேசணும்.''

''யார் உங்க ப்ரதர்...?''

''சேதாபதி...! ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்டில் டைரக்டராய் இருந்து ரிடையரானவர். பெசன்ட் நகர்ல இருக்கார்.''

''சரி... அவர்க்கு போன் பண்ணி என்ன பிரயோஜனம்?''

''அவரால என்னைக் காப்பாத்த முடியும்!'' சொன்ன டாக்டர் பஞ்சாபகேசன் தன் செல்போனை எடுத்து எண்களைத் தட்ட ஆரம்பித்தார்.

## 13

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

இந்தியாவின் சந்திராயன் - 1 விண்கலம் நிலவில் தண்ணீர் இருப்பதைக் கண்டு பிடித்துள்ளது. இது விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு புதிய அத்தியாயமாக அமைந்து விட்டது. இதையடுத்து நிலவை மையமாய் வைத்து பல்வேறு திட்டங்கள் தீட்டப்படுகிறது. அதாவது நிலவு ஒரு விருந்தினர் மாளிகை போல் செயல்பட இருக்கிறது. அதன் முதல் கட்டமாக விஞ்ஞானிகள் எடுத்துள்ள முடிவு எது தெரியுமா? 14-ஆம் அத்தியாயத்துக்கு வந்தால் தெரிந்து விடும்.

சேதாபதி தன் கையில் வைத்திருந்த தாமிரத் தகட்டையே இமைக்காமல் பார்த்தார். கோணல் மாணலாய் எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள் பார்வையை சிரமப்படுத்தியது. என்னவென்று படிக்க முயன்றார்.

முடியவில்லை.

''ஓவியா...!''



''சொல்லுங்கப்பா...''

''அந்த 'ஆர்க்கி கிட்'டை எடுத்துக்கிட்டு வாம்மா...''

ஓவியா உள்ளறைக்குப் போய், ஒரு அஞ்சறைப் பெட்டியைப் போல் இருந்த அந்த சிறிய பெட்டியை எடுத்து வந்தாள். அதை வாங்கிக் கொண்ட சேதாபதி அதைத் திறந்து திரவம் அசைந்த ஒரு சிறிய பாட்டிலையும் பிரஷ்ஷையும் எடுத்தார். பிரஷ்ஷால் திரவத்தைத் தொட்டு தாமிரத்தகட்டின் மேல் இருந்த எழுத்துக்களில் தடவ, அடுத்த சில விநாடிகளில் எழுத்துக்கள் மட்டும் பாதரசம் தடவியது போல் பளபளத்தது.

படிக்க ஆரம்பித்தார்.

''கொடுத்து கெடுப்பானுக்கும் கெடுத்து<br>
கொடுப்பானுக்கும் நடுவில்<br>
பருந்து மூக்கின் எல்லைக்கப்பால்<br>
அஞ்சில் ஒன்றின் வழியினிலே'<br>
இருபத்து ஏழில் இருபத்து மூன்றாவது<br>
அதிபதியின்<br>
கீழே ஆறடி இருட்டினிலே<br>
காண்மின் கோடி கோடி<br>
பசும்பொன்... நவ மாணிக்கம்.''

பாடலை மூன்று முறை படித்துவிட்டு குழப்பத்தோடு நிமிர்ந்தார் சேதாபதி. பட்டரிடம் சொன்னார். ''பாடலைப் படிச்சா புரியிற மாதிரியும் இருக்கு. புரியாதது மாதிரியும் இருக்கு.''

பட்டர் புன்னகைத்தார்.

''எனக்கும் அதே நிலைமைதான்...!''

''உங்களுக்கு இந்த பாட்டில் எந்த வரிகள் புரிஞ்சுது? எந்த வரிகள் புரியலை?''

பட்டர் மறுபடியும் சூட்கேஸைத் திறந்து நான்காய் மடித்து வைத்து இருந்த ஒரு வரைபடத்தை எடுத்துப் பிரித்து வைத்துக் கொண்டார்.

''இது ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலோட வரைபடம். இந்த வரைபடத்தை வெச்சுக்கிட்டு பாட்டைப் படிச்சுப் பார்த்தா சில வரிகள் புரியும். பாடலோட முதல் வரி' 'கொடுத்து கெடுப்பா

னுக்கும், கெடுத்து கொடுப்பானுக்கும் நடுவில். இந்த வரியில் இருக்கிற கொடுத்து கெடுப்பான் என்கிற வார்த்தை குரு பகவானின் மறு அம்சமாகிய தட்சணாமூர்த்தியைக் குறிக்கும். இரண்டாவது வார்த்தையான கெடுத்துக் கொடுப்பான் என்பது சனிபகவானைக் குறிக்கும். ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலில் தெற்கு பார்த்தபடி தட்சிணாமூர்த்தி சிலையும், மேற்கு பார்த்தபடி சனீஸ்வரன் சிலையும் இருக்கு. இந்த இரண்டு விக்கிரகங்களுக்கும் நடுவில் கொஞ்சம் தள்ளி மூல ஸ்தானத்தைப் பார்த்தபடி கருடாழ்வார் எழுந்தருளியிருக்கார். பாட்டின் இரண்டாவது வரியான பருந்து மூக்கின் எல்லைக்கு அப்பால் என்கிற வார்த்தைகள் கருடாழ்வாரைத்தான் குறிக்குது. இதுல எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அதற்கு அடுத்தபடியான வரிகளில் தான் குழப்பம் தடுமாற்றம் எல்லாம். 'அஞ்சில் ஒன்றின் வழியினிலே... இருபத்து ஏழில் இருபத்து மூன்றாவது அதிபதியின் ஈழே ஆறடி இருட்டினிலே...' இதுதான் புரியலை."

"அந்த மேப்பை இப்படிக் கொண்டாங்க..." சீதாபதி பட்டரின் கையில் இருந்த மேப்பை வாங்கி அதில் பார்வையைப் போட்டார். பார்த்துக் கொண்டிருக்கும் போதே உதடுகள் அந்த பாடலின் வரிகளை அசை போட்டது.

**அஞ்சில் ஒன்றின் வழியினிலே**
**இருபத்து ஏழில் இருபத்து மூன்றாவது**
**அதிபதியின்**
**ஈழே ஆறடி இருட்டினிலே...**

"ஓவியா..."

"அப்பா..."

"உனக்கு ஏதாவது புரியுதான்னு பாரம்மா..." ஓவியா வாங்கிப் பார்த்துக்கொண்டிருந்த விநா

வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

பட்டர், சீதாபதி, ஓவியா - மூன்று பேரு திடுக்கிட்டுப் போய் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து கொண்டார்கள்.

"இந்நேரத்துக்கு யார்...?"



"ஓவியா...! இதையெல்லாம் உள்ளே கொண்டு போய் மறைச்சு வை. பட்டரே! நீங்க ஹால் சோபாவில் போய் உட்காருங்க. நான் யார்ன்னு போய்ப் பார்த்துட்டு வர்றேன்..." சொன்ன சீதாபதி எழுந்து வேகவேகமாய் வாசலை நோக்கிப் போனார்.

தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்தார்.

போர்டிகோவில் போலீஸ் ஜீப் நின்றிருக்க, வாசற்படிகளில் டாக்டர் பஞ்சாபகேசனும் இன்ஸ்பெக்டர் சேதுவும் தெரிந்தார்கள்.

சீதாபதியைப் பார்த்ததுமே டாக்டரின் குரல் தழுதழுத்தது.

"அண்ணா..."

சீதாபதியின் முகத்தில் பதட்டம் பரவியது.

"பஞ்சு...! என்ன பிரச்னை... போலீஸோடு வந்து இருக்கே...? வாட் ஈஸ் ராங்க் வித் யூ...?"

"அண்ணா...! உள்ளே போய் பேசலாமே!"

"வா..." சீதாபதி டாக்டரின் தோளில் கை போட்டு உள்ளே கூட்டிப் போனார். போலீஸைப் பார்த்ததும் பட்டர் வியர்த்துப் போனவராய் எழுந்தார். சீதாபதி அவரைப் பார்த்து இயல்பான குரலில் "பட்டரே...! கோயில் கும்பாபிஷேகத்தைப் பற்றி இன்னொரு நாளைக்குப் பேசலாம். நீங்க போய்ட்டு வாங்க..."

"அப்ப... நான் கிளம்பறேன்...! போன் பண்ணி சொல்லுங்க... நான் வர்றேன்."

பட்டர் எல்லோரையும் பார்த்து பொதுவாய் ஒரு கும்பிடைப் போட்டு விட்டு வாசலை நோக்கிப் போனார்.

சீதாபதி டாக்டரிடம் திரும்பினார்.

"என்ன... பஞ்சு... இந்த நேரத்துக்கு போலீஸோடு வந்து இருக்கே... ஹாஸ்பிட்டல்ல ஏதாவது பிரச்னையா...?"

சேது குறுக்கிட்டார். "உங்க ப்ரதர் டாக்டர் பஞ்சாபகேசன் ஒரு பெரிய பிரச்னையில் மாட்டிகிட்டார். அவரைக் கைது பண்ண வேண்டிய சூழ்நிலை. அவரைக் கைது பண்ண நான் முயற்சி செய்த போது அவர் உங்ககிட்டே பேசணும்ன்னு

சொன்னார். உங்க செல்போனுக்கு ட்ரை
பண்ணினார். நீங்க போனை ஸ்விட்ச் ஆஃப்
பண்ணியிருந்தீங்க. அதான் நேர்ல புறப்பட்டு
வந்தோம். தான் கைது செய்யப்படாமல் இருக்க
நீங்க உதவுவீங்கன்னு டாக்டர் நினைக்கிறார்.''
சேதுபதி இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

''பிரச்னை என்னான்னு மொதல்ல
சொல்லுங்க.'' சேது ஒரு ஐந்து நிமிடங்கள்
செலவழித்து மார்ச்சுவரி சம்பவத்தை சொல்லி
முடிக்க, சேதுபதி தன் தம்பியைப் பார்த்தார்.

''என்ன பஞ்சு... இன்ஸ்பெக்டர் சொல்றது
உண்மையா...?''

''இல்லேண்ணா... அப்பட்டமான பொய். அந்த
சூசை யார்கிட்டேயோ பணத்தை வாங்கிக்கிட்டு
என்னை மாட்டிவிடப் பார்க்கிறான். இன்ஸ்பெக்
டரோ என்னைக் கைது பண்ணத் துடிக்கிறார்.''
சேதுபதி சேதுவை ஏறிட்டார்.

''இன்ஸ்பெக்டர்...! என்னோட தம்பி
பஞ்சாபகேசனைப் பற்றி எனக்கு நல்லாத்
தெரியும். அவன் உயிர்களைக் காப்பாற்றத்தான்
டாக்டர் படிப்பு படிச்சானே தவிர உயிரை
வாங்கறதுக்காக அல்ல. இது யாரோ பண்ணின சதி.
அந்த சூசையை விசாரிக்கிற விதத்துல விசாரிச்சா
எல்லா உண்மைகளும் வெளியே வந்துடும்.''

''ஸாரி... ஸார்...! இப்ப சூசை கொடுத்
வாக்குமூலத்தை அடிப்படையாய் வெச்
டாக்டரைக் கைது பண்ணனும். அப்படி கைது
பண்ணாத பட்சத்தில் மேலதிகாரிகள் கேட்கி
கேள்விக்கு என்னால பதில் சொல்ல முடியாது.''

''ஓ.கே... இன்ஸ்பெக்டர்... உங்களை மேல
காரிகள் கேள்வி கேட்காதபடிக்கு பார்த்துட்ட
போதுமா?''

''போதும்...''

''இந்து அறநிலையத்துறை அமைச்சர் உமாப
எனக்கு வேண்டியவர். உங்களுடைய மேல
காரிகள்கிட்டே அவர் பேசினால் போதுமா?''
சேதுவின் விழிகள் விரிந்தது.

''ஸார்...! மினிஸ்டர் உமாபதியை உங்களுக்கு



தெரியுமா...?''

''தெரியுமாவது... கொஞ்சம் பின்னாடி திரும்பி
சுவர்ல மாட்டியிருக்கிற போட்டோவைப் பாருங்க
இன்ஸ்பெக்டர்.''

சேது திரும்பிப் பார்த்தார்.
அமைச்சர் உமாபதியும், சேதுபதியும் கட்டிப்
பிடித்து சிரிப்பு முகங்களோடு போஸ் கொடுத்து
இருந்தார்கள்.

''ஸார்...! மினிஸ்டர் ஒரு வார்த்தை
சொல்லிட்டா போதும்; நான் இந்த கேஸையே
வேற மாதிரி கொண்டு போயிடுவேன்.''

''இப்ப நான் பேசிடறேன்.'' சொன்ன சேதபதி
தன் செல்போனை எடுத்து எண்களைத் தட்ட,
மறுமுனையில் அமைச்சர் உமாபதியின் பி.ஏ.
பரமகுரு கிடைத்தார்.

''பரமு...! நான் சேதபதி... அமைச்சர்கிட்டே
பேசணும். ஃப்ரீயா இருக்காரா...?''

''ஒரு நிமிஷம்!''

சரியாய் இரண்டு நிமிஷ நேரத்திற்குப் பிறகு
அமைச்சரின் குரல் கேட்டது.
ஆர்க்கியாலஜி...

''என்னய்யா...
எப்படியிருக்கே?''

''உங்க தயவுல நல்லாயிருக்கேன்.''

''என்ன...! பொண்ணுக்கு மாப்பிள்ளை
பார்த்துட்டியா?''

''பார்த்துட்டிருக்கேன்.

''சீக்கிரம் பார்த்து கல்யாணப் பத்திரிகையைக்
குடய்யா... வயசாயிட்டே போகுதுல்ல...''

''பார்த்துடலாம்.''

''சரி... என்ன திடீர்ன்னு போன்?''

''ஒரு பிரச்னை...''

''சொல்லு...''

சேதபதி விபரமாய் சொன்னார். மறுமுனையில்
செவிமடுத்த அமைச்சர் பொறுமையாய் கேட்டு
விட்டு ''சேதபதி...! உன்னோட செல்போனை
அந்த இன்ஸ்பெக்டர்கிட்டே குடுய்யா!'' என்றார்.

''இதோ...!''

''சீதாபதி இன்ஸ்பெக்டரிடம் திரும்பினார். அமைச்சர் பேசறார்...!''

இன்ஸ்பெக்டர் பவ்யமாய் செல்போனை வாங்கி காதுக்கு ஒற்றினார். ''ஸார்...''

அமைச்சர் மறுமுனையில் சிரித்தார்.

''என்ன சேது... நாம போட்ட திட்டப்படிதான் எல்லாம் போயிட்டிருக்கு போலிருக்கு...''

''ஸார்...''

''தெரியும்...! நீ ஒண்ணும் பேசாதே... எஸ் ஸார்... எஸ் ஸார்ன்னு ரெண்டு தடவை சொல்லிட்டு செல்போனை சீதாபதிகிட்டே கொடுத்துடு....''

''எஸ்...ஸார்...''

''இன்னொரு வாட்டி 'எஸ்...ஸார்' சொல்லு.''

''எஸ்...ஸார்.''

''செல்போனைக் குடுத்துடு.''

சேது சீதாபதியிடம் செல்போனைக் கொடுத்தார்.

''மினிஸ்டர் உங்ககிட்டே பேசணுமாம்...''

சீதாபதி வாங்கி ''ஹலோ'' என்றார்.

''யோவ்... சீதாபதி...! அந்த இன்ஸ்பெக்டர் கிட்டே சொல்லிட்டேன். உன்னோட தம்பி டாக்டர் பஞ்சாபகேசனை கைது பண்ற நடவடிக்கை எதுவும் இருக்காது. கேஸ் தன்னோட ரூட்டை மாத்திகிட்டு வேற திசைக்குப் போயிடும். இப்ப உனக்கு சந்தோஷம்தானே?''

''ரொம்ப நன்றி..!''

''அந்த நன்றியை எல்லாம் உன்னோட வீட்லயே ஒரு ஓரமாய் வெச்சுட்டு இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே என்னை வந்து பாரு...''

''இதோ... புறப்பட்டேன்...'' சீதாபதி செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு பஞ்சாபகேசனை ஏறிட்டார்.

''பஞ்சு...! நீ வீட்டுக்கு போய் நிம்மதியாய் தூங்கு... இனிமே போலீஸ் தொந்தரவு உனக்கு இருக்காது. அமைச்சர் என்னை நேர்ல வரச் சொல்றார். போய் பேசிட்டு வந்துடறேன்.''

# 14

## விஷ்ணுவை வியக்க வைத்த .சில வரி அதிசயங்கள்:

இந்திய விண்வெளி விஞ்ஞானிகள் முதல் கட்டமாக நிலவை ஒரு மினி ஆராய்ச்சிக் கூடமாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்து இருக்கிறார்கள். அதாவது விண்வெளி ஓடங்களில் எரி பொருளாகப் பயன்படுவது ஹைட்ரஜன்தான். எனவே விண்கலங்களின் எரி பொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் இடமாக நிலவைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விண்வெளி ஆராய்ச்சிப் பயணத்தில் எரி பொருள் தீர்ந்து விடும்போது நிலவில் இறங்கி எரி பொருள் நிரப்பிக் கொள்ளப் போகிறார்கள். இதனால் மற்ற கிரகங்களைப் பற்றிய ஆராய்ச்சி யையும் வேகமாக செயல்படுத்த முடியும்.

சீதாபதி தானே காரை ட்ரைவ் செய்து அமைச்சரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த போது ராத்திரி பத்து மணி.

செக்யூரிட்டிகள் காரை உள்ளே அனுப்பி வைக்க - போர்டிகோவில் பி.ஏ. பரமகுரு எதிர் கொண்டார்.

''போங்க ஸார்.. மினிஸ்டர் உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கார். மாடியில் முதல் ரூம்.''

சீதாபதி போனார்.

ஹாலில் யாரும் இல்லை.

மாடிப்படிகளில் ஏறி முதல் அறைக்குள் நுழைய - அமைச்சர் கட்டிலில் லுங்கி பனியனோடு உட்கார்ந்து ஷிவாஸ் ரீகல் விஸ்கி பாட்டிலைக் காலி செய்து கொண்டிருந்தார். சீதாபதியைப் பார்த்ததும் மலர்ந்தார்.

''வாய்யா...! ஆர்க்கியாலஜி... இப்படி என் எதிர்ல வந்து உட்கார்.''

சீதாபதி தயக்கமாய் போய் உட்கார்ந்தார். பவ்யமான குரலில் சொன்னார். ''என்னோட தம்பியை ஒரு இக்கட்டான பிரச்னையிலிருந்து காப்பாத்தியிருக்கிங்க. ரொம்ப நன்றி...''

''நல்ல நேரத்துல நீ என்னை காண்டாக்ட் பண்ணினே... இல்லைன்னா உன்னோட தம்பியை போலீஸ் பிடியிலிருந்து காப்பாத்த முடியாமே போயிருக்கும். ஏன்னா இது பெரிய விவகாரம். தலை துண்டிக்கப்பட்ட ஒரு பொண்ணோட உடம்பு மார்ச்சுவரிக்குள்ளே இருந்ததுன்னு பப்ளிக்குக்கு தெரிஞ்சா கொந்தளிச்சுப் போயிடுவாங்க. லெட்டர் பேட் கட்சியிலிருந்து பிரதான எதிர்க்கட்சி வரை ஹாஸ்பிட்டலுக்கு முன்னாடி உட்கார்ந்து போராட்டம் நடத்துவாங்க..!''

''உண்மையிலேயே என்னோட தம்பி எந்தத் தப்பும் பண்ணலை. வேண்டாதவங்க யாரோ...''

''யோவ்... ஆர்க்கியாலஜி... உன்னோட டாக்டர் தம்பி யோக்யமானவன்தான். ஆனா சந்தர்ப்பமும் சூழ்நிலையும், சூசையோட வாக்கு மூலமும் டாக்டர்க்கு ஆப்பு அடிக்கிற மாதிரி இருக்கே... நான் மட்டும் இப்போ தலையிடாமே இருந்திருந்தேன்னு வைய்யி... உன்னோட தம்பியை லாக்கப்புல வெச்சு போலீஸ் 20-20 கிரிக்கெட்*விளையாடியிருப்பாங்க.''

''நீங்க பண்ணின இந்த உதவிக்காக நான் என்னோட நன்றியை...''

''யோவ்...! உன்னோட நன்றி யாருக்கய்யா வேணும்? நான் உன்கிட்டயிருந்து நன்றியை எதிர்பார்க்கலை.''

''பி... பின்னே..!''

''ஒரு பங்கு எதிர்பார்க்கிறேன்...''

''பங்கா...? என்ன பங்கு...!''

''என்ன ஆர்க்கியாலஜி... ஒண்ணும் தெரியாத அப்பாவி மாதிரி முகத்தை வெச்சுகிட்டு இவ்வளவு தத்ரூபமா நடிக்கிறே? நான் எதுல பங்கு கேட்கிறேன்னு நிஜமா உனக்குத் தெரியாதா..? அந்த ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலோட 100 கோடி



பகம் பொன் புதையல் பற்றின எல்லா விபரமும் உனக்குத் தெரியுமாமே...?''

அதிர்ந்து போனவராய் விழிகள் நிலை குத்தினார் சீதாபதி. அமைச்சர் விஷம் வழியும் வாயோடு சிரித்தார்.

''யோவ் சீதாபதி..! நான் இந்து அறநிலையத்துறை அமைச்சர். எனக்குத் தெரியாமே எந்த ஒரு கோயிலிலும் கற்பூர ஆராதனை கூட நடக்காது. ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலின் பகம் பொன் புதையல் பற்றி உனக்கும் ஜாயிண்ட் டைரக்டர் ராமநாதனுக்கும் மட்டுமே தெரியும்ன்னு நீ நினைச்சிட்டிருந்தா அது மகா தப்பு. ராமநாதன் இப்ப உயிரோடு இல்லை. அவன் உயிரோடு இருந்தபோது நான் ஊத்திக் கொடுத்த விஸ்கிக்கு ஆசைப்பட்டு ஐஸ்வர்யப் பெருமாள் கோயில் புதையலைப் பத்தி என்கிட்டே சொல்லிட்டான். அந்த நிமிஷத்திலிருந்தே நான் உன்னை வாட்ச் பண்ண ஆரம்பிச்சுட்டேன். உன் வீட்ல வேலை செய்யற சமையல்காரனும் தோட்டக்காரனும் உன் வீட்ல என்ன நடந்தாலும் அதை என் காதுக்குக் கொண்டு வந்துடுவாங்க. நீ உன்னோட பொண்ணை டி.வி. குழுவினரோடு ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலுக்கு அனுப்பி வெச்சதும், இன்ஃப்ரா ரெட் காமிராவைக் கொடுத்து விட்டதும் எனக்குத் தெரியும். அது மட்டுமில்லை; ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி உன் வீட்டுக்கு வந்துட்டுப் போன பட்டர், அவர் கொண்டு வந்த தாமிரப்பட்டயம், அது சம்பந்தமாய் நீ, உன்னோட பொண்ணு ஒவியா, அந்த பட்டர் பேசின விஷயங்களும் இப்போ கடச்சுட என்கிட்ட இருக்கு...''

சீதாபதி அதிர்ந்து போனவராய் எழுந்து அமைச்சரின் கைகளைப் பற்றிக் கொண்டார். குரல் பயத்தில் நடுங்கியது.

''இனிமே நான் எதையும் மறைக்க விரும்பலை. நீங்க சொன்னதெல்லாம் உண்மைதான். அந்தக் கோயில் புதையலை நானும் இப்போ டிபார்ட்மெண்ட்டில் டைரக்டராய் இருக்கிற திருஞானமும் சேர்ந்து எடுக்கத் திட்டம் போட்டு

வெச்சிருந்தோம். புதையல் எந்த இடத்தில் புதைக்கப்பட்டு இருக்குங்கிற கல்வெட்டுச் செய்தி கிடைக்கிறதுக்காக எத்தனையோ வழிகளில் முயற்சி பண்ணிப் பார்த்தும் கிடைக்காமல் போகவே புதையல் கைக்கு வரும் நாள் தள்ளிப் போயிட்டேயிருந்தது. அதிர்ஷ்டவசமா அந்த கோயில்ல இருக்கிற பட்டர் புதையல் எங்கே இருக்குங்கிற செய்தி அடங்கிய தாமிரப் பட்டயத்தைக் கொண்டு வந்தார்.''

''செய்தி அதுல இருந்ததா?''

''இருந்தது...''

''கோயிலோட எந்த இடத்துல அந்தப் புதையல் புதைக்கப்பட்டிருக்கு என்கிற விபரம் தெரிஞ்சுதா..?''

''அது வந்து...''

''இதோ பார் சீதாபதி..! இனிமேலும் நீ என்கிட்டே எதையாவது மறைக்க நினைச்சே... அதனோட விளைவுகள் ரொம்பவும் மோசமாய் இருக்கும். எனக்கு துரோகம் பண்ண நினைச்சவங்க யாரும் உயிரோடு இருக்க முடியாது. தலையில்லாமே ஒருத்தி மார்ச்சுவரிக்குள்ளே கிடந்தாளே அவ யாருன்னு நினைச்சே...? கொரட்டூர் கோமளான்னு ஒருத்தி. என்னோட பொண்டாட்டி செத்ததிலிருந்து அவதான் எனக்கு பொண்டாட்டி மாதிரி. வாரத்துக்கு ரெண்டு தடவை நடுராத்திரிக்கு மேல் வந்துட்டுப் போவா. போன வாரம் வரைக்கும் கழுதை ஒழுங்காய் இருந்தா. திடீர்ன்னு ஒரு பெரிய தொகை கேட்டு முரண்டு பண்ணினா. பணம் கேட்டதோடு மட்டும் நின்னுருந்தா பரவாயில்லை. எனக்கும் அவளுக்கும் இடையே இருக்கிற தொடர்பை வெளியே சொல்லிடுவேன்னு மிரட்டினா. கூலி ஆட்களை வெச்சு போட்டுத் தள்ளிட்டேன். பாடி யாரோடதுன்னு தெரியாமே இருக்கிறதுக்காக நம்ம ஆட்கள் தலையை எடுத்து பெட்ரோலை ஊத்தி பஸ்பம் பண்ணிட்டாங்க. அதுக்கப்புறம் எனக்கொரு யோசனை தோணிச்சு. உன்னை என்னோட வழிக்குக் கொண்டு வரணும்னா உன்னோட தம்பி டாக்டர் பஞ்சாபகேசனை இந்தக்



கொலையில் மாட்ட வெச்சா என்ன என்கிற யோசனைதான். யோசனையை நமக்கு வேண்டிய இன்ஸ்பெக்டர் சேது கிட்டே சொன்னேன். சேது ஹாஸ்பிட்டல் மார்ச்சுவரி ஆட்களைக் கையில் போட்டுக்கிட்டு டாக்டர்க்கு எதிரா கேஸைத் திருப்பி சூசையை அவர்க்கு எதிரா வாக்கு மூலம் கொடுக்க வெச்சு கைது பண்ற மாதிரி பாவ்லா காட்டி உன்னை என் கிட்ட வரவெச்சார். நீயும் வந்துட்டே..! இனிமே நீ எப்படி என்கிட்டே நடந்துக்கிறே என்பதைப் பொறுத்துத்தான் உன் டாக்டர் தம்பியோட தலைவிதி அமையும்.''

தலையில் இடி இறங்கிய தினுசில் அப்படியே ஸ்தம்பித்துப் போய் உமாபதியின் கால்களில் விழுந்தார் சீதாபதி. ''என் தம்பியை ஒண்ணும் பண்ணிடாதீங்க. அந்தப் புதையல் சம்பந்தப்பட்ட எல்லா விஷயத்தையும் நான் சொல்லிடறேன். எனக்கு நீங்க பங்கு கொடுக்காமே போனாலும் பரவாயில்லை.''

''யோவ்... சீதாபதி..! எனக்கு அந்த ஈவுபுத்தியெல்லாம் கிடையாது. புதையல்ல உனக்கும் பங்கு உண்டு... ஆனா இப்ப எனக்குத் தெரிய வேண்டிய உண்மை ஒண்ணே ஒண்ணுதான். இந்த புதையல் சமாச்சாரமெல்லாம் உண்மை தானா... இல்லை கட்டுக்கதையா...?''

''அக் மார்க் உண்மை...! அதிலும் பட்டர் கொண்டு வந்து கொடுத்த தாமிரப்பட்டயத்திலிருந்த செய்தியைப் பார்த்ததும் புதையல் கோயிலுக்குள்ளேதான் இருக்குங்கிற உண்மை சர்வ நிச்சயமாயிடுச்சு. பட்டயத்தில் இருந்த பாட்டோட வரிகளைப் படிச்சதுமே புதையல் எங்கே இருக்குங்கிற உண்மை எனக்கு உள்ளங்கை நெல்லி போல் தெரிஞ்சுடுச்சு. ஆனா அதை பட்டர் கிட்டே சொல்லலை...''

''அதாவது... அவரையும் நீ ஏமாத்த நினைச்சிருக்கே?''

''உண்மைதான்..! டைரக்டர் திருஞானத்துகிட்டே கலந்து பேசிட்டு அதுக்கப்புறம் பட்டர்கிட்டே சொல்லிக்கலாம்னு நினைச்சேன்.''

''ஆர்க்கியாலஜி..! நீ ஜகஜாலக்

இல்லாடிய்யா...! அரசியலுக்கு வந்துடய்யா... என்னோட லெவலுக்கு வந்துடலாம்...''

சீதாபதி கைகூப்பினார்.

''இந்த விஷயத்துல இனிமே நான் யாரையும் ஏமாத்த விரும்பலை. பட்டர் கொண்டு வந்து கொடுத்த தாமிரப்பட்டயத்தில் இருந்த பாடல்படி அந்தப் புதையல் எங்கே எந்த இடத்துல புதைக்கப்பட்டு இருக்குன்னு எனக்கு நல்லாவே தெரியும்...''

''சொல்லு கேட்போம்.''

''மொதல்ல பாடல் என்னான்னு சொல்லிடறேன். **கொடுத்து கெடுப்பானுக்கும், கெடுத்து கொடுப்பானுக்கும், நடுவில் பருந்து மூக்கின் எல்லைக்கு அப்பால், அஞ்சில் ஒன்றின் வழியினிலே, இருபத்து ஏழில் இருபத்து மூன்றாவது அதிபதியின் கீழே, ஆறடி இருட்டினிலே, காண்பின் கோடி கோடி பசும்பொன்... நவ மாணிக்கம்.**''

உமாபதி விஸ்கி வழியும் வாயோடு சிரித்தார்.

''என்னய்யா... பாட்டைக் கேட்டா ஏதோ விடுகதை போடற மாதிரி இருக்கு...!''

''இது கிட்டத்தட்ட ஒரு விடுகதை மாதிரிதான்! **கொடுத்து கெடுப்பான் குரு. கெடுத்து கொடுப்பான் சனி.** கோயிலில் இருக்கிற இந்த ரெண்டு சன்னதிகளுக்கு நடுவில் '**பருந்தின் மூக்கு**'ங்கிற வார்த்தையைக் குறிக்கிற கருடாழ்வார் சன்னதிக்கு அப்பால் **அஞ்சில் ஒன்றின் வழியினிலே சென்றால்...**''

''அது என்ன அஞ்சில் ஒன்று..?''

''பஞ்சபூதங்கள் அஞ்சு. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம். இந்த அஞ்சில் ஒன்றான நீர் நிரம்பிய கோயிலின் தீர்த்தக் குளம் வழியாகச் சென்றால் சக்கர வடிவத்தாலான உட் பிரகாரம் பார்வைக்குக் கிடைக்கும்.''

''சரி... அது என்ன... **இருபத்து ஏழில் இருபத்து மூன்றாவது அதிபதி...?**''

''அந்த சக்கர வடிவ உட்பிரகாரத்தில் 27 கல் ஜன்னல்கள் இருக்கு... கல்லையே ஜன்னல் மாதிரி



செதுக்கியிருப்பாங்க. அந்த இருபத்தேழு கல் ஜன்னல்களில் 23 வது அதிபதின்னு பாடலில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறதால அந்த **23 -வது ஜன்னலுக்குக் கீழே ஆறடி இருட்டினிலே** புதையல் இருக்கலாம்ங்கிறது என்னோட கணிப்பு''

''அது என்ன ஆறடி இருட்டு..?''

''பூமிக்கு கீழே ஆறடி பள்ளம் தோண்டணும் என்கிறது பாடலோட வரி.''

''புதையல் கிடைக்குமாய்யா?''

''கண்டிப்பா கிடைக்கும்.''

''சரி... அது என்ன 27 ஜன்னல் கணக்கு?''

''வான சாஸ்திரப்படி 27 நட்சத்திரங்கள். ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் ஒவ்வொரு ஜன்னல்.''

''27 ங்கிறது நட்சத்திரங்கள்தான்னு எப்படி அவ்வளவு உறுதியாய் சொல்றே... அந்த 27 கணக்கு வேறு எதுவாகவோ இருக்கக்கூடாதா என்ன...?''

''அப்படியிருக்க வழியில்லை...''

''ஏன்...?''

''அது நட்சத்திரங்களோட எண்ணிக்கைதான்னு உறுதிப்படுத்தற விதமாய் ஒவ்வொரு ஜன்னலுக்கும் கீழே அந்தந்த நட்சத்திர அதிபதியின் உருவம் ஒரு சிறிய சிலையாய் செதுக்கப்பட்டு இருக்கு...''

உமாபதி பிரமிப்பாய் பார்த்தார்.

''அந்தக் கோயிலோட ஒவ்வொரு அங்குலத்தையும் மனசுக்குள்ளே போட்டு பூட்டி வெச்சிருக்கேய்யா..! ம்..ம்... மேற்கொண்டு சொல்லு.''

சீதாபதி தொடர்ந்தார்.

''அந்த கணக்குப்படி பார்த்தா 27 நட்சத்திரங்களில் முதல் நட்சத்திரம் அஸ்வினி. இந்த நட்சத்திரத்துக்கு அதிபதி கேது பகவான். கேது பகவானின் சிலை எந்த ஜன்னலுக்கு கீழே இருக்கோ அதுதான் முதல் ஜன்னல். அந்த கணக்குப்படி வரிசையாய்ப் பார்த்தா 23 -வது நட்சத்திரம் அவிட்டம். அந்த நட்சத்திரத்துக்கு

அதிபதி செவ்வாய். செவ்வாயின் அம்சம் முருகன். முருகனோட சிலை அந்த 23 - வது ஜன்னலுக்கு கீழே இருக்கும். அந்த சிலைக்குக் கீழே உள்ள தரைப்பரப்பில் ஆறடி பள்ளம் தோண்டினால் புதையல் கண்டிப்பாய் இருக்கும்.''

''யோவ்... இதெல்லாம் நிஜமா...?''

'' சித்தர்கள் பித்தர்கள் இல்லை. அவங்க மகான்கள். அவங்க எழுதி வெச்ச பாடல் வரிகள் பொய்யாய்ப் போகாது...''

''சரி... நாளைக்குக் காலையில் அஞ்சு மணிக்கெல்லாம் நீ, நான், உன்னோட பொன்னு, அந்த பட்டர், திருஞானம் எல்லோரும் புறப்பட்டு ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலுக்குப் போறோம். அங்கே ரெண்டு நாள் தங்கியிருந்து வெளியே யார்க்கும் தெரியாதபடி புதையலைத் தோண்டி எடுக்கிறோம்... யார்க்காவது சந்தேகம் வந்து கேட்டா ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட் ரிசர்ச் பண்றதுக்காக குழி தோண்டியிருக்குன்னு சொல்லலாம்...''

''அது... வந்து...''

''என்னய்யா...''

''எனக்கென்னமோ பயமாயிருக்கு''

''எதுக்கய்யா பயம்...? நான் யாரு... இந்து அறநிலையத்துறை அமைச்சர். எவனாவது என் முன்னாடி விரல் நீட்டிப் பேச முடியுமா?''

''இருந்தாலும்...!''

''பயப்படாமே போய்யா...! கவர்ன்மெண்ட்டே என்னோட பாக்கெட்ல இருக்கும் போது ஏன்யா தொடை நடுங்கறே...?''

சீதாபதி தலையாட்டி விட்டு நகர்ந்தார்.

## 15

## விஷ்ணுவை வியக்க வைத்த சில வரி அதிசயங்கள்:

'தஞ்சை மாவட்டம் பேராவூரணியை அடுத்த குருவிக்கரம்பை அருகே 'மருங்கப்பள்ளம்' என்ற



ஊர் உள்ளது. ஒரு காலத்தில் அரிய மூலிகைகள் நிறைந்த காடாக இருந்ததால் 'மருந்து பள்ளம்' என்று அழைக்கப்பட்டு காலப் போக்கில் மருந்து பள்ளம் மருங்குப் பள்ளமாக மாறிவிட்டது. இங்கு பழமை வாய்ந்த ஔசத புரீஸ்வரர் கோயில் உள்ளது. (ஔசதம் என்றால் மருந்து என்று பொருள்.) சோழ மன்னரால் கட்டப்பட்ட இக் கோயிலின் ராஜகோபுர கல்வெட்டில் ஒரு பாடல் இருக்கிறது. இந்தப் பாடலில் உள்ள வார்த்தைகளைப் புரிந்து கொண்டு தேடினால் கோயிலில் புதைந்துள்ள பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொற்காசுகள் கிடைக்குமாம்.

ஐஸ்வர்யப் பெருமாள் கோயிலின் ராஜ கோபுரம் அருகே அந்த அறிவிப்பு பலகை கொட்டை எழுத்துக்களோடு தெரிந்தது.

புதை பொருள் ஆராய்ச்சிக் கழகம் இந்தக் கோயிலில் சில ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு இருப்பதால் இரண்டு நாட்களுக்கு பக்தர்கள் யார்க்கும் உள்ளே வர அனுமதியில்லை. அத்து மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவண்,

புதை பொருள் ஆராய்ச்சித்துறை.

இந்த அறிவிப்பின் காரணமாக கோயில் வெறிச்சோடிப் போயிருக்க உள்ளே சக்கர மண்டபத்தில் 23 - வது கல் ஜன்னலுக்குக் கீழே அந்தக் குழி வேகவேகமாய் தோண்டப்பட்டுக் கொண்டு இருந்தது.

மொத்தம் பத்து ஆட்கள் நீண்ட கடப்பாரை களுடன் செயல்பட்டார்கள். ஆறடிக்கு ஆறடி என்ற அளவில் பெரிய சதுரக்குழி.

குழியைச் சுற்றிப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமைச்சர் உமாபதி, சீதாபதி, திருஞானம், ஒலியா உட்கார்ந்திருக்க, பட்டர் கலவர முகத்தோடு மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டியபடி நின்றிருந்தார்.

உமாபதி கேட்டார்.

''இப்ப எத்தனை அடி தோண்டியிருக்காங்க?''

''நாலடி...'' என்றார் சேனாபதி.

''இன்னும் ரெண்டடி தோண்டினா புதையல் கிடைச்சுடுமா?''

''கிடைச்சுடும்''

''ஒரு வேளை கிடைக்கலைன்னா..?''

''கண்டிப்பா கிடைக்கும்... சித்தர் வாக்கு சுத்தம்னு சொல்லுவாங்க...''

''பார்க்கலாம்... இன்னும் ரெண்டடி தோண்டினா நாம புத்திசாலிகளா... பைத்தியக்காரங்களான்னு தெரிஞ்சுடும்..! பட்டரே!''

''அய்யா...!''

''பக்கத்துல இளநீர் கிடைக்குமா?''

''கிடைக்கும்ய்யா...''

''போய் வாங்கிட்டு வாய்யா...''

பட்டர் கோயிலுக்கு வெளியே ஓடிப்போய் சாலையோரமாய் இருந்த இளநீர் கடையில் இளநீர்களை வெட்டிக் கொண்டு வந்தார்.

எல்லோரும் இளநீர் சாப்பிட்டு முடித்த விநாடி கடப்பாரையால் தோண்டிக் கொண்டிருந்த கூலியாட்களில் ஒருவன் குரல் கொடுத்தான்.

''அ.....அ... அய்யா...! இங்கே வந்து பாருங்க... மண்ணுக்குள்ளே ஏதோ பெட்டி மாதிரி தெரியுது..''

எல்லோரும் ஆர்வமாய் எழுந்து ஓடிப் போய்ப் பார்த்தார்கள்.

நான்கடிக்கு நான்கடி என்ற அளவில் ஒரு பெரிய பெட்டியின் விளிம்புகள் மண் மூடிய நிலையில் தெரிந்தது.

உமாபதி குரல் கொடுத்தார்.

''ம்... தோண்டுங்க... தோண்டி அந்தப் பெட்டியை வெளியே எடுங்க...!''

ஆட்கள் புயல் வேகத்தில் செயல்பட்டார்கள்.

அடுத்த பத்தாவது நிமிடம்.



அந்தப் பெட்டி அழகிய வேலைப்பாடுகளுடன் மண் அப்பிய நிலையில் மேலே வந்தது.

சிரமத்தோடு திறக்கப்பட்டது.

உள்ளே.

குவியல் குவியலாய் பொற்காசுகள். பொற்காசுகளுக்கு நடுவில் மாதுளை முத்துக்கள் போல் நவமணிகள்.

எல்லோருடைய பார்வைகளும் பல விநாடி நேரத்துக்கு உறைந்து போயிற்று.

அதிர்ச்சியிலிருந்து முதலில் மீண்டவர் உமாபதி. தன் செல்போனை எடுத்து எண்களை அழுத்தினார். பேசினார்.

''சாரதி...! நான் முதலமைச்சர்கிட்டே பேசணும். ஒரு அவசர செய்தி. இணைப்பு கிடைக்குமா?''

சாரதி சிரித்தார்.

''உங்க போனுக்காகத்தான் சி.எம். வெயிட் பண்ணிட்டிருக்கார். பேசுங்க.''

அடுத்த சில விநாடிகளில் முதலமைச்சரின் குரல் கேட்டது. ''என்ன உமாபதி..!''

''புதையல் பொய்யில்லை. உண்மை. ஒரு பழங்கால பேழை நிறைய தங்கக் காசுகள். ரத்தினங்கள். இந்தக் கோயிலில் குடியிருக்கிறவர் உண்மையிலேயே ஐஸ்வர்யப் பெருமாள்தான்.''

''பிரஸ்ஸுக்கும் டி.வி.க்கும் நியூஸ் கொடுத்துடலாமா?''

''தாராளமா...! மீடியா பீப்பிளுக்காக நான் இங்கே வெயிட் பண்ணிட்டிருக்கேன்.''

''புதையலோட மதிப்பு எவ்வளவு இருக்கும்?''

''என்னால கணிக்க முடியலை. நிச்சயமாய் பல நூறு கோடிகளைத் தாண்டும்... எவ்வளவு இருந்தாலும் மாநில வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்... ஒரு மணி நேரம் கழிச்சு மறுபடியும் உங்களைத் தொடர்பு கொள்றேன்.

இப்போ பெட்டியைக் கோயிலுக்குள்ளேயே பத்திரமான இடத்துக்குக் கொண்டு போகணும். உடனடியா ஸ்பாட்டுக்கு போலீஸ் வந்தா பரவாயில்லை.''

''போலீஸ''க்கு நான் ஏற்பாடு பண்றேன்!''

உமாபதி செல்போனை அணைக்க - பக்கத்தில் சீதாபதி திகைப்பாய் அவரைப் பார்த்தார். குரலைத் தாழ்த்தினார்.

''என்ன இது...?''

''எது..?''

''புதையல் கிடைச்ச விஷயத்தை சி.எம்.க்கு போன் பண்ணி சொல்றீங்க?''

''அவர்கிட்டதானே சொல்லணும்?''

''அவர்.. சரி..! டி.வி. ப்ரஸ் பீப்பிளுக்கு சொன்னா அடுத்த நிமிஷம் தமிழ்நாடு பூராவும் தெரிஞ்சுடுமே?''

''தெரியட்டுமே!'' சொன்ன உமாபதி சிரித்தார்.

''சீதாபதி...! நீ என்னைத் தப்பா புரிஞ்சுகிட்டே..! இந்தப் புதையலை நான் எடுத்துகிட்டு உங்களுக்கெல்லாம் பங்கு தருவேன்னு நினைச்சிட்டீங்க. என்னோட எண்ணம் - அது இல்லை. புதையல் பற்றிய உண்மையைத் தெரிஞ்சவன் நீ ஒருத்தன்தான். உன்கிட்டயிருந்து உண்மையை நேரடியா வாங்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். உன்னை வழிக்கு கொண்டு வரணும்ன்னா உனக்கு ஏதாவது ஒரு பிரச்னையை உண்டாக்கணும்ன்னு நினைச்சேன். உன்னோட டாக்டர் தம்பிக்கு போலீஸ் மூலமா டார்ச்சர் கொடுத்து உன்னை என்னோட வழிக்கு கொண்டு வந்தேன்...!''

''அப்படீன்னா நீங்க பண்ணின அந்தக் கொலை..? கொரட்டூர் கோமளா..?''

உமாபதி சிரித்தார்.

''அப்படி ஒரு பொண்ணே இல்லாத போது கொலை எப்படி நடக்கும்?''

''தலையில்லாத ஒரு பொண்ணோட உடல்



மார்ச்சுவரியில் இருந்தது எப்படி...?''

''உன்னோட தம்பியைக் கொலைப் பிரச்னையில் சிக்க வைக்கிறதுக்காக செங்கல்பட்டு ஹாஸ்பிட்டல் மார்ச்சுவரியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு பொண்ணோட உடல். ரயிலில் அடிபட்டு தலை துண்டாகிப் போன பொண்ணின் உடல் அது...!''

சீதாபதி பெருமூச்சுவிட்டார்.

''நீங்க இப்படியெல்லாம் என்னைப் பந்தாடறதுக்குப் பதிலாய் நேரிடையாவே கூப்பிட்டு பேசியிருக்கலாமே?''

''அப்படிப் பேசியிருந்தா நீ பிடி குடுத்து பேசமாட்டே...! மயிலே மயிலே இறகு போடுன்னு சொன்னா அது போடுமா...? போடாது. நமக்கு மயிலிறகு வேணும்ன்னா பிடுங்கினாத்தான் உண்டு...! பிடுங்கிட்டேன். ரொம்பவும் வலிக்குதா ஆர்க்கியாலஜி?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரை வலி இருந்தது. இப்ப சுத்தமாய் இல்லை..!'' சீதாபதி சொல்லிவிட்டு சிரித்தார்.

*****

முற்றும்.